தேவியின் கண்மணி

ரூ.15

லட்சுமி பிரபா



# என்னுயிரில் கலந்தாய்...!

## அழகோ அழகு



# நரை போக்கலாமே?

முன்காலத்தில் நரைமுடி என்பது 30-40 வயதிற்கு மேல்தான் எட்டிப்பார்க்கும். ஆனால் தற்போதைய இயந்திர உலகத்தில் டீன்-ஏஜ் பருவத்திலேயே கூந்தல் நரைத்து, முதுமைத் தோற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. இத்தகைய நரை முடி சுற்றுச்சூழல் மாசுபாடு, அதிகளவு மன அழுத்தம், ஆரோக்கியமற்ற உணவுப்பழக்க வழக்கம் போன்றவற்றால் இளம்வயதிலேயே ஏற்பட்டு விடுகிறது. நரைமுடியை போக்குவது சற்று கடினமானதாக இருந்தாலும் முறையாக நம்பிக்கையுடன் பராமரித்து வந்தால், நிச்சயம் பலன் கிட்டும். நரைத்த முடியை கருமையாக்க சில இயற்கை பொருட்கள் உதவும். அதனை கொண்டு எப்படி பலன் பெறலாம் என்பதை தெரிந்து கொண்டு முயற்சித்து பாருங்கள்.



## இஞ்சி:

இஞ்சியைத் துருவி, ஊற வைத்து பேஸ்ட் செய்து, அதனை நரை முடியின் மீது தடவி, 10 நிமிடம் ஊற வைத்து குளித்தால், நரைமுடி பிரச்சினையில் இருந்து விடுபடலாம். குறிப்பாக இந்த முறையை வாரந்தோறும் தொடர்ச்சியாக செய்ய வேண்டும்.



## செம்பருத்தி :

வாரத்திற்கு ஒரு முறை செம்பருத்தியின் இலை மற்றும் பூவை அரைத்து, அதனை தலையில்தடவி, ½ மணிநேரம் ஊற வைத்து குளித்தாலும் நரைமுடி மறைய ஆரம்பிக்கும்.



## தேங்காய் எண்ணெய்:

சுத்தமான தேங்காய் எண்ணெயில் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து, அதனை தலைக்கு மசாஜ் செய்து 10 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் அலச வேண்டும்.



## ஹென்னா/ மருதாணி பொடி:

விளக்கெண்ணெய் மற்றும் எலுமிச்சை சாற்றினை ஒன்றாக கலந்து, அதில் ஹென்னா பொடியை தூவி கெட்டியில்லாதவாறு நன்கு கலந்து, கூந்தல் மற்றும் மயிர்க்கால்களில்தடவி, 1 மணிநேரம் ஊற வைத்து, பின் சிகைக்காய் போட்டு குளித்து வந்தால், நரைமுடி மறையும். அதிலும் இதனை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை செய்து வருவது நல்லது.

## தயிர்:

தயிர் மற்றும் ஹென்னாவை சரிசமமாக எடுத்து கலந்து கொண்டு, அதனை நரைமுடியின் மீது தடவி ஊற வைத்து குளிக்க வேண்டும். இதனை வாரத்திற்கு ஒரு முறை செய்தால் நரை முடி மறையும்.





## வெங்காயம்:

வெங்காயத்தை சாறு எடுத்து, அதனை தலையில் தடவி ஊற வைத்து குளித்தால், முடியானது அதன் இயற்கை நிறத்தைப் பெறும். அதிலும் இதனை வாரத்திற்கு ஒரு முறை செய்ய வேண்டும்.

## மிளகு:

நீரில் சிறிது மிளகு சேர்த்து நன்கு கொதிக்க விட்டு, அந்த நீரை கூந்தலில் ஊற்றி மசாஜ் செய்து, பின் கூந்தலை அலச வேண்டும்.





## நெல்லிக்காய்:

கூந்தலை கருமையாக்க உதவும் பொருட்களில் முக்கியமானது நெல்லிக்காய். எனவே தினமும் நெல்லிக்காயை சாப்பிட்டு வந்தாலோ அல்லது நெல்லிக்காய் எண்ணெயை தலைக்கு தடவி வந்தாலோ, நரைமுடி பிரச்சினையில் இருந்து விடு பெறலாம்.



# என்னுயிரில் கலந்தாய்...!

தூரத்து மலைத் தொடர்கள் எல்லாம்... யாரோ வேலை மெனக் கெட்டு பாலிதீன் பைகளில் போட்டுக் கட்டி வைத்தாற் போன்று... பனியில் மங்கலாய் தெரிந்தன.

மேட்டுப் பகுதியிலிருந்த அந்த சிறிய வீட்டிலிருந்து வெளிப்பட்ட கஸ்தூரி... தூரத்தில் தெரிந்த மலைத் தொடர்களின் மீது பார்வையைப் பதித்தாள். அதிகாலைக் குளிர் ஜிவ்வென்று உயிர் வரை ஊடுருவியது. இரண்டு உள்ளங்கைகளையும் பரபரவென்று தேய்த்துதனது கன்னங்க ளில் சூடாய் ஒற்றிக் கொண்டவள்... ஆழ மூச்செடுத்தாள்

அருகிலிருந்த பன்னீர் புஷ்ப மரத்தில் பூத்துக் குலுங்கிய பன்னீர்ப் பூக்களின் சுகந்த நறுமணம் சுதந்திரமாய்... கஸ்தூரியின் அழகிய நாசியைப் பதம் பார்த்தது. குனிந்து கீழே உதிர்ந்து கிடந்த பூக்களிலி ருந்து ஒற்றைப் பூவை எடுத்து உள்ளங்கையில் வைத்து மிருதுவாய் அதை வருடிப் பார்த்தாள்.

மனதில் மலை போன்று பாரம் அழுத்திக் கொண்டிருந்தாலும் அவளையும் அறியாமல்... இயற்கையின் அழகில் லயித்துத் தான் போனாள்.

'லொக்... லொக்' என்ற இருமல் சப்தம் அவளைக் கலைத்தது.

அக்கா மனோகரி எழுந்து விட்டாள் போலும்! நெஞ்சம் கனக்க.. பெருமூச்செறிந்த படி வாடிய முகத்துடன் மெல்ல வீட்டினுள் புகுந் தாள்.

இரவெல்லாம் தூங்காமல் கஸ்தூரி புரண்டு புரண்டு தான் படுத்துக் கொண்டிருந்தாள். அவள் மட்டுமல்ல... அக்கா மனோகரியின் வரு

## லட்சுமி பிரபா

கையால் வீட்டில் உள்ள அனைவருக்குமே நிம்மதி பறிபோய் விட்டிருந்தது.

அக்கா பாவம், வாயும் வயிறுமாக இருக்கிறாள். ஆறு மாத கர்ப்பிணிப் பெண் சதா கதறிக் கொண்டு இருந்தால்...?

அவளுக்கும் அவளது வயிற்றில் வளரும் குழந்தைக்கும் நல்லதல்லவே? அவளைப் பார்த்து அம்மாவும், அப்பாவும் கலங்கி வருந்துகிறார்கள்.

''பி.ஈ. படித்து முடித்து டிஸ்டிங்கஷனில் தேறி நான் வந்திருக்கிறேன். இந்த சந்தோஷம் யார் மனதிலும் ஒட்டாமல் போய் விட்டதே? கண்ணுக்கு முன் மிகப் பெரிய பிரச்சினை பூதாகரமாக வளர்ந்து... அனைவரையும் கவலைக் கடலில் மூழ்கடித்திருக்கும் போது... இந்த விஷயத்தைப் பற்றிப் பேசி சந்தோஷப் படத்தான் முடியுமா?

கவலைப்பட்டுக் கொண்டே இருந்தால்... அதற்கு என்ன தான் தீர்வு? பிரச்சனையைத் தீர்க்க என்ன வழி? என்று யோசித்து முடிவு எடுக்கலாமே...?'' கஸ்தூரிக்கு மனம் தாளவில்லை. இரு தினங்களுக்கு முன் அம்மா கனகத்திடம் கேட்டு விட்டாள்.

''என்னம்மா இது? அக்காவைப் பார்த்து நீங்களும் சதா அழுதுட்டே இருந்தா என்ன பிரயோஜனம்? அழுதா பிரச்சினை தீர்ந்திடுமா அம்மா?

அவளோட பிரச்சனைக்கு ஒரு தீர்வு கண்டு பிடிச்சு... அக்காவோட கண்ணீரைத் துடைக்கிறதுக்கு வேற வழியே இல்லையாம்மா?''

''பிரச்சினை என்னன்னு உனக்கே தெரியுமில்ல கஸ்தூரி?''

''பணம் தான் பிரச்சினை... ரெண்டு லட்ச ரூபாய் நம்ம கையில இல்லையே? அது இருந்தா மனோகரியோட கவலை தீர்ந்துடுமே...'' என்றாள் கனகம்.

''அத்தான் தப்பு பண்ணிட்டாரும்மா... நண்பனுக்காக சூரிட்டி கையெழுத்து போட்டு பணம் வாங்கி குடுத்தது மகா தப்பு...! இப்போ அந்த நண்பன் பட்டை நாமம் சாத்திட்டு கம்பி நீட்டிட்டான். பணம் குடுத்த மனுஷன் சூரிட்டி கையெழுத்து போட்ட அத்தானைப் பிடிச்சுக்கிட்டான். ரெண்டு வாரத்துல பணத்தை வட்டியும் முதலுமாக கட்டலைன்னா... கேஸ் போட்டு உள்ளே தள்ளிடுவேன்'னு மிரட்டிட்டுப் போயிட்டான்.

இவ அடியெடுத்து வச்ச நேரம் தான்... உன்னை இப்படி கிரகம் பிடிச்சு ஆட்டுது'ன்னு மாமியார் நம்ம அக்காவை வாய்க்கு வந்தபடி பேசினாங்க...

ரெண்டு வாரத்துக்குள்ளே பணத்தைக் கட்டலைன்னா... என் மானம் போயிடும். ஜெயிலுக்குப் போற நிலைமை வந்தா... நான் உயிரோட இருக்க மாட்டேன். விஷத்தைக் குடிச்சுட்டு செத்துடுவேன்'னு அத்தான் கண் கலங்கினதும்... மனோகரி அழுதுக்கிட்டே இங்க கிளம்பி வந்துட்டா...

அத்தானால பணத்தைப் புரட்ட முடியாது. அவரு ஏடாகூடமா ஏதாச்சும் செய்துக்கிட்டாருன்னா.... நானும் உயிரோட இருக்க மாட்டேன்'னு... புலம்பிட்டு இருக்கா... சீக்கிரமா ஏதாவது ஏற்பாடு செஞ்சாத் தானே நமக்கு நல்லது. இப்படியே அழுதுட்டிருந்தா எப்படி?''

கயிற்று கட்டிலில் அமர்ந்திருந்த அப்பா காசி தனது துண்டை உதறிப் போட்டுக் கொண்டு எழுந்தார்.

''கஸ்தூரி சொல்றது தான் சரி...! ஊருல நம்ம சொந்தக்காரங்க கிட்டே போயி... பண உதவி கேட்டுப் பார்க்கிறேன்... யாரு உதவப் போறாங்க? ஒரு முயற்சி பண்ணிப் பார்க்க வேண்டியது தான்...'' என்றார்.

''அப்பா! நமக்கு மூணு செண்டு நிலம் இருக்கே? அதை வித்துட்டா என்ன? யாரும் நமக்கு கடன் தராமபோனா... என்ன செய்றது?'' நிதானமாய் கேட்டாள் கஸ்தூரி.

''நிலத்தை விக்கிறதா? அது தப்பும்மா'' பதறினார் காசி.

''அவசரத்துக்கு நமக்கு வேற வழி இல்லைன்னா என்ன பண்ண முடியும்? அக்காவோட வாழ்க்கையை விட... அந்த நிலம் பெரிசில்லைப்பா...''

''வாஸ்தவம் தான்... மனோகரி தான் நமக்கு முக்கியம்... ஆனா அந்த

**''ஏழேழுஜென்மம் எடுத்தாலும் நான்தான்உங்களுக்குமனைவியாக வரவேணும்''.**

**''இதனைத் தான் ஏழேழு ஜென்மசனினு சொல்வாங்களோ!''**

**-குஞ்சன்விளை ரவி.**



நிலம் முதலாளி தந்ததாச்சே? என்னோட இருபது வருட கால விசுவா சத்தைப் பார்த்துட்டு... அவருமனசாரப் பாராட்டி பரிசா குடுத்தாரே? அதை எப்படி விக்கிறது? அதுவுமில்லாம... இந்த குறுகின காலத்துக் குள்ளே அதை வித்து காசாக்கவும் முடியாது...''

''புரியுதுப்பா... வலிய போனா கிழவிங்கிற கதையா... நம்ம அவச ரத்தைப் புரிஞ்சுக்கிட்டு... அடி மாட்டு விலைக்கு தான் அதைக் கேட் பாங்க... அதுக்கு தானேப்பா தயங்கறீங்க?''

''ஆமா கஸ்தூரி!'' பெரு மூச்சு விட்டார் காசி.

''அப்பா! நம்ம முதலாளி கிட்டேயே உதவி கேட்டுப் பார்த்தா என்ன?''

''அது நல்லாயிருக்காது கஸ்தூரி''

கஸ்தூரி புரிந்து கொண்டாள்.

கஸ்தூரி படித்து முடித்து இன்ஜினீயராகி வந்திருக்கிறாள். முதலாளி சதாசிவம் தான் இவளைப் படிக்க வைத்தார்.

அது மட்டுமா?

அக்கா மனோகரியும் அவரது தயவில் தானே கரையேறி இருக்கி றாள்.

அவளது கல்யாணச் செலவிற்கு பணம் தந்து உதவினாரே?

முதலாளி சதாசிவத்தின் மனைவி அம்பிகை ஐந்து வருடங்களுக்கு முன்.. வரலட்சுமி நோன்பு இருந்து சுமங்கலி பூஜை செய்து விட்டு... அன்றிரவே தூக்கத்தில் மாரடைப்பு ஏற்பட்டு கண்ணை மூடி விட்டிருந் தார்.

வெள்ளிக்கிழமை... அதுவும் சுமங்கலி பூஜை அன்றே சுமங்கலியாக அம்பிகை போய் சேர்ந்ததால்... வருடந்தோறும் திருமணமாகும் பெண் களுக்கு தனது செலவிலேயே கூரைப் புடவையும் தங்கத் தாலியும் சீர் வரிசையும் நிறைவாகச் செய்து வந்தார் சதாசிவம்.

தனது எஸ்டேட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களின் மகள்க ளுக்கு மட்டுமே அந்த சலுகையை சிதாசிவம் செய்வது வழக்கம்...!

மனோகரிக்கு கூரைப்புடவை, தங்கத்தாலி சீர் வரிசை மட்டு மல்ல...!

காசியின் விசுவாசத்தை மனதில் கொண்டு ''உன் மூத்த மகளோட கல்யாணச் செலவை நானே ஏத்துக்கிறேன் காசி அம்பிகைக்கு... ஏழைப் பொண்ணுகளோட கல்யாணச் செலவுக்கு பண உதவி பண் றதுன்னா... ரொம்பவே பிடிக்கும். அவளோட ஆத்மா சாந்தி அடை யணும். அதனால தான் இதைச் செய்யறேன்...'' என்று சதாசிவம்

கூறிய போது... காசி கண் கலங்க கையெடுத்து கும்பிட்டார்.

காசிக்கு மட்டுமல்ல... அவரது குடும்பத்தில் உள்ள அனைவருக்குமே... சதாசிவம் ஒரு தெய்வமாகத் தான் தெரிந்தார்.

மனோகரியின் திருமணம் இதே எஸ்டேட்டில் மலைக்கோவிலில் உள்ள வன துர்க்கை ஆலயத்தில் தான் நடந்தது. கோவில் மண்டபத்தில் தாலி கட்டி முடிந்ததும்... மணமக்களை வாழ்த்த வந்து விட்டிருந்தார் சதாசிவம். காலில் விழுந்த மணமக்களை அட்சதை தூவி மனமார வாழ்த்தினார்.

காசிக்கு சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை.

''ஏ புள்ளே! ஐயா அவுக எத்தனையோ பேத்துக்கு தங்கத் தாலியும், கூரைப் புடவையும் எடுத்துக் குடுத்து இருக்காரு. இது வரைக்கும் எனக்குத் தெரிஞ்சு முதலாளியம்மா இறந்த பிறகு... எந்தக் கல்யாணத்துக்கும் இவரு போனது இல்ல... நம்ம மகளை வாழ்த்தறதுக்கு தெய்வமே நேரில வந்தாப்பல இருக்கு புள்ளே....!''

தழுதழுத்தபடி சத்தமாய் அவர் சொன்னதைக் கேட்டதும்... கஸ்தூரிக்கு மனம் நெகிழ்ந்தது. மணமக்கள் வணங்கி எழுந்ததும்... சட்டென்று கஸ்தூரி அவரது பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள்.

அந்தக் காலத்து ரெங்காராவைப் போன்று... கம்பீரமாக பணக்காரக் களையுடன் காண்போர் கையெடுத்து கும்டும் படியான தோற்றத்துடன் நின்றவரை... நீர் கோர்த்த விழிகளுடன் தயக்கத்துடன் ஏறிட்டாள் கஸ்தூரி.

''உன் அக்கா கல்யாணப் பொண்ணு ஆசீர்வாதம் வாங்க கால்லே விழுந்தா... நீ என்னத்துக்கு அநாவசியமா...'' அவர் பேசி முடிப்பதற்குள் இடைமறித்தாள் கஸ்தூரி.

''நன்றிங்க ஐயா! என்னைப் படிக்க வச்சுட்டிருக்கிறவரும் நீங்கதான்... எங்க அக்கா இன்னிக்கு இந்த மணக்கோலத்துல மாலையும் கழுத்துமா நிக்கிறாளே...? அதுவும் உங்க தயவால் தானேங்க ஐயா? இந்த நன்றியை நான் என்னிக்குமே... இல்லல்ல ஈரேழு ஜென்மத்துக்கும் மறக்க மாட்டேன் ஐயா!

கம்பம், குமுளி,போடி, போடி மெட்டு, தேனி, கண்டமனூர், சுருளி, மயிலாடும்பாறை, நெடுங்குண்டம்னு நிறைய இடங்கள்லே... உங்களுக்கு தேயிலைத் தோட்டம், காப்பித் தோட்டம், ஏலக்காய், முந்திரி கிராம்பு தோட்டங்களும், நிறுவனங்களும் ஏகப்பட்டது இருக்கு..

இவ்ளோ பெரிய கோடீஸ்வரர், தொழிலதிபர் எங்க வீட்டுக் கல்யாணத்துக்கு வந்தது... எவ்ளோ பெரிய விஷயம்? எங்களுக்க்கு இது எவ்

வளவு பெரிய பாக்கியம்? உண்மையிலேயே நீங்க வந்ததுக்கு நாங்க ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும் ஐயா!''

''நீ சொன்னே இல்ல? எத்தனையோ நிறுவனங்களும் தோட்டங் களும் இருக்குன்னு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருந்தாலும்... காசி மாதிரி உத்தமமான விசுவாசமான உழைப்பாளியைப் பார்க்கிறது அபூர்வம்! நான் எப்பவுமே இப்படித்தான்... அபூர்வமான விஷயங்க ளுக்கு மதிப்பு குடுக்கிறது என்னோட வழக்கம்...'' என்று பேசியபடியே அவளை ஏற இறங்க நோட்டமிட்டார் சதாசிவம்.

அந்த கணத்தில் அவரது விழிகள் கூர்மையடைந்தது... மின்னல் வெட்டியது போல் ஒரு பளபளப்பு தோன்றி மறைந்ததை கவனித்தாள் கஸ்தூரி.

''என்னம்மா மவுனமாயிட்டே?'' துண்டை உதறிப் போட்டபடி அவளருகில் காசி வந்து நின்றதும்... சட்டென்று அவளது நினைவுச் ச ங்கிலி அறுபட்டது

''எ...என்னப்பா கேட் டீங்க?'' திகைப்புடன் அப் பாவை ஏறிட்டாள்.

''நீயும் கவலைப்பட ஆரம் பிச்சுட்டியா? சரி... நான் இப் பவே ஊருக்குப் போயி... நாலு பேத்தைப் பார்த்து உதவி கேட்கிறேன். நீ தைரி யமா இரு... அக்காவுக்கும் அம்மாவுக்கும் நீ தானே ஆறு தல் சொல்லணும்? படிச்ச பொண்ணு நீ! நீயே மனசைத் தளர விடலாமா? உன் யோச னைப் படி தான்... நான் இப்ப கிளம்பிப் போறேன்...''

''சரிப்பா... பாத்து பத்தி ரமா போயிட்டு வாங்க... பணம் கிடைச்சதுன்னா... ஜாக்கிரதையா கவனமா எடுத்துட்டு வாங்கப்பா...''

தலையாட்டியபடி

''புருசன் கோவிச்சுக்கிட்டு வீட்டைவிட்டு ஓடுற அளவுக்கா அடிப்பாங்க...? நல்ல பொண்ணு'டி நீ...?''

''புரியாமல் பேசாதேம்மா... நீ, அப்பாவை அடிக்கிறதுல பாதி கூட இருக்காதும்மா நான் அடிச்சது!''

-சீர்காழி வி.ரேவதி.



வீட்டை விட்டு வெளியேறினார் காசி. அவரது உருவம் தூரத்தில் ஒரு புள்ளியாகி தேய்ந்து மறையும் வரை... பார்த்துக் கொண்டிருந்து விட்டு மெல்ல நகர்ந்தாள் கஸ்தூரி.

அப்பா ஊருக்குச் சென்று இரு தினங்களாகி விட்டிருந்தன. அவரிடமிருந்து ஒரு தகவலும் வராததால்... இரவெல்லாம் மூவருமே தூங்கவில்லை.

''கஸ்தூரி! மணி என்னாச்சு?'' இலேசாக இருமியபடி கேட்டாள் மனோகரி.

சுவர்க்கடிகாரத்தில் பேட்டரி தீர்ந்து விட்டிருந்ததால் ஒரு வாரத்திற்கு மேலாக ஓடாமல் நின்று கிடந்தது.

தனது செல் போனை எடுத்து ஆன் செய்து ''மணி ஆறாகப் போகுதுக்கா...'' என்றவள் அடுக்களைக்குள் புகுந்தாள்.

சுக்கு, மிளகைத் தட்டி... பனைவெல்லத்தைப் போட்டு வடிகட்டி வரக்காப்பி தயாரித்துக் கொண்டு வந்து அம்மாவுக்கும், மனோகரிக்கும் தந்து விட்டு... மெல்ல அமர்ந்தாள்.

''உங்கப்பா கிட்டேயிருந்து ஒரு தகவலும் வரலியே? பயமாஇருக்கு... மனுஷன் ஒரு போன் பண்ணி பேசக் கூடாதா?'' புலம்பினாள் கனகம்.

''அவரோட செல்போன் ஸ்விட்ச் ஆப்லே இருக்கு. செல்லுல சார்ஜ் இறங்கியிருக்கும். வெளியில லேண்ட் லைன்லே இருந்து பேசி இருக்கலாம். அப்பா கம்முனு இருக்கிறதைப் பார்த்தா... பணத்தோட தான் வருவாருன்னு தோணுது. நேர்லே போயி பேசிக்கலாம்னு அமை

**''வீரமான மாப்பிள்ளையை தான் கல்யாணம் பண்ணிங்கலேன்னு சொன்னாலே... உம்பொண்ணு. வீரமான மாப்பிள்ளை கிடச்சானா?''**

**''நாலு கொல... ஐந்து கத்தி குத்து கேஸ் மாப்பிள்ளையை கட்டிக்கிட்டா''**

**-குஞ்சன் விளைரவி.**



தியா இருக்காரு போல... அவருக்கு என்ன அலைச்சலோ? பாவம்...! தைரியமா இரும்மா... எல்லாம் நல்லபடியா நடக்கும்...''

ஆறுதல் வார்த்தைகளை ஒப்புக்காக உதிர்த்தாளே தவிர... உள்ளூர கஸ்தூரியின் மனதிலும் கவலையும் பயமும் முற்றுகையிட்டிருந்தன என்பது நிஜம்!

தேனியில் ஹாஸ்டலில் தங்கிப் படித்தாலும் விடுமுறைக்கு நெடுங் குண்டம் எஸ்டேட்டில் உள்ள வீட்டிற்கு வரும்போதெல்லாம்... கஸ்தூ ரிக்கும் இருப்பே கொள்ளாது.

வரிந்து கட்டிக் கொண்டு அடுக்களையில் நளபாகத்தில் இறங்கி விடு வாள்.

கணப்பொழுது கூட சோம்பியிருக்க..அவளது மனம் அனுமதிக்காது. இன்றும் அப்படித்தான்...!

உள்ளூர கவலை அரித்துக் கொண்டிருந்தாலும் அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள்.

''அம்மா! என்ன சமைக்கட்டும்?'' உள்ளிருந்தபடியே கேட்டாள்.

''உங்கக்கா வயித்துப்பிள்ளைக்காரி.. அவளுக்குப் பிடிச்சதை செய்...''

''அக்கா.. மணத்தக்காளி வற்றலை வதக்கி மிளகையும் தேங்கா யையும் அரைச்சுவிட்டு சுள்ளுன்னு வத்தக்குழம்பு வைக்கட்டுமா? பருப்பு உசிலி தொட்டுக்க பண்ணட்டுமா?''

''வக்கணையா சாப்பிடற மனநிலையிலா நான் இருக்கேன்?'' சோக மாய் எதிர்கேள்வி கேட்டாள் மனோகரி.

''உன் வயித்துல வளர்ற குழந்தையை பட்டினி போடலாமா அக்கா? உன் பிரச்சனை இன்னிக்கோ நாளைக்கோ தீர்ந்துடும்.

பட்டினி கிடந்து ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிட்டா என்ன பண்றது? உனக்காக இல்லாட்டியும் பாப்பாவுக்காக நீ மூணு வேளைக்கும் சாப் பிட்டு தான் ஆகணும்..வேற வழியில்ல..

வெந்நீர் வைக்கிறேன்.. முதல்லே குளிச்சுட்டு வாக்கா.. ப்ளீஸ்.. எனக்காக..''

அக்காவின் அருகில் வந்து இதமாய் பேசி அவளது கலைந்த கூந் தலை வாத்சல்யத்துடன் ஒதுக்கிவிட்டாள் கஸ்தூரி.

''பிரச்சனை தீர்ந்திடும்கிறியா? உனக்கு நம்பிக்கை இருக்கா?''

பரிதாபமாய் ஏறிட்டாள் மனோகரி.,

''நிச்சயமா தீர்ந்துடும். எனக்கு நம்பிக்கை இருக்கு அக்கா..!''

''நீ எப்படி சொல்றே கஸ்தூரி?'' நம்ப மாட்டாமல் கேட்டாள்

மனோகரி.

''என் உள் மனசு சொல்லுது.. நல்லதுதான் நடக்கும்னு நம்பு அக்கா! நம்பிக்கை தானே வாழ்க்கை! குளிச்சுட்டு வந்து நம்ம குல தெய்வத்தை மனசார வேண்டிக்கோ..! தெய்வம் நம்மைக் கைவிடாது.. சரியா?''

''நீ பேசினதைக் கேட்டதும் மனசுக்கு கொஞ்சம் தெம்பா இருக்கு..'' முணுமுணுத்தபடி கையை ஊன்றி நிதானமாய் எழுந்து.. கொல்லைப் புறத்திலிருந்து குளியலறையை நோக்கிச் சென்றாள் மனோகரி.

'அப்பா பணத்துடன் வந்துவிடுவாரா?

அனைவரும் கையை விரித்து விட்டார்கள் என்று கூறி அப்பா வெறும் கையோடு திரும்பி வருவாரா?

அத்தானை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றிவிட முடியுமா?

அக்காவின் பிரச்சனை தீர்வதற்கு வழி கிடைக்காவிட்டால்?

அத்தானும் அக்காவும் ஏடாகூடமாய் முடிவெடுத்துவிடுவார்களே?

கடவுளே..! எவ்வளவு பெரிய சோதனை?

ஒருவேளை.. பணம் கிடைக்காததால்.., இந்தக்கவலையில் அப்பா வீட்டிற்கே வராமல் இருந்துவிட்டால்?

இந்தப் பாழாய் போன பணம்.. ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்களைப் பாடாய் படுத்துகிறதே?

இந்தப்பிரச்சனையிலிருந்து..எப்படி மீண்டு எழப்போகிறோம் என்று தெரியவில்லையே?'

வாணலியில நல்லெண்ணெய் விட்டு மணத்தக்காளி வற்றலை வறுத்துக்கொண்டிருந்த கஸ்தூரியின் மனதில் கேள்விகள் முளைவிட்டன. விதி சிரித்தது.

அக்காவுக்கு வந்த பிரச்சனை திசைமாறி.. இவளை நோக்கி பூதாகரமாய் வளர்ந்து.. இவளை விழுங்கி விட தருணம் பார்த்துக்கொண்டிருந்தது.



## 2

**அ**ன்று மதியம் மூன்று மணிக்கு கஸ்தூரியின் செல்போன் அவசரக்குரலில் அழைப்பு விடுத்தது.

யாராக இருக்கும்? அப்பாவோ? இல்லையே..! இது ஏதாவொரு லேண்ட் லைன் நம்பர் போலிருக்கிறதே..?

''யோசித்தபடி செல்போனை உயிர்ப்பித்தாள்..

ஹலோ..''

அக்கா மனோகரியும் அம்மா கனகமும் ஆவலாய் இவளது முகத்தை ஊன்றிப்பார்த்தனர்.

''ஹலோ.. நான் தான்.. அப்பா பேசறேன்.. கஸ்தூரி..!'' அப்பா காசியின் குரல்..

''எ..என்னப்பா.. இது? ரெண்டு நாளா.. போனே பண்ணலை.. நாங்க ரொம்ப டென்ஷனாயிட்டோம் அப்பா!''

''என்னோட போன் ரிப்பேர் ஆயிடுச்சு.. திண்டுக்கல், தேவதானப் பட்டி, வத்தலக்குண்டுன்னு மாத்தி மாத்தி சொந்தக்காரங்க வீட்டுக்குப் போனேன் இல்லையா?

அலைச்சல் வேற.. திகில்வேற.. அதான் போன் பண்ணலை..

நான் இப்ப வீரபாண்டியில இருக்கிற என்னோட பங்காளிவீட்டுக்கு வந்தேன்.

நாளைக்கு மதியத்துக்கு மேல.. பணம் தர்றேன்னு சொல்லியிருக்கான்.

பணம் கிடைச்சிரும்னு நம்பிக்கை வந்ததால தான் உனக்கு போன் போட்டேன்.

மனோகரியை தைரியமா இருக்கச்சொல்லு.. நாளை ராத்திரிக்கெல்லாம் நான் பணத்தோட வந்துருவேன்..

நீங்க மூணு பேரும் நிம்மதியா சாப்பிடுங்க.. நம்ம கவலை தீர்ந்திடுச்சே..?''

மறுமுனையில் காசியின் குரலில் உற்சாகமும் திருப்தியும் ததும்பின..

''அப்பாடா.. ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா.. அப்பா! பணத்தோட வர் நீங்க.. பத்திரமா வாங்கப்பா...''

''பயப்படாதே கஸ்தூரி! நான் பத்திரமா வந்துடுவேன். அம்மாகிட்டேயும் அக்காகிட்

**''தலைவரே உங்க வீட்டுக்கு சி.பி.ஐ ரெய்டு வந்திருக்காம்?''**

**''சின்ன வீட்லயா? பெரிய வீட்லயா?''**

**–ஏ.மூர்த்தி, திருவள்ளூர்.**



டேயும் சொல்லிடறியா? நான் வச்சுடறேன்..''

சரிப்பா..

செல்போனை அணைத்துவிட்டு.. மலர்ந்த முகத்துடன் விஷயத்தைத் தெரிவித்தாள்.

அதற்குமேல் அவளுக்கு இருப்பு கொள்ளவில்லை.

ஏலக்காயைத் தட்டிப்போட்டு.. டீ போட்டு மணக்க மணக்க டம்ளர் களில் நிரப்பி அவர்களுக்கு தந்துவிட்டு சுடச்சுட டீயைப் பருகிவிட்டு.. சிறு மூங்கில் கூடையை எடுத்துக்கொண்டாள்.

முன்தினம் மல்லிகைப்பூவை சரமாய் தொடுத்து ஈரத்துணியால் பந்தாய் சரத்தை சுற்றி மூடி வைத்திருந்ததை எடுத்து கூடையில் போட் டுக்கொண்டாள்.

அணிந்திருந்த இளம்பச்சை வண்ணக்காட்டன் புடவைக்கு மேல் ஸ்வெட்டரைப் போட்டாள்.

''ராத்திரி தூக்கத்தில் சிரிச்சீங்களே..?''

''கனவில் உன் தங்கையோடு பேசிக் கொண்டிருந்தேன்!''

''உடனே அலறீனிங்க''

''டக்குன்னு நீ வந்துட்டே!''

-காசிதாசன், வந்தவாசி.



சூடம், ஊதுவத்தி, தேங் காய், திரி, எண்ணெய் பாட் டிலை கூடையில் வைத்த போது.. கனகம் அருகில் வந்தாள்.

''மணி மூன்றரை தானே ஆகுது? பக்கத்துல இருக் கிற திறந்தவெளி அய்ய னாரு கோவிலுக்கு தானே போறே?''

''இல்லம்மா.. மலைக் கோவிலுக்குப் போய் வனதுர்க்கை அம்மனை தரிசனம் பண்ணிட்டு அர்ச்சனை செய்துட்டு வர லாம்னு..''

அவசரமாய் இடைம றித்தாள் கனகம்.

''அது ரொம்ப தொலை வெட்டுல இருக்கே? எனக்கு மூட்டு நோவாச்சே? அவளோ தூரம் நடக்கவும்

முடியாது.. மலைக்கோவில் படிகள்லே ஏறவும் முடியாதே?''

''தெரியும்மா.. நான் மட்டும் போயிட்டு வந்துடறேன். அதுக்கு தான் சீக்கிரமா கிளம்பறேன்.''

''தனியா போறியா கஸ்தூரி? அதான் யோசிக்கிறேன்.''

''அம்மா.. வன துர்க்கை கண் கண்ட தெய்வம்..! நம்ம வேண்டுதலுக்கு உடனே செவி சாய்ச்சு.. எப்படி பிரச்சனையைத் தீர்த்து வச்சுட்டா பார்த்தியா?

அம்மனை இன்னிக்கே பார்த்து வேண்டிக்கிட்டு வந்தாத்தான் எனக்கு திருப்தி.

ஒரு வகையில நன்றி செலுத்தறதுக்காக போறேன்னு வச்சுக்கோயேன்..

தனியாதான் போறேன்.. ஆனா ஆங்காங்கே தேயிலைத்தோட்டத்துல, வேலை பார்க்கிற தொழிலாளர்கள் நடமாட்டம் இருக்குமில்லையா?

ஆறு மணிக்குள்ளே நானும் திரும்பிடுவேன். அப்புறம் என்ன?''

சிரித்தபடி கேட்டாள் கஸ்தூரி.

''இருந்தாலும்.. இது எஸ்டேட்.. அதிலும் நீ மலைக்கோவிலுக்கு தனியா போறியே?''

முனகினாள் கனகம்.

''அம்மா! இந்த எஸ்டேட்டுல தான் நான் பிறந்து வளர்ந்தேன். அதை மறந்துடாதே..''

''ரொம்ப காலமா நீ இங்க இல்லையே? ஹாஸ்டலுக்கு போயிட்டியே?''

''எட்டாம் கிளாஸ் படிக்கிற வரைக்கும் இங்கே தானே இருந்தேன். லீவு விட்டா ஓடி வந்துடறேனே? அப்புறம் என்ன?''

சளைக்காமல் கேட்டாள் கஸ்தூரி.

''போயிட்டு சீக்கிரமா வந்துடு கஸ்தூரி! மரம், செடி, கொடி, பூக்கள்னு பார்த்துட்டு லயிச்சுப்போயி நின்னுட்டு இருக்காதே..!''

''இது எஸ்டேட்.. திடீர்னு இருந்தாப்பல இருந்து மேகம் திரண்டு இருண்டு மழை பொழிய ஆரம்பிச்சுடும்.

அது மட்டுமில்லாம கரடி, யானை,புலின்னு விலங்குகள் திடுதிப்புன்னு வந்து தொலைக்கும்.

இங்க நிறைய ஆபத்துகள் இருக்கு..''

''எத்தனையோ தொழிலாளர்கள் தினமும் இங்கே வந்து வேலை பார்த்துட்டு தானே இருக்காங்க.. அப்பா கூட அந்தத்தொழிலாளர்கள்லே ஒருத்தர் தானே? ஆபத்தைப் பார்த்தா முடியுமா?''

‘‘விடும்மா.. அவ போயிட்டு வரட்டும்.. தேனீ மாதிரி சுறுசுறுப்பா திரியறவளை சதா வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கச் சொல்றியே.. விடு.. அவ பத்திரமா வந்துடுவா..’’

மேடிட்ட வயிற்றை மிருதுவாகத்தடவியபடி தங்கையின் அருகில் வந்து நின்றாள் மனோகரி.

‘‘தங்கச்சியை ஒருவார்த்தை நான் பேசிடக்கூடாதே? பரிஞ்சுகிட்டு வந்துடுவியே?’’

‘‘சரி..ஆத்தாளைத்தானே பார்க்கப்போறே.. பார்த்துட்டு சுருக்க வந்துடு.. கஸ்தூரி!’’

‘‘அப்பாடா.. தேங்க்ஸ் அக்கா..! நா வரேன்.’’

மூங்கில் கூடையுடன்.. விடுவிடுவென்று சரிவில் இறங்கிச்சென்றவளையே இமை கொட்டாமல் பார்த்தாள் மனோகரி.

அந்த வளைவில் திரும்பும் முன் சற்று நின்று அண்ணாந்து மனோகரியைப் பார்த்து உற்சாகமாய் கையை அசைத்தாள் கஸ்தூரி.

மனோகரியும் பதிலுக்கு கையை அசைத்தாள்.

சிறுமுறுவலுடன் வேகமாய் நடந்தவள் சுற்றும் முற்றும் பார்வையைச் சுழல விட்டாள்.

இருபுறமும் ஏலச்செடிகள் ஆளுயரத்திற்கு வளர்ந்திருந்தன. நான்கு வளைவுகளைக் கடந்தாள்.

சாலையோரமிருந்த மரங்களில் மிளகுக் கொடிகள் உரிமையாய் சுற்றிப் படர்ந்து.. செழுமையைப் பறை சாற்றிக் கொண்டிருந்தன.

பச்சை வண்ணத்தில் முத்து முத்தாய் இருந்த பச்சை மிளகைத் தொட்டுப்பார்த்து ரசித்து விட்டு.. நான்கடி நடந்திருப்பாள். சாலையோரத்

**‘‘என் மாமனார் ‘குருவி’ மாதிரி பணம் சேர்த்தார்’’**

**‘‘உன் கணவர் ‘பருந்து’ மாதிரி செலவு செய்கிறாரா?’’**

**‘‘இல்லை; ‘கோழி’ மாதிரி அடை காக்கிறார்’’.**

**-காசிதாசன், வந்தவாசி.**



தில்,

அந்தக்கொன்றை மரத்தில் பொன் வண்ணத்தில் சரம் சரமாய் கொன்றைப் பூக்கள் பூத்துக்குலுங்கித் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டதும் லயித்துப் போய் மரத்தடியில் நின்றபடி அண்ணாந்து பார்த்தாள்.

''வாவ்! என்ன அழகு! தங்க நிறத்தில் கொன்றைப் பூ சரம் சரமாய் தொங்குதே.. ஒரேயொரு சரத்தைப்பறிச்சுக்கலாம்..''

தனக்குள் பேசியபடி கையை உயர்த்தி அந்தச் சரத்தைப் பறிக்க முயன்றாள்.

கொன்றை மலர்கள் அவள் மீது அட்சதையாய் உதிர்ந்தன.

க்ளுக் என்று சிரித்து மகிழ்ந்தபடி பலங்கொண்ட மட்டும் சரத்தை இழுத்துப்பறிக்க.. அவள் குதிகாலில் எம்பிநின்றாள்.

அந்த வளைவில் நிதானமாய் வந்த படகுக்கார் பத்தடி தொலைவில் சட்டென்று நின்றதையோ..

காருக்குள்ளிருந்த இளைஞன் விழிகள் விரிய.. கஸ்தூரியையே பார்த்துக்கொண்டிருப்பதையோ.. அவள் கவனிக்கவே இல்லை. இயற்கையின் அழகில் மனம் பறிகொடுத்து தன்னையும் அறியாமல் சிரித்துக் கொண்டிருந்தாள் கஸ்தூரி.

சில கணங்கள் கூட அவளது மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

பொத்தென்று மரத்திலிருந்து அவளது கழுத்தில் மாலைபோல் கனமாய் பாம்பு விழுந்து தொலைத்தது.

சில்லென்று நெளுக் நெளுக் என்று பாம்பு அசைந்ததும்.. பயத்தில் வீலென்று அலறிவிட்டாள்.

விழிகளை இறுக மூடிய வண்ணம்..அ வள் அலறிய அலறல்.. அந்த எஸ்டேட் முழுவதும் எதிரொலித்தது.



# 3

படகுக்காரில் அமர்ந்தபடி கஸ்தூரியின் அழகை ரசித்துக்கொண்டிருந்த கதிருக்கு திக்கென்றிருந்தது.

திகைத்து அதிர்ந்து கார் கதவைத் திறந்து கொண்டு வேகமாய் இறங்கினான்.

அதற்குள் அவள் அலறிய அலறலைக் கேட்டு தேயிலை பறித்துக் கொண்டிருந்த நான்கைந்து தொழிலாளர்கள் தடதடவென்று ஓடி வந்

தனர்.

அவளது கழுத்தில் மாலை போல் விழுந்த கருநாகம் நிதானமாய் இறங்கி.. பின்பு சரசரவென்று மின்னல் வேகத்தில் சருகுகளிடையே சென்று மறைந்துவிட்டது.

தோட்டத்துதொழிலாளர்கள் ஓடி வரவும்.. கதிர் தயங்கி அப்படியே நின்றுவிட்டான்.

இன்னமும் அவள் விழிகளை இறுக மூடி நடுங்கியபடி நின்று கொண்டிருந்தாள்.

''யாரு இந்தப்பொண்ணு? கருநாகம் கழுத்துல மாலைமாதிரி விழுந் தாக்க.. ராஜயோகம்னு சொல்லுவாங்க..''

''இது நம்ம காசியோட பொண்ணு.. அடையாளம் தெரியலியா உனக்கு? பயப்படாதே தாயி.. கருநாகத்துக்கிட்டேயிருந்து நீ தப்பிச் சுட்டே...''

''மரத்துக்கு அடியில எதுக்கு போச்சு இந்தப் பிள்ள? பூச்சி பொட்டு இருக் குமில்ல? படிச்ச புள்ளைக்கு இது கூட தெரியலை..''

''சரி.. வுடு.. அதுவே பாவம்! அரண்டு போயி கிடக்கு.. பாம்பு போயிருச்சு.. இனிமே உனக்கு நல்ல நேரம் தான்..

பூங்காவனம் சொன்னா சரியாயிருக்கும். ஆறடி நீளமுள்ள பாம்பு.. உன் கழுத்துல மாலை மாதிரி யில்ல தொங்குச்சு? அது இப்படி விழுந்துச்சுன்னா அதிர்ஷ்டம் தாயீ..

இந்தா.. கொஞ்சம் தண்ணி குடிச்சுட்டு வீட்டுக்குப் போ தாயீ.''

ஆள் ஆளுக்கு ஆறுதலாய் பேசினார்கள்.

**''என் மனைவிதான் உண்மையிலேயே 'இல்லாள்''**

**''அப் படியா?''**

**''ஆமாம், எப்பவும் வீட்டில் அது இல்லை... இது இல்லைன்னு சொல்லிக்கிட்டே இருப்பாள்!''**

**-காசிதாசன், வந்தவாசி.**



பயத்தில் அவளது இதயம் இன்னமும் முரசாய் அதிர்ந்து கொண்டு தான் இருந்தது. கிலியில் மேனி முழுவதும் புல்லரித்துவிட்டது.

''அப்பப்பா.. என்ன கனம்? என்ன நீளம்! கருகருவென்ற நிறத்தில் புஸ் புஸ் என்று மூச்சு விட்டதே?

ஏன் என்னைக் கொத்தவில்லை? இத்தனை கிட்டத்தில் பாம்பை இதுவரை பார்த்ததில்லை.

அதுவும் கழுத்தில் தொங்கியதே..? கடவுளே..! இயற்கையை ரசிக்கிறேன் என்று இந்தக்கொன்றை மரத்தடியில் வந்து நின்று.. மெய் மறந்து சரத்தைப் பிடித்து இழுத்தது என் பிசகு தானே?

சே..! என்னைச்சுற்றிலும் கூட்டமாய் கூடி நின்று வேடிக்கை பார்க்கிறார்களே..?

கிளம்பும் போதே அம்மா படித்துப்படித்து, எச்சரித்தாளே? அது சரியாகத்தான் இருக்கிறது..''

சங்கோஜமாய் சுற்றிலும் நிற்பவர்களை ஒரு பார்வை பார்த்தாள்.

''இந்தா தாயீ.. தண்ணியை மொதல்லே குடி!'' மறுக்காமல் வாங்கிக் குடித்தாள்.

''பாவம்.. பயத்துல ஒடம்பு உதறலாகி கெடக்கு.. உங்க தாயீ தகப்பன் பண்ணின புண்ணியத்துல.. இன்னிக்கு நீ பிழைச்சே...''

''ரொம்ப நன்றிங்க..'' என்றபடி தண்ணீர் பாட்டிலை தந்துவிட்டு.. கீழே விழுந்துகிடந்த மூங்கில் கூடையை குனிந்து எடுத்தாள். பக்கத்தில் சிதறிக்கிடந்த ஊதுபத்தி, சூடம், திரி, பூ, தேங்காய் இத்யாதிகளை எடுத்துப்போட்டுக்கொண்டாள்.

''கோயிலுக்கா பொறப்பிட்டே? வேணாம் வீட்டுக்குப் போ தாயீ..'' என்றாள் ஒருத்தி

''அதானே! வேணும்னா துணைக்கு நான் கூட வந்துவிடவா?'' என்றாள் இன்னொருத்தி.

''இல்ல.. நானே போயிக்கிறேன்.. எனக்கு பயம் ஒண்ணுமில்ல.. முன் வைச்ச காலை பின் வைக்கக்கூடாது.. இன்னிக்கு நான் கோவிலுக்குப் போயாகணும்..

உங்க உதவிக்கும் அக்கறைக்கும் ரொம்ப நன்றிங்க..''

அதற்கு மேல் பேச்சுக்கு இடம் கொடுக்காமல் விடுடென்று நடையைக் கட்டினாள் கஸ்தூரி.

''இந்தப்புள்ளக்கி ரொம்ப தைரியம் தான்.''

படிச்ச புள்ள பார்க்க மூக்கும் முழியுமா இருக்கா..

''என்ன இப்படி சாதாரணமா சொல்லிப்புட்டே.. பார்க்கிறதுக்கு

சும்மா வனதேவதை மாதிரியில்ல ஜொலிக்குது.. காசிக்கு இப்படி யொரு பொண்ணு...''

''படிச்ச புள்ளையா இருந்தாலும் மண்டைக்கனமில்லாம தன்மையா தான் பேசுது''

''இவளைக்கட்டிக்க எந்த ராஜகுமாரனுக்கு குடுத்து வச்சிருக்கோ...''

''காசி நம்மைப்போல தொழிலாளி தானே? அவனோட பொண் ணைக் கட்டிக்க ராஜகுமாரன் வருவானாக்கும்?''

''ஏன் வரமாட்டான்? பார்க்க ஏழை வீட்டு பொண்ணு மாதிரியா இருக்கா?

ராஜகளையும், கம்பீரமுமா இளவரசி மாதிரியில்ல இருக்க?

பார்த்துட்டே இரு.. ராஜகுமாரன் வந்து கொத்திட்டுப்போகப்போ றான்.''

''இவ ஒருத்தி... ராஜகுமாரன் என்ன கிளியா? இவளைக் கொத்திட்டு போறதுக்கு?''

அவர்களுக்குள் பேசி கொல்லென்று சிரித்தபடி கலைந்து தேயிலை பறிக்கச் சென்றார்கள்.

இவர்களது சம்பாஷனையைக்கேட்டபடி நின்றிருந்த கதிர்... தனக் குள் புன்முறுவல் பூத்தபடி காரில் ஏறினான்.

யாரிவள்? மேலை நாட்டில் படித்து வந்தவன் நான்... எத்தனையோ அழகிகளை நேரில் பார்த்திருக்கிறேன்.

இதுவரை இவளைப்போன்றதொரு அழகியை எங்கும் கண்ட தில்லை என்பது போல் அல்லவா நான் நடந்து கொண்டேன்?

பொன் வண்ணப்பூக்கள் உதிர்ந்ததும் க்ளுக் என்று சந்தோஷமாய் சிரித்தவளைக் கண்டதும் நான் ஏன் திகைத்து காரை நிறுத்தினேன்?

என்னையும் அறியாமல் அவளையே ரசித்தேனே?

அவளது கழுத்தில் பாம்பு விழுந்ததும் தூக்கி வாரிப்போட்டு பதறி காரை விட்டு இறங்கினேன்?

ஏன்?

வாழ்நாள் முழுவதும் இவளைப்பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவல் உள்ளூர ஜனித்து விட்டதே? என்ன காரணம்?

மனதிற்கு இதம் தரும் அழகு..

கையெடுத்துக்கும்பிட வைக்கும் தெய்வீகமான அழகு.

அவளது அதீத ரசனை..

கள்ளங்கபடமில்லாமல் இயற்கையோடு ஒன்றிப்போய் தன்னை

மறந்து சிரித்த அந்த வெள்ளை மனம்...

இதெல்லாம் என் மனதைக் கவர்ந்து விட்டன என்று தான் சொல்ல வேண்டும்.

இது எப்படி சாத்தியம்?

என் மனதில் கவலை பாறாங்கல்லாய் அழுத்திக் கொண்டிருக்கும் தருணத்தில் எப்படி என்னால் மனதைப் பறி கொடுக்க முடிந்தது?

சே...! என்ன மனிதன் நான்?

ஒரு சில கணங்களில் அழகான பெண்ணைக் கண்டதும் நிலை தடு மாறி விட்டேனே?

அப்பாவுக்கு தெரிந்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?

கடவுளே! ஒரு வாரமாய் சதா கவலையில் மூழ்கிப்போய் கிடந்த மனம்!

இயற்கை அழகு கொஞ்சும் எஸ்டேட்டின் சாலையோரத்தில் கொன்றை மரத்தடியில் திடுதிப்பென்று வனதேவதையைப்போன்ற அழகான பெண்ணைக்கண்டதும்... சட்டென்று என் மனம் அவள் மீது படிந்து விட்டது

மனதிலிருந்த கவலை அந்த தருணத்தில் பறந்தோடி விட்டது.

ஹீம்! இனி என்ன நடக்கப்போகிறதோ? ஏதோவொரு விபரீதம் விரைவில் நடக்கப்போகிறது என்று உள்ளூர பட்சி எச்சரிக்கிறது.

திக் திக் என்று மனம் அடித்துக் கொள்கிறதே?

கதிரின்கம்பீரமானஅழகான முகத்தில் கவலை முலாம் பூசியிருந்தது. யதார்த்தத்திற்கு திரும்பி

**''என்கூடசண்டைபோடுறதைவிட எங்கஅம்மாகூட சண்டை போடுறது தான் என் மனைவிக்கு ரொம்ப பிடிக்கும்''**

**''ஏன் அப்படி...?''**

**''உடனே சரண்டராயிட்டா அவளுக்குப் பிடிக்காது, கடைசி வரைக்கும் எதிர்த்து நின்னு போராடினாத்தான் ரொம்ப பிடிக்கும்!''**

**-சீர்காழி வி.ரேவதி.**



யதும் மனம் கனக்கத்தொடங்கியது.

காரை நிதானமாய் ஓட்டினான்.

மூங்கில் கூடையுடன் வேகமாய் வந்து கொண்டிருக்கும் கஸ்தூரியை கார் கடந்து சென்ற போது கதிர் அவனையும் அறியாமல் அவளை ஒரு முறை திரும்பிப்பார்த்தான்.

ஒரு கணம் தான்.. அவள் கதிரை கவனிக்கவில்லை.

பார்வையைத் தழைத்தபடி சீரியஸான முக பாவத்துடன் நடந்தவளை ஏறிட்டுப்பார்த்து விட்டு விருட்டென்று காரின் வேகத்தைக் கூட்டினான் கதிர்.

விதி சிரித்தது.



# 4

மலைக்கோவிலில் வனதுர்க்கையை மனமுருக தரிசித்து விட்டு மூங்கில் கூடையுடன் பிரகாரத்தை வலம் வந்தாள் கஸ்தூரி.

குளிர்காற்று விர்ரென்று சுழன்றடித்தது.

இடுப்பளவு கட்டப்பட்டிருந்த சுற்றுச்சுவரருகே வந்து நின்று கீழே பார்த்த போது பச்சைப்பசேலென்று அந்தப்பிரதேசம் கண்களை கட்டிப்போட்டது.

பறவைகள் சங்கிலித்தொடர் போல் கூட்டம் கூட்டமாய் தங்கள் இருப்பிடம் தேடி விரைந்து கொண்டிருந்தன.

இயற்கை அழகில் லயித்துப்போய் சில கணங்கள் நின்றிருந்த கஸ்தூரி.. அரை மனதுடன் அந்த இடத்தை விட்டு விலகினாள்.

இருட்டுவதற்குள் வீடு போய் சேர வேண்டும்.. அம்மாவும், அக்காவும் கவலையுடன் காத்திருப்பார்களே என்ற எண்ணத்தில் வேகமாய் படிகளில் இறங்கினாள்.

கீழே இறங்கி அண்ணாந்து கோபுரத்தைப் பார்த்து வணங்கி விட்டு விரைந்தாள்.

நாற்பது அடிதூரம் கடந்திருப்பாள்.

தீனமாய் ஏதாவொரு குரல் கேட்டது.

என்னது இது? சுற்றும் முற்றும் பார்த்தாள்.

சத்தம் எங்கிருந்து வருகிறது?

சுற்றிலும் பார்வையால் துழாவினாள்.

நமக்கென்ன? சீக்கிரமாய் பத்திரமாய் வீடுபோய் சேர்ந்தால் போதும் என்று சுயநலமாய் சிந்திக்கத் தெரியாதவள் கஸ்தூரி.

அந்தப்பாதையிலிருந்து ஐந்தடி தூரத்திலிருந்து அந்த சப்தம் வந்து கொண்டிருந்தது.

மெல்ல அருகில் சென்று எட்டிப்பார்த்தாள்.

பத்தடி ஆழத்தில் வட்டமாய் ஒரு குழி!

அந்தக்குழியில் ஒரு புள்ளிமான் குட்டி வந்து விழுந்து வகையாய் மாட்டிக் கொண்டு தீனமாய் திகிலுடன் முனகிக் கொண்டிருந்தது.

குழியை யாரோ வேண்டுமென்றே வன விலங்குகளைப் பிடிப்ப தற்காகவே தோண்டி அது வெளியில் தெரியாமல் இருக்க... குழியை மூடி அதன் மேல் இலை தழை சருகுகளைப் பரப்பி வைத்திருந்தனர்.

குழியின் அடியிலிருந்த பனை ஓலைத்தட்டியைப் பார்த்ததுமே கஸ் தூரிக்கு புரிந்து விட்டது.

பாவம்! எதற்காக இந்த ஜனங்கள் வன விலங்குகளை இப்படி இம்சிக்கிறார்கள்?

சுதந்திரமாய் அதன்போக் கில் சுற்றி திரிவதைப்பிடித்து வதைப்பதில்.. இவர்களுக்கு என்ன தான் இன்பமோ?

இந்தக்குழியில் மான் குட்டி இன்று மாட்டியிருக் கிறது.

குழியைப் பார்த்தால் மிகப்பெரியதாக இருக்கி றதே? யானைக்குட்டியை மாட்டி விடும் போலிருக்கி றதே?

இனத்தை விட்டு பிரிந்து தனியாக மாட்டிக் கொண் டோம் என்ற பயத்தில் மிரள மிரள விழித்தபடி பரிதாப

**''உங்களுக்கு தெரிந்து 50 வயதுக்குள்ள சர்க்கரை வியாதி உள்ளவர் யாராவது இருக்காங்களா?''**

**''ஏன்?''**

**''என்னுடைய 'ஸ்வீட்ஸ்டால்' கடைக் வேலைக்கு சேர்க்கலாம்னு தான்!''**

**-காசிதாசன், வந்தவாசி.**



மாய் அண்ணாந்து மான் குட்டி பார்க்கிறதே?

இதைப்பிடித்து என்ன செய்யப்போகிறார்கள்?

கண்டிப்பாய் கொன்று மான்கறி சமைத்து புசிக்கத்தான் இந்த ஏற்பாடு.. வேறு என்ன? சே...!

யாரிந்த அக்கிரமத்தைச் செய்தார்கள்?

கண்ணுக்கு எட்டிய தூரம் ஒருவருமே தென்படவில்லையே?

யாரையாவது உதவிக்கு அழைத்து வரலாமா? அதற்கு இன்னமும் வெகுதூரம் செல்ல வேண்டும்? அப்படி நான் போய் அழைத்து வருவதற்குள் இந்த மான்குட்டிக்கு வேறு ஏதேனும் ஆபத்து வந்து விடும்.

புலிபோன்ற வன விலங்குகளின் நடமாட்டம் இருப்பதாக அம்மா எச்சரித்தாளே?

குழியில் என்னால் இறங்க முடியுமா? ஊகூம்... இறங்கினால் மான் குட்டியுடன் ஏறி வருவது சாத்தியமே இல்லை.

பத்தடி ஆழமான குழியாய் இருக்கிறதே?

போகவும் மனமில்லை.. இங்கேயே தாமதித்தால் எனக்கும் சேர்த்து ஆபத்து காத்திருக்கிறதே?

மான்குட்டியின் தீனமான குரல் கேட்டு கண்டிப்பாய் இதை வேட்டையாட கொடிய விலங்கு இங்கு வந்தாலும் வரலாம்.

கடவுளே! இதென்ன சோதனை?

இங்கேயே நிற்பதில் பிரயோஜனம் இல்லை.

நேரமும் கரைந்து கொண்டிருக்கிறது.

மனதை கல்லாக்கிக் கொண்டு நான் சென்று விட்டால்?

இரவெல்லாம் என்னால் தூங்க முடியுமா?

ஊகூம்.. இந்த மான்குட்டியைக் காப்பாற்றியே தீர வேண்டும்.

மனதில் உறுதி செய்து கொண்டதும்.. அவள் வெகுவேகமாய் அந்தப்பாதையில் ஓடினாள்.

அவளது அதிர்ஷ்டமோ? மான்குட்டியின் அதிர்ஷ்டமோ?

சில கணங்களில்...

பின்னால் ஒரு கார் வரும் சப்தம் கேட்டது.

சட்டென்று நின்றாள்.

யாராய் இருந்தாலும் நிறுத்தி உதவி கேட்டு விட வேண்டியது தான்.

பதைபதைப்புடன் கையை வேகமாய் அசைத்தாள்.





# 5

மனம் சரியில்லை என்று காரை எடுத்துக் கொண்டு எஸ்டேட்டில் ஒரு ரவுண்ட் போய் விட்டு வரலாம் என்று கிளம்பியிருந்தான் கதிர்.

அவன் தான் இப்போது திரும்பி வந்து கொண்டிருந்தான்.

என்ன இது? அந்த வன தேவதை கையை அசைத்து காரை நிறுத்தச் சொல்கிறாளே?

பதற்றத்துடன் வியர்க்க விறுவிறுக்க நின்று கொண்டிருக்கிறாள்.

கையில் அதே மூங்கில் கூடை!

யோசனையுடன் காரை நிறுத்தினான்.

யாராவது இவளைத் துரத்திக்கொண்டு வந்தார்களோ? பின்னால் திரும்பிப்பார்த்துக் கொண்டான் கதிர்.

அப்புறம் ஏனிந்த பதை பதைப்பு? அழகான மருண்ட விழிகளில் கண்ணீர் தேங்கியிருக்கிறதே?

''எஸ்.. எனி ஹெல்ப்? பாதை தவறிப்போச்சா? வீட்டுக்குப்போக ணுமா?

உங்க வீடு எங்கிருக்குன்னு சொல்லுங்க.''

கார்க்கதவை திறந்து விட யத்தனித்தான் கதிர்.

''இல்ல சார்! பாதை தவறலை சார்..''

குயிலைப் பழித்த குரல் இதமாய் இனிமையாய் அவனது செவி களை ஸ்பரிசித்தது.

''பின்னே? யாராச்சும் உங்களை தொல்லை பண்ணினாங்களா?''

''இ.. இல்ல சார்! ஒரு ஹெல்ப் கேட்கலாம்னு'' தயங்கி நிறுத்தி னாள்.

வாட்ட சாட்டமாய் பணக்காரக்களையுடன் படகுக்காரில் வலம் வருகிறார்.

இவரிடம் எப்படி சொல்வது? மான் குட்டிக்காக குழிக்குள் இறங்கும்படி கேட்டால் என்ன நினைப்பாரோ?

மனதில் வரிவரியாய் யோசனை ஓடியது.

''தயங்காம கேளுங்க.... என்ன ஹெல்ப்?'' முகத்தில் ஆணவத்தின் சாயல் சிறிதுமின்றி இயல்பாய் அவன் முறுவலித்ததும் அவளுக்குள் துணிவு

துளிர்விட்டது.

''ஒ..ஒரு மான் குட்டி குழிக்குள்ளே விழுந்து மாட்டிக்கிடுச்சு.. பாவம்.. தீனமாய் கத்திட்டே இருக்கு..''

''எங்கே?''கேட்டபடி காரை விட்டு வேகமாய் இறங்கினான்.

பெரிய பணக்காரன். சாதாரண மான்குட்டிக்கு மனம் இறங்குவானா? என்று சந்தேகப்பட்டு கொண்டு இருந்த கஸ்தூரி அவன் காரிலிருந்து அவசரமாய் இறங்கியதும் சற்று திகைத்து தான் போனாள்.

உள்ளூர அப்பாடா என்று நிம்மதி ஜனித்ததோடு அவளது கவலையும் தீர்ந்தது.

''அதோ அங்கே இருக்கு சார்! வாங்க பக்கம் தான்..'' கையை நீட்டி சுட்டிக் காட்டினாள்.

உற்சாகமாய் பேசிய படி வேகமாய் நடந்தாள்.

ஆஜானுபாகுவாய் ஆறடி உயரத்தில் இருந்த கதிர்..

விரைந்து முன்னே நடந்த போது அவனது வேகத்திற்கு கஸ்தூரி ஓட்டமும், நடையுமாய் விரைய வேண்டியிருந்தது.

குழிக்குள் இருந்த மான்குட்டியை எட்டிப் பார்த்த கதிர்... ஒரு கணம் கூட யோசிக்காமல் தனது சட்டைப் பாக்கெட்டிலிருந்த விலை உயர்ந்த செல்போனை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் அதை வாங்கிக் கொண்டதும் லாவகமாய் குழிக்குள் இறங்கி விட்டிருந்தான்.

குளிரினாலோ, பயத்தினாலோ நடுங்கிக் கொண்டிருந்த மான்குட்டியைத்தூக்கி கொண்டான்.

ஒரு கையால் மான்குட்

**''அக்கா! நீங்க போட்டிருக்கும் கொண்டை புதுமாதிரி இருக்கே... எனக்கும் அதுமாதிரி போட்டு விடுங்க!''**

**''இரு; மாமா சாயந்திரம் ஆபீசிலிருந்து வரட்டும்''**

**-ஆர்.பிரகாசம், கோவிலூர்.**



டியை மார்போடு அணைத்தபடி ஏறும் போது சிரமமாகத்தான் இருந் தது.

இருமுறை சறுக்கியது.

சறுக்கி அவன் விழப்பார்த்த போது கஸ்தூரி ஏகத்திற்கும் பதறி னாள்.

''பார்த்து சார்.. பார்த்து! ஜாக்கிரதை'' அவளது பதற்றத்தையும், பரிதவிப்பையும் அவன் உள்ளூர ரசித்தான்.

கல்லூரியில் உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், கூடைப்பந்து, கால்பந்து போன்ற விளையாட்டுகளில் கலந்து கொண்டு பரிசுகளை அள்ளிச் சென்ற கதிருக்கு இந்த குழி எம்மாத்திரம்?

பிடிப்பு எதுவும் இல்லையே? வேண்டுமென்றே உதட்டைப்பி துக்கி அவளது பதற்றத்தை அதிகரித்தான்.

''ஐயோ சார்! இப்போ என்ன பண்றது? நான் உங்களை இக்கட் டில் மாட்டி விட்டுட்டேனே? என்னால தானே உங்களுக்கு இந்தக் கஷ்டம்?''

கஸ்தூரியின் அழகிய விழிகளில் நீர்த்திரையிட்டது.

விட்டால் கோவென்று அழுதுவிடுவாள் போலிருந்தது.

இதற்குமேல் இவளைக்கலங்க வைப்பது சரியல்ல என்று மனம் இளகியவன் ஒரு வழியாக மான்குட்டியுடன் மேலே ஏறினான்.

அவனது சந்தனக்கலர் சட்டையில் செம்மண் படிந்து அலங்கோல மாய் கசங்கியிருந்தது.

''சாரி சார்! உங்களுக்கு நிறைய சிரமத்தை நான் ஏற்படுத்திட்டேன். அதே சமயத்துல ரொம்ப நன்றி! இந்த மான் குட்டியைக் காப்பாத்தின துக்கு..''

அவனது செல்போனை நீட்டினாள் கஸ்தூரி.

அதை வாங்கி சட்டைப்பையில் வைத்துக் கொண்டே ''இந்தாங்க.. நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்.. இந்த ஜீவனைக் காப்பாத்த றதுக்கு ஒரு சந்தர்ப்பம்.. உங்களால தானே கிடைச்சது.''

மான்குட்டியை அவளிடம் தந்தபோது தற்செயலாக அவளது கை மீது அவன் விரல்கள் பட்டன.

விழிகள் விரிய மான்குட்டியை ஏந்திக் கொண்ட படி வாத்சல்யத்து டன் அதன் தலையை வருடிக் கொடுத்து முத்தமிட்டாள் கஸ்தூரி.

''அந்திசாயுது.. இருட்ட ஆரம்பிச்சுடும்'' என்றபடி அவன் நடக்க.. அவனை பின் தொடர்ந்தாள்.

மான்குட்டியின் முகத்தோடு தன் முகத்தை இழைத்து குதூகலித்த

வளை திரும்பிப்பார்த்தான்.

இவளே ஒரு பொன் மான் போன்றிருக்கிறாள். குட்டிமானைக் கொஞ்சுகின்ற இந்த பொன்மானை நான் கொஞ்சினால்?

மனதில் திடுமென்று எழும்பிய ஆசையைத் தட்டி அடக்கினான் கதிர்.

கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு வந்ததும் அவளை ஊன்றிப் பார்த்தான்.

''எஸ்டேட்டுல இருட்டு சீக்கிரமா கவிழ்ந்திடும். அயாம் கதிர்! உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா,கார்ல ஏறுங்க...உங்க வீடு எங்கிருக்குன்னு சொல்லுங்க. டிராப் பண்ணிடறேன்...''

அவனது கண்ணியமான பேச்சும் நடவடிக்கையும் நல்ல அபிப்பிராயத்தை உண்டு பண்ணியிருந்ததால்...மறுப்பு சொல்லாமல் ஏறிக் கொண்டாள் கஸ்தூரி.

''பை தி பை..தனியா கோவிலுக்குப் போயிட்டு வர்றீங்க போலிருக்கு..இந்த எஸ்டேட்டுக்கு நீங்க புதுசா? படிச்சுட்டிருக்கீங்களா?''

அவளது பேச்சுக்கு மதிப்பு கொடுத்து சிரமம் பாராமல் மான்குட்டியைக் காப்பாற்றித் தந்தவன் ஆயிற்றே...?

அவனிடம் விபரம் சொல்வது தவறில்லை என்று தோன்றியது. ''வனதுர்க்கை கோயிலுக்கு போனேன். எங்கப்பா இந்த எஸ்டேட்டுல தான் பல வருஷமா வேலை பார்க்கிறாரு. நான் ஹாஸ்டல்லே தங்கிப் படிச்சேன். பி.ஈ..படிப்பு முடிஞ்சுடுச்சு. பேரு கஸ்தூரி!''

''கஸ்தூரி...கஸ்தூரி மான்...'' தனக்குள் முணுமுணுத்தவன், அவளையும்

**''ரூ.70ஆயிரம்போட்டுவண்டியை வாங்கிக் கொடுத்துட்டு, எங்களால கவலைப்பட முடியாதுப்பா''**

**''பத்திரமா நான் வந்துடுவேம்பா''**

**''நீ வந்துடுவே... வண்டி பத்திரமா வந்து சேரணுமே!''**

**-சீர்காழி வி.ரேவதி.**



அவளது மடியிலிருந்த மான் குட்டியையும் பார்த்துவிட்டு...தலையைச் சற்றே சரித்து கடகடவென்று சிரித்தான் கதிர்.

''எ..எதுக்கு சிரிக்கிறீங்க சார்?'' துணிந்து கேட்டு விட்டாள். செக்கர் வானமாய் முகம் சிவந்து போனது.

''காட்டு விலங்குகளைப் பிடிச்சு வச்சுக்கிறதும் வளர்க்கிறதும் சட்டப்படி குற்றமில்லையா? இந்த மான் குட்டியை என்ன செய்யறதா உத்தேசம்?''

அவன் வேண்டுமென்றே பேச்சை மாற்றியது அவளுக்கு புரிந்தது.

''அதான் எனக்கும் புரியலை...ஏதாச்சும் ஐடியா சொல்லுங்களேன் சார்! வீட்டுக்கு இதை எடுத்துட்டுப் போனாலும் திட்டு தான் விழும்...நீங்க இதுக்காக சிரிச்சதா தெரியலையே?''

''புத்திசாலி தான்..கஸ்தூரிங்கிற பேரு உங்களுக்கு ரொம்ப பொருத்தமா இருக்கு...

கஸ்தூரி...! கஸ்தூரி மான்...! இதை நினைச்சு தான் சிரிச்சேன்..'' வெளிப்படையாய் பேசிவிட்டு முறுவலித்தான்.

''இந்த மானை எங்கிட்டே கொடுத்துடுங்க..வனத்துறை அதிகாரி எங்களுக்கு குடும்ப நண்பர் தான் அவர் கிட்டே ஒப்படைச்சுடறேன்...''

''ரொம்ப நன்றி!''

இருவரின் விழிகளும் நேசமாய் மோதிக் கொண்டன.

''அதோ அந்த திறந்த வெளி அய்யனார் கோவில் இருக்கே..அங்கே இறக்கி விட்டுருங்க..வீடு பக்கம் தான்..நான் போயிடுவேன்...''

மான்குட்டியை அவனது காரிலேயே விட்டுவிட்டு

**''கபாலியை பேராசை பிடிச்சவன்னு ஏன் சொல்றிங்க...?''**

**''பின்னே... ஒரு தடவையாவது உலக வங்கியில கொள்ளை அடிக்கணும்னு சொல்றானே..''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை**



மூங்கில் கூடையுடன் இறங்கிக் கொண்டாள்.

''மரத்துக்கு கீழே நிக்காதீங்க கஸ்தூரி! மறுபடியும் ஏதாவதொரு பாம்பு கழுத்துல மாலை மாதிரி விழுந்துடப் போகுது..பத்திரமா போங்க!''

அவன் பேசியதும் திகைத்தாள்.

''வர்ற வழியில உங்களைப் பார்த்தேன். அதான்...ஜாக்கிரதையா போங்க கஸ்தூரி...பை...!''

''தேங்க் யூ ஸோ மச்

நான்கு விழிகளும் கலந்தபோது...கஸ்தூரியின் இதயக் கூட்டிற்குள் பஞ்சவர்ணக்கிளி சிறகடித்தது.

அவனது கார் தூரத்தில் சென்று மறையும் வரை..பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள்.

மான்குட்டியை மட்டுமல்ல...கதிர் என்னுடைய இதயத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டு போய்விட்டாரே?

யார் இவர்?

இவரது ஊர் என்ன? இவரைப் பற்றி ஒரு விபரமும் தெரிந்து கொள்ளவில்லையே?

ஒன்றுமே தெரியாத நிலையில்...அவரிடம் மனதைப் பறி கொடுத்து விட்டேனே?

கனத்த மனதுடன் மேட்டிலிருந்த வீட்டை நோக்கி மெல்ல நடந்தாள்.



## 6

இரவு முழுவதும் கஸ்தூரி தூங்கவே இல்லை.

குழிக்குள் இருந்த மான்குட்டியைத் தூக்கிக் கொண்டு அவளிடம் கதிர் நீட்டிய காட்சியும், அவனுடன் காரில் அருகில் அமர்ந்து வந்த போது அவன் பேசிய காட்சியும் திரும்பத் திரும்ப மனக்கண்ணில் வந்து போயின.

கஸ்தூரி...கஸ்தூரி மான் என்று மென்மையான குரலில் அவளது செவியில் கதிரி கிசுகிசுப்பாய் அழைப்பது போன்றதொரு பிரமை..!

ஹீம்..! நானொரு ஏழை..! அவரோ பெரும் பணக்காரராய் தோன்றுகிறார். ஏணி வச்சாலும் எட்டாதே? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல்..நான் அவரை நேசிக்கிறேனே? இது தவறல்

லவா?

தன்னைத் தானே அவ்வப்போது சாடிக் கொண்டாலும்...தண்ணீருக்குள் அமுக்கப்பட்ட பந்து குபீரென்று எம்பி மேலெழுவது போல..கதிரின் ஞாபகம் தான் சதா வந்து தொலைத்தது.

''என்னகஸ்தூரி? கோவிலுக்குப் போயிட்டு வந்ததிலிருந்து சரியாவே பேசமாட்டேங்கிறே?''

அக்கா மனோகரி கேட்டு விட்டாள்.

''இ..இல்லக்கா..லேசா தலைவலி..வேற ஒண்ணுமில்ல...'' மழுப்பினாள்.

பாம்பு தன் மேல் விழுந்ததையோ..மான்குட்டியின் சமாச்சாரத்தையோ..அவள் சொல்லவே இல்லை.

காதல் புகுந்து கொண்டதால்..மனம் தனிமையை மட்டும் விரும்பியது.

உள்ளம் கவர்ந்த கதிருடன் கனவுலகில் சஞ்சரித்தாள்.

இறக்கைகள் முளைத்து ஆகாயத்தில் பறப்பதைப் போன்ற சுகானுபவத்தை..அவள் நிரம்பவே ரசித்தாள்.

மறுநாள் இரவு அப்பா காசியின் வரவிற்காக வீடே ஆவலுடன் காத்துக் கிடந்தது.

ஆனால்...இரவு பத்தரை மணி வாக்கில் வந்து சேர்ந்த காசி..பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார்.

கடைசி நேரத்துல கையை விரிச்சுட்டாங்கம்மா...பணம் கிடைக்கலை..என்று தழுதழுத்தார்.

''ஏன் அப்பா? பணம் தர்றதா நம்பிக்கையா சொன்னாங்கல்ல...''

விதிர்த்துப் போய் கேட்

**''தினமும் தூங்கி எழுந்ததும் என்ன பண்ணுவீங்க...?''**

**''இதென்ன கேள்வி... ஆபிஸிலிருந்து கிளம்பி வீட்டுக்கு வந்துடுவேன்''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



டாள் கஸ்தூரி.

''என் சம்சாரம் சண்டை போடறா..அவளை மீறி நான் பணம் தர முடியாது காசின்னு...சொல்லிட்டானே.''

''ஐயையோ..அப்ப அவரோட கதி? ஜெயிலுக்குப் போகவேண்டியது தானா..? அவர் தாங்க மாட்டாருப்பா..

ஐயோ..நானும் போய் சேர வேண்டியது தானா?''

தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் மனோகரி.

''அப்பா...! நம்ம முதலாளிகிட்டே ஒரு வாட்டி உதவி கேட்டுப் பார்த்தாலென்ன?''

கஸ்தூரி தயங்கியபடி கேட்டாள்.

''வேணும்னா அவரு நமக்குத் தந்தாரே அந்த நிலத்துப் பத்திரத்தை அவரு கிட்டே திரும்பித் தந்துட்டு..பணஉதவி கேட்டுப் பாருங்களேன்...''

''ஐயோ,..அவருகிட்டே எப்படி போய் கேட்கிறது.'' தர்ம சங்கடப்பட்டார் காசி.

''வேற வழியில்ல..அவரு நமக்கு சாமி மாதிரின்னு சொல்வீங்கல்ல? சாமி கிட்டே நம்ம நிலைமையை எடுத்துச் சொல்லுங்கப்பா...அவருக்கு ரொம்பவும் இளகின மனசு..அவரே மனசு இறங்கி கண்டிப்பா..நமக்கு உதவி பண்ணுவாரு..பாருங்களேன்..எனக்கு அந்த நம்பிக்கை இருக்குப்பா...''

''நம்ம குடும்பத்து மொத்த சுமையையும் அவரு தலைமேலேயே கட்டறோமே?ன்னு சங்கடமா இருக்கு கஸ்தூரி!''

''சங்கடப்பட்டா எப்படிப்பா? நமக்கு வேற வழி இல்லையே? வேணும்னா..நானும் உங்க கூட வரட்டுமா அப்பா?''

''எனக்கே கேட்கிறதுக்கு தயக்கமா இருக்கு..பாவம்..நீ படிச்ச பொண்ணு வேற...நீ எப்படி கேட்பே?''

''இனாமா கேட்டா தானேப்பா தப்பு? நான் கடனா கேட்கப்போறேன்...''

''கடனா?'' காசி திகைத்துப் போய் அவளை ஊன்றிப் பார்த்தார்.

''ஆமாப்பா நான் தான் படிச்சு முடிச்சுட்டேன்ல? அவங்களுக்கு எத்தனையோ நிறுவனங்கள் இருக்குல்ல? அதுல எதுலேயாச்சும் எனக்கு வேலை போட்டுத் தரச் சொல்லிக் கேட்கணும். வர்ற சம்பளப் பணத்துல மாசாமாசம் இந்தக் கடனை கொஞ்சம் கொஞ்சமா அடைச்சுடலாமே?

இதுக்கு நான் வந்து..ஐயாவைப் பார்த்து கேட்டாத் தான் முறையா

இருக்கும். வரட்டுமாப்பா?''

''எதைத்தின்னா பித்தம் தெளியும்கிற நெலமையில நாம இருக்கோம். கஸ்தூரி சொன்ன யோசனைப்படி நடக்கலாமேங்க?'' என்றாள் கனகம்.

சற்று யோசித்துவிட்டு..மெல்லத் தலையாட்டினார் காசி.

''சரி...வேற என்ன செய்யறது?''

அப்பா ஒப்புக் கொண்டதும் அப்பாடா என்ற நிம்மதி ஜனித்தது.

மான்குட்டியை அந்தப் பெரிய குழியிலிருந்து கதிர் மூலமாக மீட்ட போது..இதே நிம்மதி தான் மனதில் ஜனித்தது.

முதலாளியை சந்திப்பதற்கு சந்தோஷமாக ஆயத்தமானாள் கஸ்தூரி.

முதலாளி..அவளது தலையில் பெரிய குண்டைத் தூக்கிப் போடுவார் என்று அவள் கனவிலும் கருதவில்லை.



## 7

வெளியில் சென்றிருந்த காசி..கால் மணிநேரத்தில் அவசரமாய் திரும்பி வந்தார்.

''கஸ்தூரி! நமக்கு நேரம் நல்லாயிருக்கு போலிருக்கு. முதலாளி இதே 'நெடுங்குண்டம்' பங்களாவுல தான் இருக்காராம். நாளைக்கு காலையில 'கண்டமனூர்' பங்களாவுக்குப் போயிடுவாராம்...

பெரிய கோடீசுவரர்...! எப்ப எங்கே இருக்காருன்னு யாருக்குத் தெரியும்? அதான்...போயி அங்க விசாரிச்சுட்டு வந்தேன்..கிளம்பலாமா?''

''கிளம்பலாம் அப்பா!''

ஆகாய நீல வண்ணத்தில் எளிய காட்டன் புடவை கட்டி தயாராய் இருந்தாள் கஸ்தூரி.

''முதலாளி ஐயா மறுக்காம பணஉதவி செஞ்சுடணும் அதுக்கு நீ தான் அருள் புரியணும் தாயே...!''

வனதுர்க்கையை மனமுருக வேண்டிக் கொண்டு அப்பாவின் பின்னால் நடந்தாள்.

அந்தக் காலத்து ஜமீன் மாளிகை...!

பிரமாண்டமாய் உறுதியாய்..பணத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

பங்களாவின் முன்புறத் தோட்டமும் பசும்புல் வெளியும் அவளது கவனத்தை ஏனோ ஈர்க்கவில்லை.

மனதிற்குள் 'முதலாளி பணம் தருவாரா? மாட்டாரா?' என்று பட்டி மன்றப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

முதலாளி ஐயாவுக்கு கருணை உள்ளம்..கண்டிப்பா பணம் தந்துடுவாரு...

அடிக்கடி தனக்குள் சமாதானம் செய்து கொண்டாள்.

சதாசிவத்தின் உதவியாளர் போர்டிகோவில் நின்றபடி யாருடனோ போனில் பேசிவிட்டுத் திரும்பினார்.

''தம்பி! நாங்க ஐயாவைப் பார்க்க வந்திருக்கோம்'' என்றார் காசி.

''ஓ...காசியா? இருங்க..ஐயாகிட்டே பெர்மிஷன் கேட்டுட்டு வந்துடறேன்..'' என்றபடி உள்ளே போனார்.

போன சுருக்கில் திரும்பி ஓடி வந்தார்.

''ஐயா உங்களை உள்ளே வரச் சொன்னாரு'' என்று கூறி விட்டு கஸ்தூரியை ஒரு கணம் ஊன்றிப் பார்த்தார்.

பார்வையைத் தழைத்தபடி அப்பாவின் பின்னே நடந்து சென்றாள்.

பரந்த ஹாலில் சோபாவில் அமர்ந்து..சீரியஸான முகபாவனையுடன் ஏதோவொரு பைலைப் புரட்டிக் கொண்டிருந்தார் சதாசிவம்.

''வணக்கம் ஐயா.''

காசியின் குரலைக் கேட்டு நிமிர்ந்தவர்...கஸ்தூரியும் வந்திருப்பதைப் பார்த்து விட்டு சற்று திகைத்தார்.

**''மகளிரணித் தலைவி மேல அம்மன் வந்ததால் ஆடறார்... தலைவரும் ஏன் ஆடறார்?''**

**''அவருக்கு சம்மன் வந்துடுச்சாம்...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



''வா..காசி! வீட்டுல எல்லாரும் சவுக்கியமா?'' ''உங்க தயவுல ஒரு குறையும் இல்லாம இருக்கோம் முதலாளி!''

''உன்பொண்ணுக்கு..இந்த வருஷத்தோட படிப்பு முடிஞ்சிருச்சுல்ல? இவளுக்கு கல்யாணம் முடிவு பண்ணிட்டியா? பணஉதவி தேவையா?''

காசியும் கஸ்தூரியும் ஸ்தம்பித்துப் போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

காசி தயங்கியப்படி மகளைப் பார்த்தார்.

''ஐயா! உங்க புண்ணியத்துல பி.ஈ. படிச்சு முடிச்சுட்டேன். உங்க தயாவால தான் எங்க அக்கா கரையேறினா...''

அதற்கு மேல் பேச முடியாமல்..தயங்கி நிறுத்தினாள் கஸ்தூரி.

''தயங்காம....இப்போ நான் என்ன செய்யணும்னு சொல்லும்மா... தொழிலாளர்களை எப்பவும் நான் என்னோட குடும்ப உறுப்பினர்கள் மாதிரி தான் நெனக்கிறேன். நீ எனக்கு மகள் மாதிரி தான்...''

முறுவலித்தார் சதா சிவம்...

சுருக்கமாக விஷயத்தைச் சொல்லி முடித்தாள் கஸ்தூரி.

''ஐயா! எங்க குடும்பத்துக்கு நீங்க எவ்வளவோ செஞ்சுட்டீங்க...அதுக்கே நாங்க உங்களுக்கு ஜென்மத்துக்கும் கடன் பட்டிருக்கோம். எனக்கு உங்க நிறுவனத்துல எதுலேயாச்சும் வேலை போட்டுக் குடுங்க ஐயா! இந்தப் பணத்தை கடனா தந்து மாசா மாசம் என்னோட சம்பளத்துல பிடிச்சுக்கோங்க...ப்ளீஸ்....''

''கடனாவா? ஏன்? காசி

**''சமையலைப் பற்றி எதுவுமே தெரியாத மணப்பெண் தேவை'ன்னு விளம்பரம் பண்ணியிருக்காங்களே...?''**

**''எதை சமைச்சுப் போட்டாலும் வாயைத்திறக்காமல்சாப்பிட்டுட்டுப் போயிடுமுல்ல...?''**

**-சீர்காழி வி.ரேவதி.**



க்கு ஒரு கஷ்டம்னா..நான் பணம் தந்து உதவமாட்டேனா?'' என்றார் சதாசிவம்.

காசி நெகிழ்ந்து போய்விட்டார்.

''ஐயா! நிசமாவே நீங்க எங்களுக்கு சாமி தான்....எங்க குலசாமி!''

கையெடுத்து கும்பிட்டு அவரது காலில் விழுந்தார் காசி.

''எந்திரி காசி என்னது இது? நான் சாதாரண மனுஷன்...என் கால்லே போய்...எந்திரிப்பா...''

உரிமையாய் அதட்டினார் சதாசிவம்.

''ஐயா....! தயவு செஞ்சு புரிஞ்சுக்கங்க..இதை நீங்க கடனாத்தான் தரணும் ப்ளீஸ்....''

கெஞ்சினாள் கஸ்தூரி.

''ஆமாங்க ஐயா! எனக்கு இங்க வர்றதுக்கே ரொம்ப சங்கடமா இருந்துச்சு...கஸ்தூரிக்கு வேலை போட்டுத் தந்துடுங்க ஐயா...! கடனா வாங்கிட்டா தான்...''

எங்க எல்லோருக்கும் திருப்தி...என்றார் காசி.

ஒரு கணம் யோசித்த சதாசிவம்...கஸ்தூரியை ஊன்றிப் பார்த்தார்.

''உன்னோட சுயகவுரவத்தையும் தன்மானத்தையும் நான் மதிக்கிறேன்.உனக்கு வேலை தானே வேணும்? போட்டுத் தந்துட்டா போச்சு...''

மனதில் இருந்த பெரிய பாரம் இறங்கினாற் போலிருந்தது கஸ்தூரிக்கு..அவர் பஸ்ஸரை அழுத்தியதும் உதவியாளர் ஓடி வந்தார். அடுத்த சில நிமிடங்களில்...ரெண்டு லட்ச ரூபாயை காசியிடம் தந்துவிட்டார் சதாசிவம்.

''ஐயா! இது...சாதாரண உதவி இல்லீங்க. தக்க சமயத்துல இதைக் குடுத்து ரெண்டு உசுரை காப்பாத்திட்டீங்க நன்றி ஐயா!''

கண் கலங்கினார் காசி.

''ஐயா..! எனக்கு எந்த நிறுவனத்துல வேலை?''

எப்போ நான் வேலையில சேரணும்?

ஆர்வமாய் கேட்டாள் கஸ்தூரி.

''உனக்கு இந்த பங்களாவுல தான் வேலை...'' குறும்பாய் நகைத்தார் சதாசிவம்.

''இங்கேயா? என்ன வேலைங்க ஐயா?''

''என்ன வேலை குடுத்தாலும்..நீ செய்வேன்னு நான் நெனச்சேன். அது தப்புங்கிறியா கஸ்தூரி?''

''ஐயையோ...அப்படியெல்லாம் இல்லைங்கஐயா! என்னைப்படிக்க வச்சதே நீங்க தானே? என்னோட படிப்புக்கேத்த வேலையை..உங்க ஆபீசுல போட்டுக் குடுப்பீங்கன்னு எதிர் பார்த்து வந்தேன்.

பரவாயில்லீங்க ஐயா! வீட்டு வேலை, சமையல் வேலைன்னு நீங்க எந்த வேலை குடுத்தாலும்....அதை மனப்பூர்வமாக செய்றதுக்கு நான் காத்திருக்கேன். அது என் கடமையும் கூட.. உத்தரவு போடுங்கய்யா... அந்த உரிமை உங்களுக்கு இருக்கு..''

சதாசிவத்தின் முகத்தில் அதுவரை தாண்டமாடிய புன்சிரிப்பு மறைந்தது.

''உத்தரவில்லம்மா... உன் கிட்ட ஒரு உதவி கேட்கிறேன் செய் வியா?''

''என்னங்க ஐயா? உதவிங்கிற பெரிய வார்த்தையெல்லாம் சொல் றீங்க? என்ன செய்யணும்னு சொல்லுங்க.. கண்டிப்பா அதை நான் நிறைவேத்தறேன்..''

''நிஜமாவா?''

''நிஜமாத்தான் சொல் றேன் ஐயா!''

''வாக்கு மாற மாட்டியே?''

''ஊகூம்.. வாக்கு மாறுகிற பழக்கம் எனக்கில்லைங்க ஐயா!''

''இதை நான் ஊர்ஜிதமா நம்பலாமா?''

''சத்தியமா நம்பலாம்!''

சத்தியம் என்ற வார்த் தையை...அவள் உறுதி தொனிக்க கூறியதும்.. சதாசிவம் அவளை தீர்க்க மாகப் பார்த்தார்.

இப்படியொரு காரியத்தை அவர் செய்யச் சொல்வார் என்று கஸ்தூரி கடுகத்தனை கூட எதிர் பார்க்கவில்லை.

**''உங்க பெண்ணை என்ன மாமா இப்படி வளர்த்து வச்சிருக்கீங்க?''**

**''ஏன் மாப்பிளே... என்னாச்சு?''**

**''எவ்வளவு சிரத்தையோடு சமைச்சுப் போட்டாலும் 'எங்க அப்பா சமையல் மாதிரி இல்லை'னு சொல்றாளே!''**

**-சீர்காழி வி.ரேவதி, சென்னை.**





# 8

**க**ஸ்தூரி ஆர்வம் ததும்ப...சதாசிவத்தையே பார்த்தாள்.

சதாசிவம் தொண்டையைக் கனைத்தார்.அந்தப் பரந்த ஹாலில் ஓரமாய் நின்றிருந்த உதவியாளரை அர்த்த புஷ்டியுடன் நோக்கினாள்.

மறுகணம்... அந்த உதவியாளர் அவசரமாய் வெளியேறியதும்...சதாசிவம் கஸ்தூரியை ஏறிட்டார்.

''என் மனசுல இருக்கிற கவலையை... வெளி மனுஷங்ககிட்டே சொல்லி என்னோட பாரத்தை..இது வரைக்கும் நா இறக்கி வச்சதேயில்லை.

''உன்கிட்டே சொல்லணும்னு தோணுச்சு... அத்தோட உன் மூலமா நல்ல தீர்வு கிடைக்கும்னு ..உள்ளூர ஒரு நம்பிக்கை..''

உங்க நம்பிக்கைக்கு நான் பாத்திரமானது என்னோட பாக்கியம் தான் ஐயா! சொல்லுங்க ஐயா!

கஸ்தூரிக்குள் மகிழ்ச்சி வெள்ளம் புரண்டோடியது. ''அந்தக் கவலை தான் என்னை ஆட்டிப் படைக்குது..

புரியும்படியா சொல்றேன். ராமலிங்கம் எனக்கொரு ஒண்ணு விட்ட அண்ணன்.. பெரியப்பமா மகன்.. நானும் ராமலிங்கமும் அண்ணன் தம்பிகள் மாதிரி பழகலை... நெருங்கின நண்பர்கள் மாதிரி தான் உயிரா இருப்போம்.

அது என்ன சாபமோ தெரியலை... கறிவேப்பிலை கொத்து மாதிரி அவனுக்கு ஒரே பிள்ளை... எனக்கும் ஒரே பிள்ளை தான்...

அவனோட பிள்ளையும் எம் மகனும் கூட இணை பிரியவே மாட்டாங்க... என்னைப் போலவே ராமலிங்கமும் சில வருஷங்களுக்கு முன்னாடி மனைவியை இழந்துட்டான்.

ராமலிங்கத்தோட பிள்ளைக்கு மூணு வருஷத்துக்கு முன்னாடி கல்யாணம் ஆயிடுச்சு... வம்சத்துக்கொரு வாரிசு பிறக்கலை.

டெஸ்ட் பண்ணிப் பார்த்ததிலே... அவனோட மருமகள் கிட்டே குறையிருக்குன்னு டாக்டர் சொன்னாங்களாம். கரு முட்டையை உருவாக்குற சக்தி அவங்களோட கர்ப்பபைக்கு இல்லையாம்.. இந்த விஷயம் கேள்விப்பட்டதிலேர்ந்து ராமலிங்கம் ரொம்ப உடைஞ்சு போயிட்டான்.

இருந்தாலும்... ஏதோ ஒரு நம்பிக்கையில.. குடும்பத்தோட கோவில்

குளத்துக்கு அலைஞ்சாங்க...

சமீபத்துல திருவண்ணாமலைக்குப் போயிட்டு ஊர் திரும்பறப்போ அவங்க வந்த கார் மேல லாரி மோதி... பெரிய விபத்து நடந்திடுச்சு..''

''ஐயையோ...!'' பதறினாள் கஸ்தூரி.

''உயிர்ச்சேதம் ஏதாச்சும் ஆயிடுச்சா ஐயா!''

திகிலுடன் கேட்டாள் கஸ்தூரி.

இல்ல.... ஆனா அதுக்கு இணையான பெரிய இழப்பு ஏற்பட்டுப் போச்சு.

ராமலிங்கத்தோட புள்ளை ரவிக்கு மூளைச்சாவு ஏற்பட்டதோடு.....

ராமலிங்கத்துக்கும் தண்டு வடத்துல நல்ல அடி... ரவியை இப்படியே வச்சிருந்தா பிரயோஜனம் இல்லைன்னு டாக்டர்ஸ் சொல்லிட்டாங்க.

ஆனா ராமலிங்கம் இந்தச் செய்தியை தன்னோட மருமகளுக்கு தெரியாம மறைக்கச் சொல்லிட்டான். ரவிக்கு மூளை தானே செயலிழந்திருக்கு... அவனோட உயிரணுவை எடுத்து எப்படியாச்சும் வம்சத்துக்கு கொரு வாரிசை உருவாக்கிடணும்னு கதறிட்டிருக்கான்.

வாரிசு உருவாயிடுச்சுன்னா...டாக்டர்ஸோட ஆலோசனைப் படி ரவியோட உறுப்புகளை எடுத்து பாதிக்கப்பட்டவங்களுக்கு தானம் தரவும் தயாரா இருக்கான்.

இப்போ உடனடியா ஒரு கரு முட்டையை தானம் வாங்கி அதை கருத்தரிக்க வச்சு... அந்த மருமகளோட கர்ப்பப்பையில் செலுத்தலாம்னா... அதிலேயும் ஒரு சிக்கல்..

அந்தப் பொண்ணு மனசளவுலே உடல் அளவுலே பாதிக்கப்பட்டிருக்காளாம்.. இப்போதைக்கு எந்த முயற்சி செய்தாலும் அது வீணாகத்தான் போகும்னு டாக்டர்ஸ் எச்சரிக்கிறாங்க..

ராமலிங்கத்தோட நெலமை யாருக்கும் வரக் கூடாதும்மா. சதாசிவம்...! என் வம்சம் தழைக்க ஒரு வழி சொல்லுன்னு அழறான்..! வம்சம் தழைக்க ஒரு ஏற்பாடு செஞ்சுட்டா... அந்த நிம்மதியிலேயே... நான் கண்ணை மூடிடுவேன்னு சொல்றான்..''

சதாசிவம் இதைச் சொல்லி முடித்துவிட்டு... துக்கம் தாளாமல் கண்ணீர் வடித்தார்.

''ஐயா! கேட்கவே ரொம்பக் கஷ்டமா இருக்கு. உங்களுக்கு எப்படி ஆறுதல் சொல்றதுன்னே தெரியலை...

ஐயா! என் மூலமா ஏதோ நல்ல தீர்வு கிடைக்ம்னு நம்பறதா சொன்னீங்களோ? அது என்னங்க ஐயா!

கஸ்தூரி அவரைப் பரிதாபமாய் பார்த்தபடி கேள்விக் கணையைத்

தொடுத்தாள்.

''ராமலிங்கத்தோட வம்சம்... கண்டிப்பாதழைக்கணும். கிட்டத்தட்ட எனக்கு ஈக்குவலான சொத்து பத்துகள் அவனுக்கு இருக்கு. அந்த வம்ச த்துக்கு ஒரு வாரிசை உருவாக்கித் தரேன்னு நான் வாக்கு தந்திருக்கேன். அதை நம்பி தான் அவனும் உயிரைப் பிடிச்சுட்டிருக்கான்... அதனால நீ தான் ஒரு வாடகைத் தாயா இருந்து அந்தக் குழந்தையைப் பெத்து தரணும்..''

''ஐ...யா...! என்ன சொல்றீங்க!''

''கோடிக்கணக்கா சொத்து குவிஞ்சு கிடக்கு... காசைத் தூக்கிப் போட்டா.. ஆயிரம் பேரு வாடகைத் தாயா இருக்க ஓடி வருவாங்க..

ஆனா... நான் அதை விரும்பலை. நல்ல குணாதிசயம் கொண்ட கண்ணியமான பொண்ணைத் தான் நான் தேடினேன்.

இப்பேர்ப்பட்ட பொண்ணு வயித்துலேர்ந்து தான்...நல்ல வாரிசு ஜனிக்க முடியும்கிறது.. என்னோட கருத்து!

என் வம்சத்தையும் ராமலிங்கத்தோட வம்சத்தையும் நான் பிரிச்சுப் பார்க்கலைங்கிறதை நீ புரிஞ்சுக்கணும்.''

நாதழுதழுக்கப் பேசினார் சதாசிவம்.

''முதலாளி! எம் பொண்ணுக்கு இன்னமும் கல்யாணம் ஆகலை... அவ எப்படி?''

காசி மனம் தாளாமல் கேட்டு விட்டார்.

''காசி! உன் பொண்ணோட எதிர்காலத்தைப் பத்தி கவலைப்படாதே.. அவளுக்கு நல்ல வாழ்க்கையை அமைச்சு தர்றது என் பொறுப்பு.. என் மேல உனக்கு நம்பிக்கை இருக்குல்ல.''

**''தலைவர் வீட்டுக்கு ரெய்டுக்கு வந்த சி.பி.ஐ. எப்படி திரும்பி போனாங்க?''**

**''என்னோட 'அசையும் சொத்து' தொண்டர்கள்... 'அசையா சொத்து' கோமாவில படுத்திருக்கிற என் மனைவிமட்டும்தான்னுசாதுர்யமாக சொன்னதால தான்!''**

**-பா.மனோகரன், சென்னை.**



''சாமி! உங்களை நான் நம்பாம இருப்பேனா?''

''கஸ்தூரி! நீ என்னம்மா சொல்றே? இந்த விஷயம் வெளி உலகத்துக்கு தெரியாம பாத்துக்கலாம்... காசி! யாராச்சும் கேட்டா.. பொண்ணு மேல படிக்கணும்னு ஆசைப்பட்டா... வெளியூர்லே ஹாஸ்டல்லே சேர்ந்து படிச்சுட்டிருக்காள்னு சொல்லு..

கஸ்தூரியை...கேரள எல்லையில் இருக்கிற நம்ம இடுக்கி எஸ்டேட் கெஸ்ட் ஹவுஸ்லே தங்க வச்சு குழந்தை பிறக்கிறவரைக்கும்.. அவளை பத்திரமா பாத்துக்க வேண்டியது என் பொறுப்பு..!

கஸ்தூரி! ரவிக்கு எந்த நேரத்திலும் என்ன வேணாலும் நடக்கலாம். நாம்ப துரிதமா செயல்பட வேண்டிய நேரம் இது..!

ஒரு வம்சத்தை வாழையடி வாழையா தழைக்க வச்ச புண்ணியம் உனக்கு கிடைக்கும். வீட்டுக்குப் போயி..விஷயத்தை அம்மாகிட்டே சொல்லிட்டு வந்துடு... உடனடியா ட்ரீட்மெண்ட்லே நாம் இறங்கியாகணும்.''

கஸ்தூரிக்கு அதிர்ச்சியில் நா வறண்டது.

---



# 9

**க**ஸ்தூரிக்கு கதிரின் வசீகரமான முகம் தான் ஞாபகத்திற்கு வந்தது.

கதிரின் மனிதநேயத்தையும் கண்ணியத்தையும் பார்த்துவிட்டு... என்னையும் அறியாமல் மனதைப் பறிகொடுத்து விட்டேனே?

இது ஒரு தலைக்காதல் தான்..

இந்தக் காதல் கை கூடுவதற்கு சாத்தியமே இல்லை தான்..!

இருந்தாலும்.. இந்த பாழும் மனம் அவரையே விரும்புகிறதே?

அவரை மனதார விரும்பி விட்டு.. வேறொருவருக்கு கழுத்தை நீட்ட முடியாது.

கால முச்சூடும் இப்படியே இருந்து விட எண்ணி இருந்தேனே இப்போது..கல்யாணம் ஆகாமலே.. ஒரு குழந்தைக்கு நான் தாயாக வேண்டியிருக்கிறதே?

இதை..இந்த சகாயத்தை யார் என்னிடம் கேட்டிருந்தாலும் கண்டிப்பாக மறுத்திருப்பேனே?

கேட்பது யார்?

முதலாளி ஐயாவாயிற்றே! அவருக்கு எனது குடும்பமே நன்றிக்க

டன்பட்டிருக்கிறதே?

எனது விசுவாசத்தைக் காட்டுவதற்கு.. நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

வேறு வழியில்லை...ஐயாவுக்காக நான் இந்த தியாகத்தை செய்தே தான் தீர வேண்டும்.

மறுத்துப் பேசுவதற்கு...எனக்கு திராணியில்லை.. ஒப்புக் கொள்ளவும்.. மனம் ஒப்பவில்லையே?

இரு தலைக்கொள்ளி எறும்பு மாதிரி தவிக்கிறேனே? தெய்வமே? இதென்ன சோதனை?

துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது. கண்ணீர் இமைக்கரையைத் தாண்டி வழிந்து செல்லட்டுமா? என்று வினவியது.

சதாசிவம் பார்த்துவிடக்கூடாதே? என்று பார்வையைத் தழைத்து கண்களைச் சிமிட்டி கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டாள்.

''கஸ்தூரி! நீ மவுனமா நிக்கிறதைப் பார்த்தா உனக்கு இதுலே இஷ்டம் இல்லைன்னு தோணுது..''

சதாசிவம் பேசி முடிப்பதற்குள் இடைமறித்தாள்.

''அப்படியெல்லாம் இல்லைங்க ஐயா! எனக்கு சம்மதம் நீங்க ஆக வேண்டியதைப் பாருங்க... நாங்க வீட்டுக்குப் போயிட்டு வந்துடறோம்.''

''குட்..வெரிகுட்..ரெண்டு மணி நேரத்துல இங்க வந்துடுங்க.. நாம்ப கிளம்பிடலாம். கஸ்தூரி! நீ நல்லாயிருக்கணும்.. என் வயித்துல நீ பாலை வார்த்துட்டே.

நீ செய்யப் போறது சாதா

''பேய், பிசாசெல்லாம் நீங்க விரட்டு வீங்களாமே...?''

''ஆமா... உங்களுக்கு எதை விரட்டணும்?''

''1 மாசமா எங்க வீட்டுல டேரா போட்டிருக்கிற என் மாமியாரை விரட்டி அடிக்கணும்; முடியுமா உங்களால?''

**-சீர்காழி வி.ரேவதி,**



ரண விஷயமில்லம்மா... பேருதவி!

நானும் ராமலிங்கமும் உனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கோம்'' தழு தழுத்தார் சதாசிவம்.

''ஐயா! பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க...நியாயமா பார்த்தா.. இது நான் சொல்ல வேண்டிய வார்த்தை.. அப்ப நாங்க கிளம் பறோம் ஐயா!''

இருவரும் கைகூப்பி வணங்கிவிட்டு..பங்களாவை விட்டு வெளியே றினர்.

கஸ்தூரியையே இமை கொட்டாமல் நெகிழ்வுடன் பார்த்துக் கொண் டிருந்தார் சதாசிவம்.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும்..கனகம் அழுது புலம்பினாள்.

கஸ்தூரி வாயைத் திறக்கவே இல்லை. மவுனமாய் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

மனோகரிக்கு மனசாட்சி அறுத்தது.

''அப்பா! வேணாம்பா... இந்தப் பணத்தைத் திரும்பக் குடுத்துடுங்க.. என்னால தானே கஸ்தூரிக்கு.. இப்படியொரு இக்கட்டு வந்தது?''

''பெரியவருகிட்டே கஸ்தூரி வாக்கு குடுத்துட்டு வந்துட்டா. இனி மாத்திப் பேச முடியுமா?''

''என்னப்பா இது? தங்கச்சிக்கு கல்யாணம் காட்சி நடக்க வேணாமா?''

''ஐயா... நானாச்சுன்னு பொறுப்பேத்துக்கிட்டாரு அதுக்கு மேல என்னால மறுத்துப் பேச முடியல... சரி..புலம்பாதீங்க... விதிவிட்ட வழின்னு நாம்ப நடக்க வேண்டியதுதான்.''

''மாப்பிள்ளைக்கு போன் போடு...! வந்து பணத்தை வாங்கிக்கச் சொல்லு..எங்களுக்கு நேரமில்லே....இன்னும் ஒன்றரைமணி நேரத்துல நானும் கஸ்தூரியும் புறப்படணும்.''

கவனம்... அக்கம் பக்கத்துலேயும் சொந்தக்காரங்ககிட்டேயும் மேற்படிப்பு படிக்கப் போயிருக்கிறதா சொல்லுங்க.''

''மூத்தவளுக்கு பிரச்சினை வந்துச்சு. அதைத் தீர்க்கப் போன இளை யவ.. இப்படியொரு சிக்கல்லே மாட்டிக்கிட்டாளே?''

கனகம் மெல்லிய குரலில் தேம்பினாள்.

''உஷ்! அழுகையை நிறுத்து.. இயல்பா இருக்கப் பாரு உன்னோட சோகமான முகமே வெளியில காட்டிக் குடுத்துரும் போலிருக்கே.?

காசி அதட்டியதும். புடவைத் தலைப்பால் வாயைப் பொத்தியபடி மவுனமாக கண்ணீர் உகுத்தாள் கனகம்.

டைரியில் தனது மனக்குமுறல்களை எழுத்து வடித்வதில் கொட்டித் தீர்த்தாள் கஸ்தூரி.

சூட்கேஸில் வேண்டிய துணிமணிகளை எடுத்து அடுக்கி வைத்து டைரியை அதனடியில் வைத்தாள்.

கதிர்! ஐ லவ் யூ.. உங்க மனசுல என்ன இருக்கு?ன்னு தெரியல.

ஆனா.. என் இதயத்துல நீங்க தான் குடியிருக்கீங்க.. வேற வழி தெரியல கதிர்! அதனால இதுக்கு சம்மதிச்சுட்டேன். என்னை மன்னிச்சுடுங்க. இதுவும் நல்லதுக்கு தான் கதிர்!

ஒரு குழந்தைக்கு நான் தாயாகப் போறேன். இந்தக் காரணத்தைக் காட்டியே. நான் தப்பிச்சுடுவேன்.

வீட்டுல கல்யாணப் பேச்சை எடுத்தா. இதை சொல்லியே அவங்க வாயை அடைச்சுடலாம் பாருங்க..

மானசீகமாய் மனதிற்குள் பேசிக் கொண்டாள் கஸ்தூரி.

கஸ்தூரி!...ஐ லவ் யூ டூ... கஸ்தூரி! கஸ்தூரி மான்..!

கொஞ்சலாய் கதிர் பேசி... மந்தகாசமாய் சிரிப்பது போன்றதொரு பிரமை.

கண்ணீர் உகுத்தபடி விழிகளை மூடி அமர்ந்திருந்த கஸ்தூரிக்கு.. அந்த பிரமை ஒரு இதத்தையும் சுகத்தையும் தந்தது நிஜம்.

அது மட்டுமா?

ஒரு மான்... அதுவும் பொன் மான் மாதிரியே இருக்கியே கஸ்தூரி? ஐ லவ் யூடா...

பேசியபடி நெருங்கி வந்து கதிர்... அவளது நெற்றியில் இதழ் பதித்து உச்சி முகர்ந்ததைப் போன்றதொரு பகல் கனவு..!

இன்பம் கனவில்....!

துன்பம் எதிரில்...!

**''தலைவர் உட்கார்ந்து பேசறதுக்குக் காரணமே, தொடைதட்டிப் பேசணும்னுதான்''**

**''அதுல என்ன தப்பு...?''**

**''அவர் தட்டுறது, பக்கத்துல உட்கார்ந்திருக்கிற மகளிரணித் தலைவியோட தொடை!''**

**-சீர்காழி வி.ரேவதி,**



காரணமேன் தோழி...!

மாலைப்பொழுதின் மயக்கத்திலே...!

நான் கனவுகண்டேன் தோழி....!

அவளுக்கு மிகவும் பிடித்தமான பாடல் வரிகள்...

அந்தப் பாடல் வரிகள் கணீரென்று செவிகளில் எதிரொலித்தாற் போலிருந்தது.

நீண்ட பெருமூச்செறிந்து சூட்கேஸை மூடி வைத்தாள்.

''கஸ்தூரி! உனக்குத் தேவையானதை எடுத்து வச்சுட்டியா? நேரம் ஆயிட்டிருக்கும்மா...'' என்றபடி அறைக்குள் காசி வந்தார்.

சட்டென்று சுதாரித்து முகத்தை இயல்பாக வைத்தபடி ஏறிட்டாள்.

எடுத்து வச்சாச்சு..நாம்ப கிளம்பலாமா?''

''இரு...சாப்பிட்டுட்டு போம்மா.. வெறும் வயித்தோட போகாதே கஸ்தூரி!''

கனகம் கெஞ்சினாள்.

''விட்டால் கோவென்று அழுதுவிடுவாள் போலிருந்தது.

கஸ்தூரிக்கும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

''உனக்கு பிடிச்ச பருப்பு உருண்டைக்குழம்பு...! உன் கையால காலையில ருசியா சமைச்சு வச்சது தான்.. சாப்பிடும்மா...''

அம்மாவும் மனோகரியும் கலங்கிய விழிகளோடு அவளையே பார்த்தனர்.

குழம்பை சாதத்தில் ஊற்றிப் பிசைந்து பருப்பு உருண்டையைப் பிட்டு வாய்க்குள் திணித்துக் கொண்டாள்.

காரசாரமாய் ருசியாய்

**''எதுக்குங்க கிழிக்கிற தேதி காலண்டர் பழசு நிறைய வேணும்னு கேட்கறீங்க?''**

**''டாக்டர், பசங்களுக்கு நிறைய ''டேட்ஸ்'' வாங்கி சாப்பிட கொடுக்கச் சொன்னாரே!''**

**-பழ.சவிதா சிவமணி,**
**ஈரோடு மாவட்டம்.**



அவள் சமைத்தது தான்... மூன்று கவளங்களுக்கு மேல் தொண்டைக் குள் இறங்க மறுத்து புரட்சி செய்ததும்... சட்டென்று எழுந்து கொண் டாள்.

''வேண்டாம்மா... போதும்! என்னால முடியல...'' என்ற படி கையைக் கழுவி விட்டு வந்தாள்.

''உனக்கு வன துர்க்கை அம்மன் துணையா இருப்பா'' கனகம் நெற் றியில் விபூதி பூசி விட்டாள்.

''கஸ்தூரி! இப்பக் கூட ஒண்ணும் கெட்டுப் போகல... உன் முடிவை மாத்திக்கோ... முதலாளி ஐயா கிட்டே நான் வந்து பேசறேன்...''

மனோகரி தங்கையின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

''உன் தியாகத்தால என் வாழ்வு மலரணுமா? தயவு செஞ்சு முடிவை மாத்திக்கம்மா''

''வாக்கு மாறக்கூடாது. வாக்கு தவறவும் கூடாதுக்கா... முடிவெ டுத்தது எடுத்தது தான்... கண்டதையும் நெனச்சு மனசைக் குழப்பிக் காதே... அது வயித்துல இருக்கிற பாப்பாவுக்கு நல்லதில்ல... உன் உடம்பைப் பார்த்துக்கோ அக்கா! நா வரட்டுமா?''

தீர்மானமாய் பேசி விட்டு அப்பாவுடன் நடந்தாள்.

அவள் எடுத்த முடிவு... 'அவளை எப்படியெல்லாம் அலைக்கழிக் கப்போகிறது?' என்பதை நினைத்து... விதி வினயமாய் சிரித்தது.



# 10

**இ**டுக்கி எஸ்டேட் கெஸ்ட் ஹவுஸ்...! கிட்டத்திட்ட அது பங்களா சைஸூக்கு தான் இருந்தது.

நான்கு மாதங்கள் கடந்திருந் தாலும்... கஸ்தூரிக்கு இங்கு நேற்று தான் வந்தது போலிருந்தது.

பலப்பல மருத்துவப் பரிசோதனைகள்... சிகிச்சைகளுக்கு ஆட் பட்டு... கருத்தரித்தாள் கஸ்தூரி.

''அம்மாடி கஸ்தூரி! அதிர்ஷ்டம் என் பக்கம் இருக்கம்மா ஒன்றரை மாசத்துல நீ உண்டாயிட்டே...சந்தோஷம்மா... உன்னை கவனிச்சுக்கி றதுக்கு... வயசான நர்ஸம்மாவை அப்பாயிண்ட் பண்ணியிருக்கேன்.

வேளா வேளைக்கு பக்குவமான ஆரோக்கியமான உணவு வகை களை சமைச்சுப் போடறதுக்கு... ஒரு மாஸ்டரை ஏற்பாடு செஞ்சிருக்

கேன். நான் வாராவாரம் வந்து உன்னைப் பார்க்கிறேன். காசி மாசம் ரெண்டு வாட்டி உன்னைப் பார்க்க வருவான்.

உங்கம்மா விருப்பப்பட்டா... அவங்களும் வரலாம். எந்தத்த டையும் இல்ல...

உனக்கு எட்டாவது மாசம் தொடங்கும் போது... உங்கம்மா உன் கூடவே தங்கக்கட்டும்.

டிரைவர், தோட்டக்காரரு, எடுபிடி ஆள் எல்லாரும் உதவிக்கு இருப்பாங்க...

எந்த நேரத்திலும் எனக்கு நீ போன் பண்ணலாம். மனசுல என்ன ஆசை இருந்தாலும்... தயங்காம சொல்லு நான் நிறைவேத்தி வைக்கி றேன்...

ஏன்னா... நீ சுமந்துட்டிருக்கிறது எங்க வம்சத்து வாரிசு ஆச்சே?''

அவள் கருவுற்றதும்... அளவு கடந்த சந்தேசத்துடன் பேசினார் ச தாசிவம்.

கடைசியாய் அவர் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் திகைத்துப் போய் ஏறிட்டாள் கஸ்தூரி.

''என்னம்மா திகைச்சுப் போயிட்டே? ஓ...! 'நான் எங்க வம்சத்து வாரிசு'ன்னு சொல்லிட்டேனில்ல? ராமலிங்க மும் நானும் பங்கா ளிங்க தான்... இரத்த பந்தம் தான்... அவனோட வம்சம்னா... அது என்னோட வம்சம் மாதிரி தான்...''

சமாளித்து விளக்கம் கொடுத்தார் சதாசிவம்.

''அம்மாடி! என் மனைவி அம்பிகை... சுமங்கலி பூஜையை முடிச்சு ட்டு... தீர்க்க சுமங்கலியா போய் சேர்ந்தவ... முதல்லே நம்ம வீட் டுக்குப் போயி... அவ படத்துக்கு முன்னாடி நீ கும்பிட்டுக்கோ...! அப் புறம் பத்திரமா ஜாக்கிரதையா இடுக்கி எஸ்டேட் கெஸ்ட் ஹவுஸ்லே உன்னை சேர்த்துடறேன்..''

''சரிங்க ஐயா...!''

சொன்னபடியே முதலில் அவரது பங்களாவுக்கு அழைத்து வந்தார் சதா சிவம். காசியும் மகளுடன் கூடவே வந்திருந்தார்.

பங்களாவில்... பரந்த ஹாலுக்குப் பின்னே.. பெரிய பூஜை அறை...!

அதன் நேர் எதிரில் சுவரில் பிரமாண்டமாய் ஆளுயரத் தில் அம்பிகையின் படம்..! படத்திற்கு சந்தனமாலை சாற்றப்பட்டிருந்தது.

பூஜை அறையில்... தங்கத்தால் செய்யப்பட்ட காமாட்சி விளக்கு சு



டர் விட்டு ஜொலித்துக் கொண்டிருந்தது.

சதாசிவம் பூஜை அறைக்குள் சென்று... திரும்பிப் பார்த்து சைகை காட்டினார். கஸ்தூரி தயங்கிய படி அவர் எதிரே வந்து நின்றாள்.

வெள்ளிக்கிண்ணத்திலிருந்த விபூதியைத் தொட்டு...அவளது நெற்றியில் அவர் பூசி விட்டார்.

''இது சபரி மலை அய்யப்பனுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட விபூதி...! ஆரோக்கியமா தங்க விக்கிரகம் மாதிரி ஒரு குழந்தையை நீ பெத்துக் குடும்மா...''

அவரது பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள் கஸ்தூரி. ''அம்மா படத்தைத் தொட்டு வணங்கி... அவ ஆசீர்வாதத்தை வாங்கிக்கோம்மா...''

அவர் உத்தரவிட்டதும்... கஸ்தூரி அந்தப் படத்தருகே சென்று... இரு கரங்களாலும் படத்தைத் தொட்டு வணங்கினாள்.

படத்திற்கு நேர் கீழே தரையையும் தொட்டுப் பணிந்த போது... அந்தப் படத்தில் சாற்றப்பட்டிருந்த சந்தன மாலை யதேச்சையாய் கழன்று ... கஸ்தூரியின் கழுத்தில் சட்டென்று விழுந்தது.

கஸ்தூரி திடுக்கிட்டாள்.

சதாசிவம் அவரையும் அறியாமல்... ''அம்பிகை!'' என்று அலறினார்.

''அம்பிகை! என்னைப் பொறுத்தவரை... நீ தெய்வம் ஆயிட்டேம்மா.. இந்த கர்ப்பிணிப் பொண்ணுக்கு உன்னோட ஆசீர்வாதமும் பரிபூரண நல்லாசியும் கிடைச்சுடுச்சு... இப்பத்தான் எனக்கு திருப்தியா இருக்கு அம்பிகை...!''

அண்ணாந்து கண் கலங்க படத்தைப் பார்த்த படி பேசினார் சதாசிவம். கஸ்தூரி தனது கழுத்தில் விழுந்த

**''சார் அந்த கிளார்க் எந்த வேலையுமே செய்யாம சும்மாவே இருக்கிறார்''**

**''அது உனக்கு எப்படிய்யா தெரியும்?''**

**''நான் தான் காலையிலிருந்து அவரை மட்டுமே நல்லா கவனிச்சிட்டு இருந்தேனே!''**

**-பழ.கவிதா சிவமணி,**
**ஈரோடு மாவட்டம்.**



சந்தனமாலையை மெல்லக் கழற்றினாள்.

அவளைத் திரும்பப் பார்த்த சதாசிவம்,''என்னேட அம்பிகை எனக்கு பூடகமா ஒரு உத்தரவு போட்டிருக்கா...''

கஸ்தூரியும் காசியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அது என்ன உத்தரவுங்கிறதை.. பின்னாடி சாவகாசமா நான் சொல்றேன்... இந்த மாலையை பத்திரமா உன் பெட்டியில எப்பவும் வச்சுக்கோம்மா...''

''சரிங்க ஐயா!''

பவ்யமாய் சொல்லிவிட்டு பக்கவாட்டில் தற்செயலாய் பார்த்தாள் கஸ்தூரி.

பக்கவாட்டு சுவரில் ஒரு அழகான ஆண் குழந்தையின் ஓவியம் பிரேமிடப்பட்டு மாட்டப்பட்டிருந்தது. ஆயர் குலத்து கண்ணனை குழந்தை வடிவில் பார்த்தாற் போலிருந்தது. பால் வடியும் முகத்திலிருந்த வசீகரமும், அந்த காந்தக்கண்களும் குறும்பு கூத்தாடும் குறுநகையும்... கஸ்தூரியைக் கட்டிப் போட்டன.

இமை கொட்டாமல் ஓவியத்தையே பார்த்தாள்.

''ஐயா! ஓவியம் ரொம்ப அழகா இருக்கு. சாரி... குழந்தை ரொம்ப அழகா இருக்கு... எங்கேயோ இந்தக் குழந்தையைப் பார்த்தாப்பல... ஒரு உணர்வு! ஓவியத்தை விட்டு கண்ணை எடுக்கவே முடியலையே? இதை வரைஞ்ச ஓவியரை நேர்ல பார்த்து மனசாரப் பாராட்டணும் போலிருக்கு...''

சிலாகித்துப் போய்... ஓவியத்தை பார்த்த படியே பேசினாள் கஸ்தூரி.

''பாராட்டணுமா? நல்ல விஷயம் கண்ணுல பட்டா... அதைப் பாராட்டறதுக்கும் ஒரு பெரிய மனசு வேணும். அது உன்கிட்டே இருக்கு... ஆனா.. நீ ஆசைப்பட்டபடி இதை வரைஞ்சவங்களைப் பாராட்ட முடியாதும்மா...''

''எதுக்கு ஐயா இப்படி சொல்றீங்க?''

''உயிரோட இருந்தாத் தானே பாராட்ட முடியும்? அவ தான் போய் சேர்ந்துட்டாளே?''

சதாசிவம் விழிகள் கலங்க... மனைவியின் படத் தைப் பார்த்தார்.

''மைகாட்! அம்மாவா இதை வரைஞ்சாங்க?'' திகைத்துப் போய் கேட்டாள்.

தலையை மட்டும் ஆட்டி ஆமோதித்தார் சதா சிவம்.

''அப்போ இந்த ஓவியத்துல இருக்கிற குழந்தை?''

''என் மகன் தான்... தவமிருந்து பிறந்த குழந்தையை.. அம்பிகை ஆசை ஆசையா ஓவியமா வரைஞ்சா..''

''ஓ...''

கஸ்தூரி அவளையும் அறியாமல்.... மீண்டும் அந்த ஓவியத்தின் மீது பார்வையைப் பதித்தாள்.

விழிகளில் அந்த அழகான உருவத்தை நிரப்பிக் கொண்டாள்.

சில நிமிடங்களில்... ஒரு வெளி நாட்டுக் காரில் அவளை ஏற்றி அலுங்காமல் குலுங்காமல் பூப்போல் கொண்டு வந்து.. 'இடுக்கி' எஸ்டேட் கெஸ்ட் ஹவுஸில் இறக்கினார்.

அன்று மட்டும் அங்கு அவர் தங்கி விட்டு காசியை அழைத்துக் கொண்டு சென்று விட்டார். அவர் கிளம்புவதற்கு முன்... கஸ்தூரி ஒரு கோரிக்கை வைத்தாள்.

**''நீங்கநடிக்கவந்தபுதிதில்இருந்த மாதிரியே இப்பவும் இருக்கீங்க. உங்க இளமையின் ரகசியம்?''**

**''மேக்கப் மென்தான்!''**

**-காசிதாசன், காஞ்சிபுரம்.**



''ஐயா! எனக்கு இயற்கையை ரசிக்க ரொம்ப பிடிக்கும். பொழுது போகலைன்னா.. காலார நடந்து நான் சுத்திப் பார்க்கலாமில்ல?''

''கர்ப்பம் கலையாம இருக்க.. ஸ்ட்ராங்கான ஆயில் இன்ஜெக்ஷனை வாரம் ஒரு முறை உனக்குப் போடுவாங்க... அதனால பயம் இல்லைன்னாலும்... நீ ஜாக்கிரதையா இருக்கணும்.

உன்னோட ரசனையைப் புரிஞ்சுக்கிட்டதால தான் இங்க உன்னைத் தங்க வச்சிருக்கேன். சுத்திப் பாரு... அதிக தூரம் நடந்து களைப்படைஞ்சுடக் கூடாது...''

''சரிங்க ஐயா! நான் கவனமா இருப்பேன்...''

அவள் இங்கு வந்து சேர்ந்த

பத்தே நாட்களில்... அந்த இனிய அதிர்ச்சி ஏற்பட்டது. அந்த இனிய சம்பவத்தையே... அனுதினமும் ரீவைண்ட் பண்ணிப் பார்த்து... பொழுதை நகர்த்தி விட்டிருந்தாள்.

இன்றும் அப்படித்தான்...!

அவளது நினைவலைகள் நிலை கொள்ளாமல் சுற்றிச் சுழன்றன.

---



## 11

**க**ஸ்தூரிக்கு பொழுது போவதற்காக... ஏகப்பட்ட நாவல்களை வாங்கி ஷெல்ப் நிறைய அடுக்கி வைத்திருந்தனர். அன்று என்னவோ அவளுக்கு புத்தகத்தை வாசிக்கவே மூடு இல்லை.

முதல் நாள் நர்ஸ் போட்ட ஆயில் இன்ஜெக்ஷனால் 'புஸ்' என்று வீக்கம் ஏற்பட்டு விண் விண் என்று வலி தெறித்தது.

ஒத்தடம் கொடுத்துப் பார்த்தும் வலி குறையவில்லை. அதனால் வழக்கத்திற்கு மாறாக சீக்கிரமாகவே மாலை மூன்றரை மணிக்கு கிளம்பினாள்.

''சிஸ்டர்! காலார நடந்துட்டு வர்றேன்.''

''என்னம்மா இது? வழக்கமா அஞ்சு மணிக்கு தானே வாக்கிங் போவீங்க...? நானும் வரட்டுமா?''

''வேணாம் சிஸ்டர்! வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறதால பெயின் ஜாஸ்தியா தெரியற மாதிரி ஒரு பீலிங்...! அதான்... கொஞ்சம் முன்னாடியே போறேன்... இடுக்கியில மேற்கு திசையில ஒரு பெரிய மேட்டுப் பகுதி இருக்காமே? அங்க ஏறிப் பார்த்தா... இந்தப் பிரபஞ்சத்தோட ஒட்டு மொத்த அழகும் கொட்டிக் கிடக்கிறதை... நாம்ப கண் குளிரப் பாக்கலாம்னு தோட்டக்காரரு சொன்னாரு...''

''அப்ப நீங்க... அங்க தான் போறீங்களா? துணைக்கு யாரையாச்சும் கூட்டிட்டுப் போங்க.. இது எஸ்டேட்...! வனாந்தரத்துல வழி தவறிடுச்சுன்னா... என்ன பண்ணுவீங்க?''

''ஊகூம். நானும் ஒரு எஸ்டேட்டுல பிறந்து வளர்ந்தவ தான். எனக்கு வழியெல்லாம் தவறவே தவறாது. நீங்க கவலைப் படாதீங்க... நான் தனியா போயிட்டு வந்துடறேன்..''

''இல்ல... நீங்க ஒரு புள்ளத்தாச்சி...'' நர்ஸ் பேசி முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் கஸ்தூரி.

''நான் தனிமை விரும்பி...! பிளீஸ்... புரிஞ்சுக்கோங்க... கோவிலுக்கு கூட நான் கூட்டம் இருக்கிற நாட்கள்லே போக மாட்டேன். இயற்கையை ரசிக்கிறதா இருந்தாலும் சரி... மனசு உருகி கடவுளை தரிசிக்கிறதா இருந்தாலும் சரி... நான் எப்பவும் அமைதியை நாடறவள்...''

அதற்கு மேல் அந்த நர்ஸ்... எதையும் பேசவில்லை.

கஸ்தூரி மெல்ல சரிவில் இறங்கி... பின் வளைந்து நெளிந்து சென்ற மலைப் பாதையில் நிதானமாய் மேற்கு திசை நோக்கி நடந்தாள்.

அவள் இந்த இடுக்கிக்கு வந்து.. இரண்டு வாரங்கள் தான் கடந்திருந்தன.

தினமும் அவள் ஒரு மணி நேரம் வாக்கிங் செய்யத் தவறியது இல்லை.

இந்தப் பகுதிக்கு இன்று தான் முதல் முறையாகச் செல்கின்றாள்.

''வாழ்க்கையில் ஒவ்வொரு படியாகத் தான் முன்னேறணும்''.

''வாசல்படியா? மாடிப்படியா?''

**-காசிதாசன், வந்தவாசி.**



ஊசி போடப்பட்டதால் ஏற்பட்ட வலியை விட... மனதிலிருந்த வலி தான் அதிகமாய் இருந்தது.

கவலையை மறக்கத் தான்... அவள் தினமும் காலார நடந்து இயற்கையின் அழகில் மனதை திசை திருப்பினாள். அதுவும் சொற்ப நேரத்திற்குத் தானே...?

பங்களாவுக்கு திரும்பும் போதே.. மனம் கனத்து வலிக்கத் தானே செய்தது...?

அரை மணி நேர நடைக்குப் பின்...

அந்த மேட்டுப் பகுதிக்கு வந்து விட்டாள்.

படிக்கட்டுகளை நேர்த்தியாய் வாகாய் செதுக்கி இருந்தார்கள்.

மேலே ஏறிச் சென்றால்... அங்கே சிறு சமதளப் பகுதி... காற்று விர்ரென்று சுழன்றடித்தது. அங்கிருந்து கீழே பார்த்தால்... சுற்று வட்டார பிரபஞ்சமே பச்சைப் பசேலென்று கண்களை ஈர்த்தது.

'இப்படியொரு அழகை வேறெங்கும் பார்த்ததே இல்லை...' என்று சொல்லும் அளவுக்கு ரம்யமாய் இருந்தது.

சமதளப் பரப்பின் நான்கு திசைகளிலும் இடுப்பளவுக்கு சுவர் எழுப்பப்பட்டிருந்தது.

''இந்த சுத்துச் சுவரை இன்னும் பெரிசா எழுப்பி இருக்கலாமே? குழந்தைங்க யாராச்சும் இதுல ஏறி நின்னுட்டா.. தவறி விழுந்துடு வாங்களே?''

தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு அந்தச் சுவர் அருகே சென்று எட்டிப் பார்த்தாள்.

காற்று பேய்த்தனமாய் வீசியது. கஸ்தூரிக்கு திடுரென கிர்ரென தலை சுற்றியது. காற்று வேகமாய் சுழன்றடித்ததாலா? அல்லது அதல பாதாளத்தை எட்டிப் பார்த்ததாலா? அல்லது மசக்கையின் காரணத்தாலா? என்று தெரியவில்லை. விட்டால் பேய்க்காற்று அவளை அதல பாதாளத்தில் தள்ளி விடும் போலிருந்தது.

போதாதற்கு தலை வேறு சுற்றித் தொலைத்தது. இடுப்பளவே இருந்த சுவரை இறுக்கமாய் பிடித்துக் கொண்டாள்.

கண்களை இறுக மூடியவளுக்கு... எதற்கு இந்த இடத்திற்கு வந்தோம்? என்றிருந்தது.

'மயங்கி விட்டால்... பிடி தளர்ந்து விடுமே? விழுந்து விடுவோமோ?

இது தான் விதி என்றால் போய் தொலைய வேண்டியது தான்...' என்று எண்ணி முடிப்பதற்குள் அந்த இனிய குரல் பின்னாலிருந்து கேட்டது.

''இங்கே ஒரு எச்சரிக்கை போர்டு இருக்குமே? அதைப் பார்த்தும் ஏன் சுத்துச்சுவர் கிட்டத்துல போய் நின்னீங்க? பயப்படாதீங்க.''

அவளது கையை கெட்டியாக ஒரு ஆண் கரம் பற்றியது. அவளைப் பின் பக்கமாய் மூன்றடி இழுத்தது.

திகைத்துப் போய் விழிகளை மலர்த்தி திரும்பிப் பார்த்தாள்.

''அட... நீ.. நீங்களா?''

பின்னால் நின்றிருந்த கதிரும் திகைத்தான்.

''நீங்களா? எ.. எச்சரிக்கை போர்டை நான் பார்க்கலை சாரி!''

‘‘அதோ இருக்கு பாருங்க. பக்கத்துல இருக்கிற பெரிய மரத்தோட கிளை லேசா போர்டை மறைச்சதால நீங்க கவனிக்கலை போலிருக்கு. இங்க நின்னு அழகை ரசிக்கலாம். ஆனா சுத்துச் சுவரு கிட்டத்துல போய் நின்னா காத்து பலமா வீசறதால தள்ளறாப்பல இருக்கும்.’’

ஓ

அவளது இதயம் பட படவென்று அடித்துக் கொண்டது.

‘‘வாங்க இன்னும் அஞ்சாறு அடி தள்ளிப் போயிடலாம்.’’ இருவரும் சேர்ந்தே நடந்தனர்.

அவனது பிடி இன்னமும் கெட்டியாய் தான் இருந்தது. அவளது நடுக்கம் நிற்கட்டும் என்று அவன் பிடியைத் தளர்த்திக் கொள்ள வில்லை போலும்.

அதிசயமாய் அவளைப் பார்த்ததும் தலை சுற்றல் கூட நின்று விட் டது.

அவளுக்கு ஒரு பக்கம் அழுகையாய் வந்தது. ஒரு பக்கம் அவனது அருகாமையை நினைத்து சந்தோஷமாய் இருந்தது.

நான் இந்த இடத்துல கஸ்தூரி மானைப் பார்ப்பேன்னு கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை.

மெல்லச் சிரித்தபடி அவளது முகத்தை ஊன்றிப் பார்த்தான்.

குங்குமப் பூவாய் முகம் சிவந்து போனாள்.

‘‘நானும் தான் ’’முணு முணுத்தாள்.

‘‘கஸ்தூரி! ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?

கொன்றை மரத்துப் பூவை நீ ரசிச்சுட்டு நின்னப்போ உன் கழுத்துல பாம்பு விழுந்ததே?

அப்பவே நான் உன்னை நேசிக்கத் தொடங்கிட்டேன். எப்ப நீ என் கண்ணுல பட்டியோ அந்த கணத்துல நீ என் இதயத்துல சிம்மாசனம் போட்டு உட்கார்ந்துட்டே.

விழியில் விழுந்து...

இதயம் நுழைந்து...

உயிரில் கலந்த உறவே’ன்னு... கவிஞர் சும்மாவா பாடி வச்சாரு? ஒரு மான்குட்டிக்காக மனசிரங்கி பதறிப்போய் அதைக் காப்பாத்த றதுக்காக நீ தவிச்சது உன்னோட கண்ணியம் மனிதநேயம் இரக்க சுபாவம் இயற்கையை ரசிக்கிறதுல உனக்கு இருக்கிற அலாதி ரசனை எல்லாமே எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு.

எங்கப்பாவுக்கு நான் ஒரே பிள்ளை! சுத்து வட்டாரத்துல எங்க

ளுக்கு நிறைய எஸ்டேட்ஸும், நிறுவனங்களும் இருக்கு. வெளி நாட்டுல மேற்படிப்பை முடிச்சுட்டு ஆறு மாசத்துக்கு முன்னாடி தான் நான் வந்தேன்.

இப்போ நேரம் சரியில்லை போல பெரிய கவலையும் குழப்பமும் எங்களைப் பிடிச்சு ஆட்டுது. இந்த மனக் கஷ்டம் தீர்ந்ததும் நான் உன் னைப் பத்தி அப்பா கிட்டே பேசலாம்னு இருக்கேன்.

தினமும் அன்னிக்கு இருந்து என் மனசுல நீ குடியிருக்கிறதால அடிக்கடி உன் உருவம் தான் தெரியும். இப்பக்கூட உன்னைப் பார்த் ததும் இது பிரமையா இருக்குமா?'ன்னு சந்தேகப்பட்டு இடக்கையால மெல்ல என்னைக் கிள்ளிப் பார்த்தேன். வலிச்சது. சரி இது நிஜம் தான்! இது பூர்வ ஜென்ம பந்தம் தான்'னு முடிவுக்கு வந்தேன். அப்படியிருக் கிறதால தானே நான் மறுபடியும் இங்க உன்னை சந்திச்சிருக்கேன்.

எஸ்டேட்கள்லே நிறைய ரம்யமான இடங்கள் இருந்தாலும் இடுக்கியில இந்த இடம் தான் எனக்கு பிடித்தமான இடம்! அதோ பாரு. வான வில் வானத்தை சுட்டிக் காட்டினான்.

''ஒரு வானவில் போலே...

என் வாழ்விலே வந் தாய்...

உன் பார்வையால் எனை வென்றாய்....

என்னுயிரிலே நீ கலந் தாய்.....

ஒரு வானவில் போலே! அப்படின்னு பாடலாம் போல இருக்கு கஸ்தூரி! ஐ லவ் யூ ஸோ மச் கஸ்தூரி!''

சிலாகித்துப் பேசி விட்டு உரிமையுடன் அவளது கரத் தில் முத்தமிட்டு அவசரமாய் அவளைத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டான்.

**''கல்யாணமான புதிதில் நான் சொல்வதையெல்லாம் என் கணவர் செய்வார்''**

**''இப்போது?''**

**''சொல்லாத முன்பே செய்கிறார்!''**

**-காசிதாசன், வந்தவாசி.**





# 12

**சு**வர்க்கத்தின் ஒரு பாகத்தைப் பிட்டு கையில் கொடுத்தாற் போலிருந்தது.

கதிர் என்னைப் போலவே மனதைப் பறி கொடுத்திருக்கிறார். என் மீது காதல் கொண்டிருக்கிறார்.

மனதில் வரி வரியாய் எண்ணம் ஓடியது. ஆகாயத்திலிருந்து தேவதைகள் கூடை நிறைய பனியில் நனைந்த புஷ்பங்களை அள்ளி தலை மீது கொட்டுவதைப் போல சுகானுபவமாய் இருந்தது.

கதிர்! ஐ டூ லவ் யூ கதிர்! நானும் உங்களை என் உயிரினும் மேலாக நேசிக்கிறேன் கதிர்! என்று சொல்ல வேண்டும் போலிருந்தது.

தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு அடக்கினாள்.

துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

யாருக்கு கிடைக்கும் இந்த பாக்கியம்? ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல் அல்லவா நிலைமை இருக்கிறது?

இவருடைய காதலை ஏற்றுக்கொள்ள முடியுமா என்னால்?

அந்த பரிசுத்தத்தை நான் இழந்து விட்டேனே? யாரோ ஒருவருடைய குழந்தை என்னுள் வளர்கிறதே?

இன்னொருவருடைய குழந்தையை சுமக்கின்ற எனக்கு இவருடைய காதலை ஏற்றுக் கொள்ளும் தகுதி இருக்கிறதா? இல்லை எனக்கு அந்த அருகதை இல்லை

சில கணங்களுக்குள் ஓராயிரம் எண்ண அலைகள் எழும்பி அவளது இதயச் சுவரில் மோதிச் சிதறின.

சட்டென்று அவனது அணைப்பிலிருந்து விடுபட்டாள் கஸ்தூரி.

''நீ இன்னும் ஒண்ணும் சொல்லலையே கஸ்தூரி? வெட்கமா? நாணமா?''

குறும்புத் தனமாய் பேசியபடி அவளது விழிகளை ஊடுருவினான். அவனது பார்வையைத் தவிர்ப்பதற்காக வேறெங்கோ பார்த்தாள்.

''இ இல்ல சார்! உங்களுக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது. உங்க தகுதிக்கும் அந்தஸ்துக்கும் ஏத்த பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்கோங்க'' என்றபடி நடக்க ஆரம்பித்தாள்.

''நில்லு! என்ன விளையாடறியா நீ?''

''விளையாடலை சார்! நிஜமா தான் சொல்றேன்.''

சாரா? கஸ்தூரி! என்னைச் ''சீண்டிப் பார்த்ததும் போதும் மனசுக் குள்ளே கங்கை வெள்ளம் மாதிரி காதல் பொங்க உன்கிட்டே பேசி ட்டிருக்கேன்.

நீ என்னடான்னா முகத்துல அடிச்சாப்பல பேசிட்டிருக்கே?'' என் றபடி அவளை நெருங்கி அவளது தாடையைத் தொட்டு நிமிர்த்தி னான்.

அவனது கையை விலக்கியபடி, ''நான் சீண்டிப் பார்க்கலை சார்! சீரியஸா தான் பேசறேன். எனக்கு உங்க மேல எந்த அபிப்பிராயமும் இல்ல சார்!''

''உனக்கு என் மேல பிரியமோ இஷ்டமோ இல்லைன்னா சொல்றே?''

''ஆமா நேரமாகுது நான் வீட்டுக்குப் போகணும். எனக்கு வழி விடுங்க.''

''எனக்கொரு வழி செ ால்லிட்டுப் போ கஸ்தூரி! நீ பேசினதைக் கேட்டதும் என் னோட இதயமே வெடிக்கி றாப்பல இருக்கு.''

''உங்களுக்கு விருப்பம் இருக்கலாம். அதுக்கா இஷ்ட மில்லாத பொண்ணு கிட்டே வந்து இப்படி வற்பு றுத்தலாமா சார்?''

''கஸ்தூரி! உண்மையைச் சொல்லு. உன் கண்ணுல அன்னிக்கே காதல் மிதந்த தைப் பார்த்தேன். இஷ்டம் இல்லாமலா நான் ஆவலா உன்னைத் தொட்டு அணைச் சப்போ மறுப்பேதும் செ ால்லாம என் அணைப்புல கட்டுண்டு கண் மூடி கிடந்தே?''

அவனது கேள்விக்கு

**''உன் காதலர் கஞ்சன்னு எதெ வெச்சு சொன்னே?''**

**''பீச்சுக்கு வர்றப்போ, அவரே வீட்டுல சுண்டலெ ரெடி பண்ணி எடுத்துட்டு வந்துர்றாருன்னா, பார்த்துக் கோயேன்!''**

**-பால.கோவிந்தராஜ், மதுரை.**



பதில் சொல்ல முடியாமல் விதிர்த்தாள் கஸ்தூரி.

''உனக்கு இஷ்டம் இருக்கு. நீ மனசார என்னைக் காதலிக்கிறே. அது தான் நிஜம்! என்ன காரணத்தாலோ என்னை என் காதலை ஏத்துக்க நீ தயங்கறே. தோ பாரு கஸ்தூரி! மனசு விட்டு எதுவா இருந்தாலும் சொல்லு. ஆயிரம் தடைகள் லட்சம் பிரச்சினைகள் குறுக்கிட்டாலும் அத்தனையையும் தகர்த்தெறிஞ்சு நான் உன்னைக் கைப்பிடிக்கிறேன். உன்னை ஒருக்காலும் கைவிட மாட்டேன். என் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப்பேன். இது சத்தியம்!''

''இதுல சொல்றதுக்கு ஒண்ணுமே இல்ல சார்! இஷ்டமில்லாத பொண்ணைக் கட்டாயப் படுத்தாதீங்க. பணக்கார இளைஞரா இருந் தாலும் கண்ணியமான மனித நேயம் கொண்டவர்னு உங்க மேல எனக்கு நிறைய மரியாதை சார்! அந்த மரியாதையைக் கெடுத்துக்கா தீங்க.''

**''இந்தப் படத்துல, உங்களுக்கு வெயிட்டான ரோல்னு சொல்றீங்களே! எப்படி?''**

**''படம் முழுக்க 'கர்ப்பிணி' யா வர்றேனே''**

**-பால.கோவிந்தராஜ், மதுரை.**



''கஸ்தூரி! உனக்கு நீயே ஏன் முகமூடி போட்டுக் கிறே? ப்ளீஸ் கம் அவுட்!''

''உங்க காதலை ஏத்துக்கிற அருகதை இப்போ எனக்கு இல்ல.''

''என்னாச்சு உனக்கு? நான் சொல்றதை''

''ஐயோ ப்ளீஸ் இதுக்கு மேல என்னை கம்பெல் பண்ணாதீங்க. இப்ப மட்டு மில்ல எப்பவுமே இனி என் னைப் பார்க்கவோ பேசவோ முயற்சி செய்ய வேணாம். மீறி செஞ்சா எத்தனை மலைப்பாதைகள் இங்கே கணக்கில்லாம கிடக்கே? அதுல குதிச்சு என் உயிரை மாய்ச்சுப்பேன்.''

அவளது குரலிலிருந்த தீவிரத்தையும் அவளது விழி களிலிருந்த வேதனையையும்

பார்த்து விட்டு அரண்டு போய் விட்டான் கதிர்!

உள்ளுக்குள் நொறுங்கிப் போனான். அவனது முகத்தில் தாங்கொணாத வேதனையும் கவலையும் ஏமாற்றமும் ஏக காலத்தில் பிரதிபலித்தன.

''க....ஸ்...தூ..ரி!''

துயரத்துடன் அவனது இதழ்கள் மெல்ல அவளது பெயரை உச்சரித்தன.

வழி விட்டு விலகி நின்றான்.

பார்வையைத் தழைத்தபடி நடந்தாலும் அவனது வேதனையைப் புரிந்து கொண்டாள். உள்ளூர அனலிடப்பட்ட புழுவாய் துடித்தபடி அந்த இடத்தை விட்டுச் சென்றாள். தாரை தாரையாய் கண்ணீர் உகுத்தபடி கெஸ்ட் ஹவுஸிக்கு வந்து சேர்ந்தாள்.

சொல்லொண்ணாத துயரம் ஒரு பக்கம் வாட்டி வதைக்கத் தான் செய்தது.

ஆனால் உள்ளுக்குள் கதிர் என்னை மனசார நேசிக்கிறார். கண்டதும் காதல் கொண்டு இருக்கிறார் என்ற சந்தோஷம் சாம்பிராணி வாசமாய் கமழ்ந்து கொண்டிருந்தது நிஜம்!



## 13

அன்று இடுக்கி எஸ்டேட்டுக்கு வந்திருந்தார் சதாசிவம்.

''என்னம்மா கஸ்தூரி? வேளா வேளைக்கு சாப்பிடறே இல்ல? சத்து மாத்திரைகள், சத்துபானம் எல்லாம் எடுத்துக்கிறே இல்ல?'' என்று கேட்டவரின் கரங்களில் ஒரு ஏதோவொரு பொருள் இருந்தது.

வண்ணக் காகிதத்தால் சுற்றப்பட்டு சதுர வடிவில் இருந்தது.

''ஆமாங்க ஐயா! எல்லாம் கரெக்டா சாப்பிட்டுட்டு வர்றேன். ஐயா! நான் உங்க கிட்ட ஒண்ணு கேட்கலாமா?''

கேளும்மா என்ன தயக்கம்?

''உங்க நண்பர் ராமலிங்கம் ஐயாவோட மகன் எப்படி இருக்காரு? மூளைச்சாவு ஏற்பட்டிருந்ததுன்னு சொன்னீங்களே? இப்போ அவரோட நிலைமை?'' தயங்கி நிறுத்தினாள் கஸ்தூரி.

''அவனா? அவனுக்கு படுக்கையிலேயே அசைவு இல்லாம கிடந்ததால முதுகுல புண்ணு வர ஆரம்பிச்சது. இனி வச்சிருந்து பிரயோஜன

மில்லைன்னு டாக்டர்ஸ் சொல்லிட்டாங்க.

அவனோட இதயம், கண்கள், நுரையீரல், கிட்னி எல்லாத்தையும் ரிமூவ் பண்ணி பாதிக்கப்பட்டவங்களுக்குப் பொருத்த ராமலிங்கம் சம்மதிச்சுட்டான்.

ஒன்றரை மாசத்துக்கு முன்னாடி ரவி இந்த உலகத்தை விட்டுப் போயிட்டான். அவனோட அஸ்தியை ராமேஸ்வரம் கடல்லே கரைச்சுட்டு வந்தோம்.

என் மகனும் ரவியும் கிட்டத்தட்ட ஒரே ஜாடையில இருப்பாங்க. ரெண்டு பேரும் சிநேகிதர்கள் வேற. சரி என் மகனைப் பார்த்து ராமலிங்கம் மனசைத் தேத்திக்கட்டும்னு நெனைச்சா என் மகனுக்கு இங்க இருக்க இருப்பு கொள்ளலை. நண்பனை இழந்த சோகம் மனசளவுல உடைஞ்சு போயிட்டான்.

கொஞ்ச காலத்துக்கு நான் கோயம்புத்தூர்லே இருக்கிற நிறுவனங்களை கவனிச்சுக்கிட்டு அங்கேயே இருக்கேன் அப்பா!'ன்னு சொல்லிட்டுப் போயிட்டான்.

நானும் என் மகனைத் தடுக்கலை. ராமலிங்கத்துக்கு இப்போ இருக்கிற ஒரே ஆறுதல் என்னன்னா அது உன் வயித்துல வளர்ற குழந்தைதான்.

நம்ம வம்சத்துக்கு ஒரு வாரிசு உருவாயிடுச்சுங்கிற நிம்மதி அவனுக்கு இருந்தாலும் மருமகளைப் பத்தி பெரிய கவலை வந்திடுச்சு.''

''அவங்களுக்கு என்னாச்சுங்க ஐயா?''

''கணவனை இழந்த சோகம் அந்த பொண்ணை நிலைகுலைய வச்சுடுச்சு.

இதயம் ரொம்ப வீக்கா இருக்கு. எது வேணாலும்

***''ரொம்ப சிரமமா இருக்கு, டாக்டர்!''***

***''கொஞ்சம் பொறுத்துக்குங்க... ஆபரேஷன் பண்ணிடலாம்!''***

***''அதுக்கில்லை டாக்டர்! நர்சை சிஸ்டர்ன்னு கூப்பிடுறதெச் சொன்னேன்!''***

**-பால.கோவிந்தராஜ், மதுரை.**



எப்ப வேணாலும் நடக்கலாம்'னு டாக்டர்ஸ் சொல்லிட்டாங்க.

வீட்டுக்கு டாக்டர் தினமும் வந்து பார்த்துட்டுப் போறாராம். ட்ரீட் மெண்ட் எடுத்துட்டிருக்கா.. அந்தப் பொண்ணு. தன் கணவனோட குழந்தையை பார்க்கணும்னு தான் ஏங்கிட்டிருக்கா. சந்தோஷத்தையும் தாங்க முடியாது. துக்கத்தையும் தாங்க முடியாது! அவளோட இதயம் அந்தளவுக்கு கவலையில பாதிக்கப்பட்டிருச்சு.''

''ஐயோ பாவம்! மகனை இழந்த சோகத்திலிருந்து மீளும் முன்னே இப்ப மருமகளும் உடம்புக்கு முடியாம போயிட்டாங்களா? ராம லிங்கம் ஐயாவை நெனைச்சா ரொம்பவும் பரிதாபமா இருக்கு.''

''என்ன செய்றது? எல்லாம் விதிப்படி தானே நடக்கும்? இந்தா உனக்கு பிடிச்ச கிப்ட்!'' என்றபடி பரிசுப்பொருளை நீட்டினார் சதாசிவம்.

''எனக்குப் பிடிச்ச கிப்டா? கதை, கவிதைப் புத்தகங்கள்னா எனக்குப் பிடிக்கும். இதைப் பார்த்தா புக் மாதிரியும் தெரியலியே?'' என்றபடி ஆவலாய் அதை வாங்கி காகிதத்தைப் பிரித்தாள்.

''அட இது இது உங்க பங்களாவுல இருந்த குழந்தையோட ஓவிய மாச்சே? அம்மா வரைஞ்ச ஓவியம்னு சொன்னீங்களே?''

''இது ஒரிஜினல் ஓவியம் இல்ல... ஓவியத்தோட போட்டோ கிராபி... உனக்காக... இதை ரெடி பண்ணச்சொல்லி எடுத்துட்டு வந் தேன்.

ஒரிஜினல் ஓவியம் வீட்டுல... அதே இடத்துல தான் இருக்கு...''

''தேங்க்ஸ் ஐயா!''

''இதை நான் ஏன் உனக்கு குடுக்க வந்தேன் தெரியுமா? அழகான உருவத்தை பார்த்துட்டே இருந்தா... அதே சாயல்லே குழந்தை பிறக் கும்னு பெரியவங்க சொல்வாங்க...

அதனால கர்ப்பிணிப் பொண்ணு கண்ணுல படற எடத்துல நம்ம மனசுக்குப் பிடிச்ச படங்களை.. அல்லது சாமி படங்களை மாட்டி வைக்கிறோம்...''

''சரிங்க ஐயா...! இதை என் ரூம்லே சதா என் கண்ணுல பட்ற மாதிரி வச்சுக்கிறேன்''

''ராமலிங்கத்துக்கும் சரி... அவனோட மருமகளுக்கும் சரி... இந்தக் குழந்தை தாம்மா ஆதாரம்...''

''புரியுது ஐயா...! கவனமா பத்திரமா குழந்தையைப் பெத்துக் குடுக்க வேண்டியது என் கடமை...''

''நாலு மாசம் முடிஞ்சிருச்சுல்ல? இன்னமும் உனக்கு வயிறே தெரி

யலியேம்மா?''

''அஞ்சாம் மாசத்துல தான் வயிறு மேடிட்டு தெரியும்னு நர்ஸம்மா சொன்னாங்க ஐயா...!''

''சரிம்மா... உடம்பை பத்திரமா பார்த்துக்கோ... காசி நேத்து என்னை வந்து பார்த்தான். நாளைக்கு அவனும் உங்கம்மாவும் இங்க வரதா இருக்காங்களாம்...''

''சந்தோஷம் ஐயா...! வரட்டும்...''

வாசல் வரை சென்று... அவர் கையை அசைத்து காரில் ஏறிச் சென்றதும்... யோசனையுடன் அந்த ஓவியத்தை ஊன்றிப் பார்த்தாள்.

''எங்கேயோ பார்த்தாற் போலிருக்கிறதே? முதலாளி ஐயாவின் மகனை நான் இதுவரை நேரில் பார்த்ததில்லை.

இந்தக் குழந்தையின் கண்களும் ஜாடையும் யாரையோ ஞாபகப் படுத்துகின்றனவே?

அது யாராய் இருக்கும்?

தலைக்குள் வண்டு குடைந்தது.

தனது அறைக்குள் போய் கட்டிலில் ஒருக்களித்துக் படுத்தபடி அந்த ஓவியத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

பலத்த யோனைக்குப் பின்... அவளது கேள்விக்கு விடை கிடைத்த போது... கஸ்தூரி விதிர்த்துப் போனாள்.



# 14

''இதே ஜாடையில் யாரோ ஒருவரை சமீபத்தில் பார்த்திருக்கிறேன்.

கண்டிப்பாக அந்த நபர்... என் மனதில் நல்ல அபிப்ராயத்தை சம்பாதித்தவர்.

இன்னும் சொல்லப் போனால்.... என் மரியாதைக்கு உரியவர்...!

அது மட்டும் தானா?

இல்லை... இதையும் தாண்டி ஏதோவொன்று இருக்கின்றது.

அது என்ன?

வேறு என்னவாய் இருக்கும்?

என் மனதைத் திருடியவர்...

சதா சர்வ காலமும்... எனது இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்...

அப்படி யென்றால்...?
இந்தக் குழந்தை... கதிரின் ஜாடையிலா இருக்கிறது?
ஆம்... சந்தேகமே இல்லை...
அவரது ஜாடைதான்...!
கடவுளே...! இது அவர் தானா?
முதலாளிஐயாவின் மகன்... என் கதிர் தானா?
அன்றைக்கு இடுக்கி 'மேட்டுப்பகுதி'யில் சந்தித்த போது கூட.. கதிர் ஏதோ சொன்னாரே?
குடும்பத்தில் கவலையும், குழப்பமும் இருக்கிறதா கூறினாரே?
அவர் தானா இவர்?
முதலாளி ஐயா சற்று முன் ஒரு தகவலை சொன்னார் அல்லவா?
'நண்பனை இழந்த சோகத்தில் எனது மகன் மனம் உடைந்து போய் விட்டான்' என்றாரே?
இங்கு இருக்கப் பிடிக்காமல் அவர் கோயம்புத்தூர் பக்கம் சென்ற தாக ஐயா வருத்தப்பட்டாரே?
அது... நண்பனை இழந்ததற்காக மட்டும் அல்ல... அன்று நான் நிர்தாட்சணியமாக, அவரது காதலை ஏற்றுக் கொள்ளாமல் வந்ததற்கா கவும் தான்' என்பது எனக்கு மட்டும் தானே தெரியும்?
தெய்வமே...! எனது ஊகம் சரி தானா?
என் உள் மனது சொல்கிறது..
இது கதிர் தான்... சந்தேகமே இல்லை...!
கதிர்...! கதிர்...! என்னை மன்னிச்சுடுங்க கதிர்....!
மனசைக் கல்லாக்கிக்கிட்டு தான்... நான் அன்னிக்கு அந்த மாதிரி பேசினேன்...
ஒவ்வொரு கணமும் நான் உங்க நெனப்போட தான் வாழ்ந்துட்டி ருக்கேன்...
நீங்க சொன்னது மாதிரி... இது பூர்வ ஜென்ம பந்தம் தான் கதிர்...!
அதனால தான்... ஐயா உங்க ஓவியத்தைக் கொண்டு வந்து என் கிட்டே கொடுத்துட்டாரு...
''ஆனா... நான் குடுத்து வைக்காத பாவியாயிட்டேன்.
குடும்பத்துக்காக... சந்தர்ப்பம் சூழ்நிலை... சரியில்லாததால... நான் இந்தக் காரியத்துக்கு ஒத்துக்கிட்டேன் கதிர்...!
வேறொருத்தருடைய குழந்தைக்கு தாயாகிட்டேன்... உங்க காதலை ஏத்துக்க முடியாத துர்பாக்கியசாலி ஆயிட்டேன்.
என்னோட நிலை... எதிரிக்கும் கூட வரக்கூடாது கதிர்...!

காதல் தோல்வியடைஞ்சதால.. அந்த துக்கம் தாங்க முடியாம... பெத்த அப்பாவை தனியா விட்டுட்டு எங்கேயோ போயிட்டீங்களே?

உள்ளுக்குள்ளே நீங்க தவியாய் தவிக்கிறதும் புழுவாய் துடிக்கி றதும்... என்னால் தானே?

இந்தப் பாவியால தானே?

என்னைப் பார்த்து... மனசைப்பறி கொடுத்ததால தானே... உங்க ளுக்கு இப்படியொரு நிலை? என்னை மன்னிச்சுடுங்க கதிர்...!

இந்தக் காதல் புனிதமானது தான்... ஆத்மார்த்தமானது தான்... பரிசுத்தமானது தான்...

இந்த உண்மையான காதலுக்கு ஒரு சக்தி உண்டு கதிர்...!

அது... நம்மை கட்டாயமா சேர்த்து வைக்கும்... இந்த ஜென்மத்துல இல்ல... அடுத்த ஜென்மத்துல கண்டிப்பா... நம்ம காதல் கை கூடும் கதிர்...!

ஐ லவ் யூ ஸோ மச்....!

மானசீகமாய் பேசி விட்டு... கண்ணீர் உகுத்தபடி அந்த ஓவியத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

அழுத்தமாய் அதில் முத்தம் பதித்தாள்.

அவளது விழியோரங்களிலிருந்து மடை திறந்த வெள்ளமாய் வழிந்த கண்ணீர்... தலையணையை நனைத்தது.

தூக்கம் ஒரு சொட்டு கூட வராமல் அடம் பிடித்தது.

விடிய விடிய அந்த ஓவியத்தை... நீர் திரையிட்ட விழிகளால் ஊன்றி பார்த்த படி... கதிரின் பெயரை மந்திரமாய் உச்சரித்தபடி படுத் துக் கிடந்தாள்.

மறுநாள் காலை... எட்டுமணிக்கு காசியும் கனகமும் வந்து விட்ட னர்.

''வரகரிசியில புளிச்சோறு ஆக்கி எடுத்துட்டு வந்தேன். சாப்பிடு கண்ணு...! தொட்டுக்க உனக்குப் பிடிச்ச வெங்காயச் சட்னி...''

என்று பேசியபடி சம்புடத்தை கூடையிலிருந்து எடுத்து வைத்தாள் கனகம்.

மனோகரி சென்ற மாதம் தான் ஒரு பெண் குழந்தையைப் பிரசவித் திருந்தாள்.

''அக்காவும், பாப்பாவும் எப்படி இருக்காங்கம்மா?''

''நல்லா இருக்காங்க.. இதைச் சாப்பிடும்மா...?''

''பாவம்... அக்காவைத் தனியா விட்டுட்டு நீ வந்துட்டியேம்மா?''

விசனப்பட்ட மகளைப் பார்த்து கலங்கினாள் கனகம்.

''பக்கத்து வீட்டுப் பாட்டி துணையா இருக்காங்க... ஒண்ணும் பிரச்சினையில்ல... உன்னை நெனச்சாத்தான் எங்க எல்லாத்துக்கும் வேதனையா இருக்கு...''

''நர்ஸம்மா, தோட்டக்காரரு, சமையற்காரரு, டிரைவர்னு இங்க என் துணைக்கு ஆட்படையே இருக்கேம்மா? அப்புறம் என்ன?''

''ஐயோ... நாங்க இதைச் சொல்லலை. கல்யாணம் காட்சியைப் பார்க்காம... இப்படி வயித்துல ஒரு குழந்தையோட 'சுமை தாங்கியா' நிக்கிறியே கஸ்தூரி?''

பேச்சை திசை திருப்புவதற்காக சட்டென்று சம்புடத்தை திறந்தாள் கஸ்தூரி.

''வாவ்! வரகு புளிச்சாதம் கமகமன்னு வாசனை தூக்குதே? இரும்மா... தட்டை எடுத்துட்டு வரச் சொல்றேன்...''

சமையலறையை எட்டிப் பார்த்து ''ஐயா! எங்க அப்பாவும், அம்மாவும் வந்திருக்காங்க...'' என்று சொல்லி முடிப்பதற்குள் சமையற்காரார் இடைமறித்தார்.

''ஐயா அவுக நேத்து என்னைக் கூப்புட்டு சொன்னாரு தாயீ... டிபன் சேர்த்து பண்ணிட்டேன்... மதியத்தும் ராத்திரிக்கும் சமைச்சுடறேன். இப்ப தட்டுகளை கொண்டாந்து டைனிங் டேபிள் மேல வச்சுடறேன்... நீங்க டிபன் சாப்பிட்டு முமடிச்சுட்டு... இந்த சீரகத் தண்ணியைக் குடிச்சுடுங்க தாயீ...!'' என்றார்.

எள் என்றால் எண்ணெயாக நின்றார். 'எல்லாமே முதலாளி ஐயாவோட உத்தரவு' நெகிழ்ந்தபடி, யோசனையாய் நடந்தாள்.

தனது அறையில் கட்டிலின் தலைமாட்டில் கிடந்த ஓவியப் படத்தை எடுத்துக் கொண்டு... டைனிங் ஹாலுக்கு வந்தாள். ஒரு தட்டில் வரகரிசி புளி சாதத்தைப் பரிமாறி வெங்காயச் சட்னியை வைத்து... ''உட்கார்ந்து சாப்பிடு கண்ணு...'' என்று வற்புறுத்தினாள் கனகம்.

தட்டின் முன் அமர்ந்தபடி அப்பாவை ஊன்றிப் பார்த்தாள். தயக்கம் தடை போட்டது.

''அட... சாப்பாட்டுத் தட்டு முன்னால உட்கார்ந்து என்ன யோசனை?'' அதட்டினாள் கனகம்.

''வேணும்னா நா ஊட்டி விடவா?''

''கொஞ்சம் பொறும்மா... அப்பா! இந்த ஓவியத்துல இருக்கிற குழந்தையை... நீங்க நேர்ல பார்த்திருக்கீங்களா?'' என்றபடி அதைக் காட்டினாள்.

''இது நம்ம முதலாளி ஐயாவோட பையன். பேரு கதிரவன். அத்

தன சொத்துக்கும் ஏகபோக வாரிசு இவரு தானே?''

ஏற்கனவே ஊகித்தது தான்... இருந்தாலும் அப்பா சொன்ன பதிலைக் கேட்டதும்... அவளது இதயம் படபடத்தது நிஜம்...!

''ந... நல்லாத் தெரியுமாப்பா?''

''அட... எனக்குத் தெரியாதா? நாலஞ்சு வருஷம் வரைக்கும் இவரு பெத்தவங்க கிட்டதான் வளர்ந்தாரு... அப்புறமா... வெளிநாட்டு கான்வென்ட்டுல போய் சேர்த்து படிக்க வச்சாங்க...

சின்ன வயசுல இவரைப் பார்த்தது தான்... அதுக்கு பிற்பாடு... அவரு இந்தப் பக்கமே வரலை... இவங்க தான் போய் அவரைப் பார்த்துட்டு வருவாங்க...

அப்படியே அவர் வந்தாலும்... தேனி பங்களாவுல ரெண்டொரு நாள் தங்கிட்டு அப்படியே போயிடுவாருன்னு கேள்விப்பட்டேன்.

சமீபத்துல அவர் படிப்பு முடிச்சுட்டு வந்ததாகவும்... ஒட்டு மொத்த நிர்வாகப் பொறுப்பை ஏத்துக்கிட்டு திறம்பட செயலாற்றுகிறாருன்னு... கேள்விப்பட்டேன். ஆனா... அவரை நான் நேர்ல பார்க்கலை...''

காசி சொன்னதைக் கேட்டதும் நெஞ்சம் கனத்தது.

அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

''என் ஊகம் நூறு சதம் சரி தான்... கதிர்! நீங்களே தானா?''

தனக்குள் முணுமுணுத்தாள்

''எதுக்கும்மா கேட்டே?''

''சும்மாதாம்பா...தெரிஞ்சுக்கலாம்னு தான்...''

அவர் நீட்டிய படத்தை வாங்கி மடியில் வைத்து கொண்டாள்.

**''பக்கத்தில் இருந்துக்கிட்டே இருபது வருடமா தொல்லை தருகிறான் சார்''**

**''இருபது வருடமாவா? பக்கத்து வீட்டுக்காரனாம் மா?''**

**''என் புருஷன் சார்!''**

**-எம்.அசோக்ராஜா, திருச்சி.**



''அடுத்த மாசம் நான் ஒரேயடியா உன்னோடு வந்து தங்கிடுவேன். மூணு மாசக்கணக்கு ஆனதும் மனோகரி குழந்தையோடு அவ புருஷன் வீட்டுக்குப் போயிடுவா... நா உடனே புறப்பட்டு வந்துடுவேன். உனக்கு நல்லபடியா பிரசவம் ஆகிறவரை இங்க தான் இருப்பேன். ஐயாவும் சம்மதிச்சுட்டாரு...''

கனகம் பேசியது எதுவும் அவளது காதுகளில் விழவில்லை.

மனம் முழுக்க கதிர் தான் விஸ்வரூபம் எடுத்து வியாபித்து இருந்தான்.

வரகு சாதம் தொண்டைக்குள் இறங்க மறுத்து புரட்சி செய்தது.



## 15

**கொ**ழுக் மொழுக் என்று ஆரோக்கியமாய் தங்கவிக்கிரகமாய் ஆண் குழந்தை பிறந்திருந்தது.

சுகப்பிரசவம் சாத்தியப்படவில்லை என்பதால் சிசேரியன் செய்து விட்டார்கள்.

குழந்தை பிறந்ததுமே... சதாசிவத்துடன் ராமலிங்கமும் அவரது மருமகள் சுமதியும் வந்து விட்டனர்.

பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்துவிட்டு... இப்போது குழந்தையை தாரை வார்க்கப் போவதை எண்ணி.... மனம் கலங்கினாள் கஸ்தூரி.

'கடவுளே! இது என் குழந்தை... இதுக்கு அப்பா யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால்... அம்மா நான் தானே? என் கருவில் ஜனித்தது. என்னை நம்பி உருவானது....

இத்தனை நாட்களாய் வயிற்றில் இதன் அசைவையும் அவ்வப்போது தலையில் முட்டும் போதும்... தாய்மை உணர்வில் பூரித்தேனே?

இதைப் பார்க்கும் போது... தாய்ப்பால் மட்டுமா? தாய்மை உணர்வும் சேர்ந்து சுரக்கிறதே? சதா அந்த ஓவியத்தை நான் பார்த்தபடி இருந்ததாலா? அல்லது... கதிரின் நினைப்பிலேயே காலம் கழித்ததாலா?

எனது கண்களுக்கு மட்டும் தான் கதிரின் ஜாடை தெரிகிறதோ?

ஐயோ... இதை எப்படி பிரிவது?

தாய்ப்பால் கூட தர விடமாட்டார்களா?

தெய்வமே...! இது என்ன கொடுமை?

இந்த பச்சிளம் சிசு... என் குழந்தை...

இதை வாரி நெஞ்சோடு அணைத்துப் பாலூட்ட வேண்டும் போலிருக்கிறதே?''

பொங்கி வந்த அழுகையை சிரமப்பட்டு அடக்கினாள்

''அம்மாடி கஸ்தூரி! ரொம்ப சந்தோஷம்மா... ராமலிங்கமும், சுமதியும் பூரிச்சுப் போயிட்டாங்க... குழந்தை ரவி மாதிரியே இருக்காம்...'' என்றார் சதாசிவம்...''

''நம்ம கதிரு தம்பி கூட சின்ன வயசுல இப்படி தானுங்களே இருப்பாரு ஐயா?'' என்றார் காசி.

''ஆமாம்மா... ஒரே ரத்த பந்தம் தானே? ஜாடை இல்லாம போகுமா? அம்மாடி... ஏன் கண் கலங்கறே? ஓ... குழந்தையை உன் கிட்டேயிருந்து பிரிச்சுடுவாங்கன்னுதா தானே அழறே?

என் மனசுலேயும் ஈரம் இருக்கும்மா... குழந்தைக்கு தாய்ப்பால் அவசியம். ஒரிரு மாசத்துக்கு குழந்தை தாய்ப்பால் அருந்தட்டும். ஆனா... சுமதி இங்க தான் இருப்பா... தாய்ப்பால் குடிக்கிறப்போ மட்டும் தான்... குழந்தை உன் கிட்டே வரும்... ஏன்னா... சுமதி மேல குழந்தைக்கு ஒட்டுதல் வரணும் இல்லையா?

சதா உன் கிட்டத்துல இருந்தா... அப்புறம் குழந்தைக்கு உன் மேல் ஏக்கம் வந்துடுமே? அதைத் தவிர்க்கணும் அதுக்கு தான் இந்த ஏற்பாடு...!''

கஸ்தூரிக்கு இந்த மட்டுமாவது சம்மதித்தார்களே? என்றிருந்தது.

தனிமையில் குழந்தையை அரவணைத்து பாலூட்டியபோது... தலையோடு காலாய் அப்படியொரு நெகிழ்வு!

தாய்ப்பாலோடு போட்டி போட்டுக்கொண்டு அவளது கண்ணீரும் சுரந்தது.



## 16

**நா**ட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன.

ஒப்பந்தப்படி குழந்தையை ஒப்படைத்து விட்டு காசியுடன் வீட்டிற்கு வந்து விட்டிருந்தாள் கஸ்தூரி.

'இந்தப் பக்கம் குழந்தையின் ஞாபகம்.. அந்தப்பக்கம் கதிரின் நினைப்பு..

இருவரும் அவளைப் பந்தாடியதில்.. அவள் ஏகத்திற்கும் இளைத்து

விட்டிருந்தாள்.

சதா அந்தப் படத்தை அணைத்தபடி அழுதபடி கிடந்தாள்.

''குழந்தைக்கு இந்நேரம் பசிக்குமே? அழுதிருக்குமா? என்னைக் காணாமல் தவித்திருக்குமா?''

உள்ளூர தவித்து துடித்துப் போனாள்.

அன்று மேட்டுப் பகுதியிலிருந்த அந்த சிறு வீட்டிற்கு மூச்சிரைக்க ஓடி வந்தார் காசி.

'' என்னங்க..? விழுந்தடிச்சு ஓடி வர்றீங்க?''அதட்டினாள் கனகம்.

'' ஏ...நம்ம முதலாளி ஐயா வாராக... கீழே காரு நிக்குது.. மேலே ஏறி வர்றாக.. கஸ்தூரியைப் பார்க்க வர்றாக போலிருக்கு...''

சொல்லிவிட்டு அவசரமாய் இறங்கி ஓடினார்.

முதலாளியை எதிர் கொண்டு வரவேற்று அழைத்து வந்தார்.

குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமல்.. நெறி கட்டிப்போய்.. கஸ்தூரிக்கு காய்ச்சல் வந்து விட்டிருந்தது.''

''சுணங்கி அருண்டு கலைந்த கூந்தலோடு படுத்துக் கிடந்தவள்... சத்தம் கேட்டு கூந்தலைக் கோதி விட்டுக் கொண்டு.. சோர்வாய் எழுந்து வந்தாள்..''

ஒற்றை நாற்காலியை எடுத்து வந்து.. புடவைத் தலைப்பால் தூசியை நன்கு துடைத்து '' இன்னிக்கு இந்த வூடு புண்ணியம் செஞ்சிருச்சு! உட்காருங்க முதலாளி!'' என்றாள் கனகம்.

தளர்வாய் கஸ்தூரி வந்து நின்று ''வணக்கம் ஐயா!'' ஈனஸ்வரத்தில் முனகினாள்.

'' உம்.. எப்படிம்மா இருக்கே? அன்னிக்கு நான் வாக்கு குடுத்தேன்ல? அதை நிறைவேத்த வந்திருக்கேன்..''

''ஆமாய்யா.. கஸ்தூரிக்கு நல்ல வாழ்க்கை அமைச்சு தரவேண்டியது என் பொறுப்புன்னு சொன்னீங்க...''

காசி ஆர்வமாய் படபடத்தார்.

''அடுத்த முகூர்த்தத்துலேயே கல்யாணம்.. ஊரே மெச்சும் படி ஜாம் ஜாம்னு நடத்திரலாம்..''

''மாப்பிள்ளை பார்த்துட்டீங்களா ஐயா?''

''என்னடா காசி? மாப்பிள்ளை பார்க்காமலா கல்யாணத்தை முடிவு பண்ணுவேன்...''

'' ரொம்ப சந்தோஷங்க ஐயா!''

'' இவ்ளோ சீக்கிரத்துல எங்க பொண்ணுக்கு கல்யாணம் ஏற்பாடு பண்ணுவீங்கன்னு.. நான் எதிர் பார்க்கலை நன்றிங்க ஐயா...!''

கனகம் கை கூப்பினாள்..

கஸ்தூரிக்கு திக்கென்றிருந்தாள்..

''கொஞ்சம் விட்டால் மனையில் அமர வைத்து .. யாருக்கோ கழுத்தை நீட்ட வைத்து விடுவார்கள் போலிக்கிறதே?''

வறண்ட நாவை ஈரப்படுத்திக் கொண்டு... சதாசிவத்தை ஏறிட்டாள்.

''ஐயா..! என்னை மன்னிச்சுடுங்க... நான் இனிமே யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்.''

''காலத்துக்கும் நீ தனிமரமா நிக்க முடியுமா? உன்னைப் பெத்தவங்க... உன்னை நெனச்சு சதா வேதனைப் படணுமா?''

'' ஐயா...! நான் ஒரு குழந்தைக்கு தாயானவள்...''

'' இருக்கட்டுமே... கல்யாணம் பண்ணினா பிரச்சினை வரும்னு நெனக்கிறியா?''

'' இல்ல.. எனக்கு கல்யாணத்துல இஷ்டமில்ல...''

'' ஆனா... என் மகனுக்கு இருக்கே? உன்னை உயிருக்கு உயிரா நேசிக்கிறான்..''

''ஐயா...!''

அதிர்ச்சியுடன் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

''எல்லாம் தெரிஞ்சுமா... என்னை உங்க மகனுக்கு கட்டி வைக்கப் பார்க்கிறீங்க?''

அவள் பார்த்த பார்வையில்.. இந்தக் கேள்வி இருந்தது.

''சின்ன முதலாளி கஸ்தூரியை எப்போ பார்த்தாராம்?''திகைப்புடன் கேட்டார் காசி.

''நாலு நாள் முன்னாடி தான்... கதிரைப் பார்க்க கோயம்புத்தூர் போயிருந்தேன். மனசுல சின்னதா ஒரு சந்தேகம்... எதுக்காக ஊர்ப் பக்கம் வராம தவிர்க்கிறான்னு தெளிவா தெரிஞ்சுக்கலாம்னு... அவன் இல்லாதப் அவனோட டைரியை எடுத்து வாசிச்சேன்.''

'' விலாவாரியா எழுதியிருந்தான் அவன் நேசிச்ச கஸ்தூரி மான்... நம்ம கஸ்தூரி தான்னு புரிஞ்சுகிட்டேன். அடுத்த முகூர்த்தத்துலேயே கல்யாணம் பண்ணி வைக்கிறேன்னு சொல்லி.. கதிரை கூட்டிட்டு வந்துட்டேன்.''

'' இங்க என் கூட அவன் வர்றதுக்கு மறுத்துட்டான் ஒரு வேளை பிடிவாதமா கல்யாணத்துக்கு நீ சம்மதிக்க மாட்டியோ?ன்னு அவனுக்கு பயம்... என்ன காசி? உனக்கு சந்தோஷம் தானே?''

கண்கள் கலங்க சதாசிவத்தின் காலிலேயே விழுந்துவிட்டார் காசி.

'' இதுக்கு கஸ்தூரி பூர்வ ஜென்மத்துல புண்ணியம் பண்ணியிருக்

கணும் முதலாளி..! நீங்க நிஜமாவே எங்களுக்கு தெய்வம் தான்...''

''ஐயா...! உங்களுக்கு மருமகளாகிற தகுதி எனக்கு இல்லை. ப்ளீஸ்.. புரிஞ்சுக்கங்க...''

ஈனஸ்வரத்தில் முனகினாள் கஸ்தூரி.

'' பேசப்படாது.. எப்போ அம்பிகையோட படத்திலிருந்த அந்தன மாலை உன் கழுத்துல விழுந்ததோ.. அப்பவே எனக்கு பொறி தட்டுச்சு... கதிரும் உன்னை விரும்பறான்...''

''அதுவுமில்லாம... ஒரு குழந்தைக்கு நீ தாயாயிட்டே.. உன்னை இதுக்கு சம்மதிக்க வச்சதே நான் தான்.. நானே சொல்றேன்.. நீ தான் என் குடும்பத்துக்கு மருமகள்...''

''இதை நீ மறுத்துப் பேசவே கூடாது.. கல்யாணம் வேலைகள் தலைக்கு மேல் கிடக்கு...நா வரேன்..!''

விக்கித்து நின்றாள் கஸ்தூரி.

'' எப்பேர்ப்பட்ட பாக்கியம் இது?''

''ஐயாவே என்னை மருமகளாக்கிக் கொள்ள சம்மதித்து விட்டாரே?''

'' காதலுக்கு யாரும் முட்டுக்கட்டை போடவில்லை. பெரிய இடத்திற்கு மருமகளாகப்போகிறேன். ஆனால்... எனக்கு அந்த தகுதி இருக்கிறதா? இன்னொருவரின் குழந்தை என் வயிற்றில் வளர்ந்ததே? கதிர்...! நான் கன்னிப்பெண் இல்லை கதிர்..! ஒரு குழந்தைக்கு தாய்..!''

'' இந்த விஷயத்தை ஐயா உங்களிடம் சொல்லி விட்டாரா? அல்லது மறைத்து விட்டாரா கதிர்!''

'' கஸ்தூரி! நீ ரொம்பக் குடுத்து வச்சவள்..!''

அவளது தாடையைத் தொட்டுத் தடவி... விரல்களால் தனது நெற்றியில் நெட்டி முறித்தாள் கனகம்.

''ஏம்மா...! உம்முனு பேயறைஞ்ச மாதிரி இருக்கே? சந்தோஷப்படற நேரத்துல... இப்படி நிக்கிறியே?''

'' அம்மா..! ஐயா... அந்த விஷயத்தை கதிர் கிட்டே சொல்லியிருப்பாராமா?''

''அதைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே? காரண கர்த்தாவே மனப்பூர்வமா உன்னை மருமகளாக்கிக்கப்போறதா சொல்லிட்டுப் போறாரு..

கண்டதையும் நெனச்சு வீணா... மனசைப்போட்டுக் குழப்பிக்காதே...! ஆனா ஒண்ணு...! நீயா எதையும் அந்த தம்பி கிட்டே உளறி வைக்காதே... சரியா?'' என்றாள் கனகம்

'' சரின்னு சொல்லு தாயீ...''

இருவரையும் பார்க்கவே பரிதாபமாய் இருந்தது. வேறு வழியின்றி 'சரி' என்ற ஒற்றை வார்த்தையை உதிர்த்தாள் கஸ்தூரி.



## 17

**தே**னியில் கதிர்-கஸ்தூரியின் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

நெடுங்குண்டம் எஸ்டேட் வாழ் மக்கள்... கஸ்தூரிக்கு அடித்த யோகத்தைப் பார்த்து...மூக்கில் விரலை வைத்தனர்.''

குற்ற உணர்வு மனதில் புழுவாய் குடைந்ததால்... கஸ்தூரி உள்ளுக்குள் அழுத வண்ணம் இருந்தாள்.

சுவர்க்கமே கிடைத்து விட்டாற் போன்ற மகிழ்ச்சியில் மிதந்தான் கதிர்.

முதலிரவு...!

வெள்ளிச் சொம்புடன் தயக்கமாய் அந்த அறைக்குள் நுழைந்தாள் கஸ்தூரி.

அறைக்கதவை சாற்றினாள்.

பால்கனி கதவை திறந்து தோட்டத்தையும், நட்சத்திர வானத்தையும் வேடிக்கை பார்த்து கொண்டிருந்த கதிர்... சப்தம் கேட்டு விட்டு.., அவசரமாய் உள்ளே வந்தான்.

''நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி கஸ்தூரி! என் காதல் தேவதையே எனக்கு மனைவியாயிட்டா...''

''நானும் தான் கதிர்... உங்களை என் உயிரினும் மேலா நேசிக்கிறேன்..''

தொண்டை வரை ஓடிவந்த வார்த்தைகளை...சிரமப்பட்டு அடக்கினாள். மேடாவில் சொம்பை வைத்து விட்டு... அவனது பாதங்களில் பணிந்தாள்.

வாத்சல்யத்துடன் அவளை தொட்டு தூக்கி...அவளது உச்சந்தலை, நெற்றி, கன்னங்களில் கதிர் தனது இதழால் ஒற்றியெடுத்தான்.

மறுகணம்...கஸ்தூரி தேம்பி அழுது விட்டாள்.

''என்னாச்சு கஸ்தூரி?''

அவள் மவுனமாய் உகுத்தாள்.

''பேசுடா...எதுக்கு அழறே டார்லிங்?''

''ப்ளீஸ் எ...என்னைத் தொடாதீங்க...''

''நிலவை பார்த்து வானம் சொன்னது

என்னைத் தொடாதே...

நிழலைப் பார்த்து பூமி சொன்னது...

என்னைத் தொடாதே...!'' அப்படின்னு கவிஞர் எழுதி வச்ச பாடல் தான் இப்போ நினைவுக்கு வருது...

''நீ என்னை மனசார விரும்பறே...அது எனக்கு நல்லாப் புரியுது... நமக்குள்ளே என்னத்துக்கு ஒளிவு மறைவு?''

''எதுவா இருந்தாலும் வெளிப்படையா பேசு கஸ்தூரி. உனக்கு என்ன பிராப்ளம்?''

''இப்போ நாம்ம கணவன்-மனைவி! ஈருடல் ஓருயிர் ஆகியாச்சு... சொல்லுடா...''

அவளது தோளை தொட்டு அசைத்தான். அவனிடமிருந்து விலகி, இரண்டடி தள்ளி முதுகுகாட்டி நின்றாள்.

''பதில் சொல்லு கஸ்தூரி! நான் ஏன் உன்னைத் தொடக்கூடாது? எனக்கு ரீஸன் தெரியணும்...''

''உனக்கு விருப்பமில்லையா? இல்ல... உடம் சரியில்லையா?''

''எனக்கு பிடிக்கலை...''

''பிடிக்கலைன்னா? எது பிடிக்கலை?''

''....''

அவள் அமைதி காத்தாள்.

''என்னையே பிடிக்கலையா?''

''நான் அப்படி சொல்லல...''

''பின்னே? நான் எப்படி இதை எடுத்துக்கிறதாம்? நீ என் மனைவிடா...''

''அதுக்குரிய தகுதி எனக்கு இல்லைங்க...?''

உடைந்து போய் விசும்பினாள் கஸ்தூரி.

''அன்னிக்கும் நீ இப்படித்தான் பேசினே!''

எங்கப்பா உங்க வீட்டுக்கு வந்து பேசினதும் கன்வின்ஸ் ஆகி...கல்யாணத்துக்கு நீ சம்மதிச்சே... அப்பாடான்னு நிம்மதியா இருந்தேன். இன்னமும் நீ உள்ளுக்குள்ளே எதையோ புதைச்சுக்கிட்டு மருகிட்டு இருக்கே...

உன்னையும் வருத்திக்கிட்டு...என்னையும் வேதனைப்படுத்தறே... உனக்கு என்ன பிரச்சனைன்னு தெரிஞ்சாதானே நான் அதை தீர்க்க

முடியும்?''

''இது தீர்க்க முடியாத பிரச்சனை கதிர்...!''

அவளையும் அறியாமல் திரும்பி...அவனை பரிதாபமாய் ஏறிட்டாள்.

''பார்த்தீயா?...பார்த்தீயா?...உரிமையா 'கதிர்'ன்னு பேரை சொல்றே...உன் மனசுல நான் எப்பவோ வந்துட்டேன்னு இதிலிருந்தே தெரியுதா? சந்தோஷமா இருக்கு....''

''இந்த சந்தோஷமாவது எனக்கு கிடைச்சதே! சரி விஷயத்துக்கு வரலாம். தீர்க்க முடியாத பிரச்சனைன்னு இந்த உலகத்துல எதுவுமே இல்ல கஸ்தூரி... புரிஞ்சுக்கோ...! என்ன பிரச்சனைன்னு சொல்லு!''

''இது முடிஞ்சு போன ஒண்ணு... இதை யாராலும் மாத்த முடியாது கதிர்...!''

''அப்படின்னா...?''

''நடந்ததை மாத்த யாரால முடியும்? நடந்தது நடந்தது தானே?''

''புதிர் போட்டே நீ பேசிகிட்டிருக்கே... என்ன நடந்ததுன்னு தெளிவா சொல்லு கஸ்தூரி...!''

''நடந்ததை நினைச்சு... நான் வேதனையில அணு அணுவா துடிச்சுகிட்டிருக்கேன். நான் துடிக்கிறது போதாதா கதிர்? அது தெரிஞ்சு நீங்களும் வருத்தப்படணுமா?''

''இந்த விஷயம் தெரிஞ்சா... நீங்க என்னை வெறுத்துடுவீங்க கதிர்...! தூள்தூளா நீங்க நொறுங்கிப் போவீங்க...''

தன் மனதுக்குள் பேசிக்கொண்டாள் கஸ்தூரி.

''சொல்லுடா...இப்ப தான் ஓரளவுக்கு பேசறே... முழுசா கொட்டித் தீர்த்திடு...''

''முழுசா தெரிஞ்சா...அந்த நிமிஷமே என் மேல நீங்க வச்சிருக்கிற காதல்... கானல் நீராயிடும் கதிர்...!''

மறுபடியும் தனக்குள் புலம்பினாள்.

நீர்த்திரையிட்ட விழிகளுடன் அவனை ஏறிட்டாள்.

''மனசு விட்டு பேசிட்டா...எப்பேர்ப்பட்ட பிரச்சனைக்கும் ஒரு தீர்வு கிடைச்சுடும்னு பெரியவங்க சொல்வாங்க... ஓபனா நீ சொல்லிட்டா வேதனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வச்சுடலாம்னு உள்ளூர ஒரு பட்சி சொல்லுது...! கமான் கஸ்தூரி....!''

''வே....வேண்டாம்ங்க... இதுக்கு மேல என்னைக் கம்பெல் பண்ணாதீங்க... நா...நான் சுக்குநூறா நொறுங்கிட்டிருக்கேன்...''

''கஸ்தூரி! நா சொல்றதைக் கேளும்மா....''

அவளது தளிர்க்கரத்தை உரிமையாய் பற்றினான்.

''ப்ளீஸ்... அதை சொல்றதுக்கு எனக்கு தெம்பில்ல...கதிர்...! என்னை புரிஞ்சக்கோங்க கதிர்...!''

நா தழுதழுக்கப் பேசிய கஸ்தூரியின் பொன்மேனி...புயலில் அகப் பட்ட பூங்கொடியாய் நடு நடுங்கியது.

மறுகணம்...கண்கள் சொருக மயங்கி கவிழ்ந்தாள். சமயோசிதமாய் அவளை தாங்கி பிடித்துக்கொண்டான் கதிர்.

பேச்சு மூச்சு இல்லாமல்... கிடந்தவளைத் தூக்கி தன் தோளின் மீது போட்டுக்கொண்டு...கட்டிலை நோக்கி நடந்தான்.

கட்டிலில் அவளை ஒரு பூப்போல் கிடத்தினான்.

மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த கண்ணாடி ஜக்கை எடுத்துக் கொண்டு வந்து...அவளது முகத்தில் தெளித்தான்.

சில கணங்கள் கழித்து...அலங்க மலங்க கண் விழித்த கஸ்தூரி...அ வனை அண்ணாந்து பார்த்துவிட்டு கண் கலங்கினாள்.

ஆதுரமாய் அவளது முகத்திலிருந்த தண்ணீரை துடைத்து விட்ட படி கதிர்... அவளது தலைமாட்டில் அமர்ந்தான்.

''வேண்டாம் டார்லிங்! நீ எதுவும் சொல்ல வேணாம்... நான் இனிமே உன்னை 'கம்பெல்' பண்ண மாட்டேன். எத்தனை வருஷங் கள் ஆனாலும் நான் காத்திருப்பேன். எனக்கு நம்பிக்கை இருக்கு

இந்தப் பிரச்சினை தீரத்தான் போகுது. அன்றில் பறவைகள் மாதிரி இணை பிரியாம சந்தோஷமா நாம்ப வாழத்தான் போறோம்...''

குரலில் உறுதி தொனிக்கப் பேசியவனை... இமை கொட்டாமல் பார்த்தவள் உடைந்து போய்... அவனது கரத்தைப் பற்றிக் கொண் டாள். ஆறுதலாய் அவளது புஜத்தில் தட்டிக் கொடுத்துவிட்டு...

''ரிலாக்ஸ்டா... கண்ணை மூடித் தூங்கு. நீ ரொம்பவும் வீக்கா இருக்கே... எல்லாத்தையும் மறந்துட்டு நிம்மதியா தூங்கு.... '' என்று முறுவலித்தான்.

பளிச்சென்று வெளிச்சத்தைப் பிரசவித்த லைட்டை அணைத்து விட்டு.. விடி விளக்கைப் போட்டான்... கஸ்தூரிக்கு போர்த்தி விட்டு ''குட்நைட்'' என்று முணுமுணுத்துவிட்டு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டான்.

அரை மணி நேரம் கழித்து... குறட்டையொலி எழுப்பி தூங்கிப் போய் விட்டான்.

கஸ்தூரி அவன் முதுகையை வெறித்துப் பார்த்தாள். எனக்கு நம்பிக்கை இல்லீங்க... கால முச்சூடும் இந்தக் குற்ற உணர்வு என்னை

செல்லாக அரிச்சுட்டுத்தான் இருக்கப் போகுது....நானும் அதை நெனச்சுப் புழுங்கி.. தாமரை இலை நீர்த்துளி போல.... உங்க கூட இணைய முடியாம எட்டியே தான் இருக்கப் போறேன்....

நாம்ப எப்படி அன்றில் பறவைகள் மாதிரி சந்தோஷமா வாழ முடியும்? எனக்கு கடுகளவு கூட நம்பிக்கை இல்லை கதிர்! என்னை.. மன்னிச்சுடுங்க.....

மீண்டும் தனக்குத்தானே பேசிக் கொண்டாள்.

‘என்னால உங்க வாழ்க்கையும் சூனியமாகிப் போச்சே?’

கதிரைப் பார்த்தபடி கண்ணீர் சிந்தினாள் கஸ்தூரி.



## 18

பச்சிளம் குழந்தையின் முகம்... சதா அவளது மனக் கண்ணில் வந்து வந்து போனது.

பெற்ற மனம்.... குழந்தையைப் பாராமல்.. பரிதவித்து துடித்தது.

ஒரே ஒரு தடவையாவது பாப்பாவைப் பார்த்து ஆரத் தழுவி கன்னத்தில் முத்தமிட்டு உச்சி முகர வேண்டும் போலிருந்தது. கணவனைப் பற்றிய கவலை ஒரு பக்கம் குழந்தையைப் பற்றி கவலை ஒரு பக்கம்..... அவளை மாறி மாறி வதைத்தன.

பிறந்த வீட்டிற்கும், சதாசிவத்தின் உறவினர்கள் வீட்டிற்கும் புதுமணத் தம்பதிகள் விருந்துக்கு சென்று வந்தனர்.

‘ராமலிங்கம் ஐயா நெருங்கிய உறவினர் தானே?’ அவர் தனது வீட்டிற்கு விருந்துக்கு அழைத்தால்.... நன்றாக இருக்குமே? குழந்தையை கண்ணாரப் பார்த்து விடலாமே? தூரத்திலிருந்து பார்த்தால் கூட போதுமே....!

உள்ளூர ஏங்கித் தவித்தாள்.

கண்டமனூர், அம்மா கெஜம், மயிலாடும் பாறை, போடி மெட்டு, குமுளி, மூணாறு, தேவிகுளம், கம்பம், தேனி, தேவதானப்பட்டி... இன்னும் பல இடங்களிலிருந்து தங்களது எஸ்டேட்களுக்கு... காரில் அவளை அழைத்துக் கொண்டு போனான்.

ரம்யமான அழகான பிரதேசங்களை சுற்றிக் காட்டினான். குழந்தையாய் குதூகலித்துப் போனாள் கஸ்தூரி. ‘‘ஷாலைப் போர்த்திக் கோடா... உடம்புக்கு ஒத்துக்காம போயிடும்...’’ என்று வற்புறுத்தி

அவளுக்குப் போர்த்தி விட்டு அக்கறையாய் கரிசனமாய் இருந்தான்.

அவளது தோளில் கைபோட்டு அரவணைத்தபடி நேசமாய் அவன் நடந்து கொள்ளும் விதம்.. கஸ்தூரிக்கு இதம் அளித்தது. தூண்டித் துருவி... அவளை எதுவும் கேட்கவும் இல்லை... இரவில் தனிமை யில்.... சர்வ ஜாக்கிரதையாய் நாகரீகமாய் ஒதுங்கியே இருந்தான்.

நாசூக்காய்... பெருந்தன்மையை துளி கூட முகம் சுளிக்காமல் அவன் இருந்ததைப் பார்த்துவிட்டு... நாளுக்கு நாள் கஸ்தூரிக்கு வேதனை தான் அதிகரித்தது.

மகாராணி போன்ற வாழ்வு கிடைத்தும்.. உள்ளூர அழுது அரற்றிக் கொண்டு தான் இருந்தாள்...

தங்களது நிறுவனங்களுக்கும் அவளை அவ்வப்போது அழைத்துச் சென்றான்.

ஒன்றரை மாதம் கடந்திருக்கும்.

அவள் பங்களாவில் இருக்கும் போதெல்லாம்..... தவறாமல் பூஜை அறையில் விளக்கேற்றி விடுவாள். கற்பூர ஆரத்தி காட்டி முடிப்பதற் குள்..... சதாசிவம் வந்து எதிரில் நின்று விடுவார்.

இன்றும் அப்படித்தான் வந்தார்.... ஆரத்தியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு அவளைக் கூர்ந்து பார்த்தார்.

அவரது பார்வையின் தீட்சணியத்தைத் தாங்க முடியாமல்.... தனது விழிகளைத் தழைத்தாள் கஸ்தூரி.

''நேத்து நைட்டுல... கதிர் ரொம்ப லேட்டா வீட்டுக்கு வந்தான் போலிருக்கே.... அவன் வந்தப்போ மணி என்ன இருக்கும்?''

''ரெண்டு மணி ஐயா!''

''போகும் போது உன்கிட்ட சொல்லிட்டுப் போனானா இல் லியா?''

''பிரண்ட்ஸ் கூட ஒரு கெட்டு கெதர் இருக்கிறதால... வர்றதுக்கு லேட்டாகும். எனக்காக காத்திருக்காம நீ சாப்பிட்டுட்டு படுத்துக் கோன்னு சொன்னாரு....''

''சரி தான்... ராத்திரி திரும்பி வந்தப்போ அவனோட நிலைமையை நீ கவனிச்சியா? குடிச்சுட்டு போதையில வந்தான் தெரியுமா?''

அவளும் இரவில் கொட்டக்கொட்ட விழித்தபடி தானே இருந் தாள்.

அவன் தள்ளாட்டமாய் நடந்து வந்ததையும்... கட்டிலில் வந்து படுத்ததும்... நாசிக்குப் பிடிக்காத ஒரு வாடை அவனிடமிருந்து வரு வதையும்... அவள் கவனிக்கத் தவறவில்லையே....?

'ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்பதற்கு என்ன உரிமை இருக் கிறது.. இந்த நிலைமைக்கு நான் தானே காரணம்' என்று ஊமையாய் உள்ளுக்குள் அழுது கொண்டிருந்தாளே?

'அதை ஐயாவிடம் எப்படி சொல்வதாம்?'

திருதிருவென்று அவள் விழித்தாள்.

''அவன் பாரின்லே படிச்சப்போ கூட... இந்தக் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகலை கஸ்தூரி!

புதுசா இந்தப் பழக்கம் வந்திருக்கு... உள்ளுக்குள்ளே அவனுக்கு ஏதோவொரு கவலை.... கவலையை மறக்கத்தான் அவன் குடிச்சி ருக்கான்னு நான் புரிஞ்சுக்கிட்டேன். நேத்து அவனை உட்காரவச்சு... கிளறிப் பார்த்தேன். போதையில... எல்லாத்தையும் உளறிட்டான். குடி.. குடியைத் கெடுக்கும்னு உனக்கே தெரியுமே? இதோ... இப்பக் கூட.. தூங்கிட்டிருந்தவனை எழுப்பி விட்டு... குளிச்சுட்டு... பிரஷ்ஷா வரச் சொல்லியிருக்கேன்.

அவன் வரட்டும்... உங்க ரெண்டு பேத்தையும் உட்கார்த்தி வச்சுக் கிட்டு பேசிடலாம்...

இப்படியே விட்டா... குடும்பம் அலங்கோலமாயிடும். ஆரம் பத்துலேயே கிள்ளி எறியறது சுலபம். குடிபோதைக்கு அடிமையா யிட்டா.... அதிலிருந்து மீளறது ரொம்பக் கஷ்டம்....! வாம்மா.... அப் படி வந்து உட்காரு...!''

என்றபடி நடந்து போய் சோபாவில் அமர்ந்து கொண்டு நாளிதழை எடுத்துப் புரட்டினார் சதாசிவம்.

கஸ்தூரிக்கு டென்ஷனில் குப்பென்று வியர்த்துப் போனது. அவ ரது வார்த்தையைத் தட்ட முடியாமல்..... அவரெதிரில் போய் அமர்ந் தாள்.

சில கணங்கள்... பல யுகங்களாய் ஆனதைப் போன்ற பிரமையை அவளுள் உண்டு பண்ணின. குற்றவாளி கூண்டிற்குள் நின்று கொண் டிருப்பதைப் போன்றதொரு நூதன உணர்வில்.. தவித்துப் போனாள்.

ஏதோ பெரிய தவறு இழைத்து விட்டவனைப் போன்ற முகபாவ னையுடன் தயங்கியபடி.... அப்பாவை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி வந்து அமர்ந்தான் கதிர்.

கதிரின் விழிகளும் கஸ்தூரியின் விழிகளும் தர்ம சங்கடத்துடன் ஒரு கணம் மோதிக் கொண்டன.

சமையல்காரர், வேலைக்காரர், தோட்டக்காரர் என்று அனைவ ரையுமே சதாசிவம் வெளியில் அனுப்பி வைத்துவிட்டார் போலும்.

பங்களாவில் அப்படியொரு நிசப்தம் நிலவியது.

கஸ்தூரியின் இதயத்துடிப்பு திக் திக் என்று முரசொலியாய் அதிர்ந்தது.

''கதிர் என்கிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டான் என்ன பிரச்சினை உனக்கு?''

சதாசிவம் கேள்விக் கணையைத் தொடுத்தார்.

சூத்ரதாரியே இவர் தானே? தெரியாதது போல் கேள்வி கேட்கிறாரே?

பயத்தில் அவளது நா உலர்ந்தது.

---



## 19

'இனிமேலும் மவுனமாய் இருப்பதில் பிரயோஜனம் இல்லை... சொல்லி விட வேண்டியது தான்... வேறு வழியில்லை....' மனதுக்குள் நினைத்தபடி.. துணிவைத் திரட்டிக் கொண்டு பெரியவரைப் பார்த்தாள்.

''என்னால.. இவரோட மனைவியா இயல்பா வாழ முடியலை... காரணம்.. மனசாட்சி என்னைத் தடுக்குது... இன்னொருத்தருடைய ஜீவ அணு என்னோட கருப்பையில் செலுத்தப்பட்டு... நான் கர்ப்பமாகி ஒரு குழந்தையைப் பெத்தெடுத்தேன்கிறது... உங்களுக்கே தெரியுமே? உங்க வார்த்தைத் தட்ட முடியாமத்தானே... நான் அதுக்கு சம்மதிச்சேன்....''

நா தழு தழுக்கப் பேசினாள் கஸ்தூரி.

''எ.... என்னப்பா இது?'' திகைத்துப் போய் கேட்டான் கதிர்.

''சொல்றேன்... உனக்கு என்ன நடந்ததுன்னு தெரியாதுல்ல?'' விலாவாரியாக அனைத்தையும் விளக்கிச் சொன்னார் சதாசிவம்.

தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தாள் கஸ்தூரி.

ஸ்தம்பித்துப் போய்.... அவளைத் திரும்பிப் பார்த்தான் கதிர்.

''கதிர்! நான் இப்போ உங்க ரெண்டு பேத்துக்குமே தெரியாத விஷயத்தைச் சொல்றேன். அதுக்கு முன்னால இன்னொரு தகவல் சொல்றேன்... கேட்டுக்கங்க...

சுமதியோட இதயம் ரொம்ப வீக்கா இருந்ததுல்ல? நேத்து அவ

ளுக்கு மேஸிவ் அட்டாக் வந்து.. ஹாஸ்பிடல்லே சேர்த்திருக்காங்க.... பிழைக்கிறது கஷ்டம்னு சொல்றாங்க.... ராமலிங்கம் ரொம்ப நொந்து போயிட்டான். மருமக சுமதிக்கு ஏதாச்சும் ஆயிடுச்சுன்னா... நான் குழந்தையோட உன் வீட்டுக்கே வந்துடறேன்னு சொன்னான்.

வயசாயிடுச்சு... அவனால குழந்தையை எத்தன நாளைக்குப் பார்த்துக்க முடியும்? சொத்து முழுவதையும் குழந்தை பேருக்கு எழு திவச்சு... கதிரை கார்டியனா போடணும். அதுக்கு வக்கீல் கிட்டே சொல்லி உயில் எழுத ஏற்பாடு பண்ணச் சொல்லிட்டான்.

ஸோ... கூடிய விரைவில் குழந்தையோட ராமலிங்கம் இங்க வந்து டுவான்... இதைப் பத்தி நீ என்ன சொல்றே கதிர்?''

''இதுலே சொல்றதுக்கு என்னப்பா இருக்கு? அந்தக் குழந்தையைப் பெத்தெடுத்தது கஸ்தூரி.... குழந்தைக்கு அப்பா என் நண்பன் ரவி யாச்சே? அதை என் குழந்தையாவே நெனச்சு வளர்க்கிறேன் அப்பா!''

''அது நிஜமாவே உன் குழந்தை தான் கதிர்! குழந்தைக்கு அப்பா ரவி இல்ல.. நீதான்...!''

''என்ன?''

கதிரும் கஸ்தூரியும் ஏககாலத்தில் திடுக்கிட்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''மூளைச் சாவு ஏற்பட்ட ரவி மூலமா.. வம்சத்துக்கு ஒரு குழந் தையை உருவாக்க நாங்க பிளான் பண்ணினோம். அவனோட உயிர ணுவை எடுப்பதற்கு முதலில் சம்மதிச்ச டாக்டர்... அதுக்கு அப்புறமா ரவியோட ஹெல்த் கண்டிஷன் மோசமா இருக்குன்னு கையை விரிச் சுட்டாரு.

இந்த விஷயத்தை என்னைத் தனியா கூப்பிட்டு டாக்டர் சொன் னாரு. இது தெரிஞ்சா ராமலிங்கம் ரொம்ப உடைஞ்சு போயிடுவா னேன்னு நான் பயந்தேன்.

ரவிக்கு ரத்தம் தேவைப்பட்டதுன்னு... நீ ரத்ததானம் கொடுக்க அங்க வந்தியே? ஞாபகம் இருக்கா கதிர்?''

''ஆமாம்பா... பிளட் டோனேட் பண்ணினேன். நீங்க எதைப்பத் தியும் என்கிட்டே சொல்லவே இல்லியேப்பா?''

''உனக்கும் ராமலிங்கத்துக்கும் இந்த விஷயம் தெரிய வேணாம்னு ரகசியமா வச்சிருந்தேன். டாக்டர் கிட்டே தனியா பேசி அவரை சம்மதிக்க வச்சேன். நிறைய ரத்த தானம் செஞ்சதால நீ டயர்டா இருந்தே... உன் உடம்பு சோர்வை நீக்கவும் ஊக்கமளிக்கவும் இந்த

ஊசியைப் போடறோம்னு ஊசி போட்டாங்களே? ஞாபகமிருக்கா?''

''ஆமா....! ஊசி போட்டதும் தூக்கம் இழுத்துட்டுப் போயிடுச்சு....''

''அது தூக்கமில்லை... மயக்கம்....! நீ மயங்கி இருக்கிறப்போ.. உன்கிட்டேயிருந்து எடுத்து வச்ச உயிரணு மூலமா தான் கஸ்தூரி கர்ப்பமானா... ஸோ.... அது சாட்சாத் உங்க ரெண்டு பேத்துக்கும் பிறந்த குழந்தை தான்.....''

''நி... நிஜமாத்தான் சொல்றீங்களா ஐயா?''

''சத்தியம் கஸ்தூரி! என்னோட அம்பிகை மேல சத்தியம்.. போதுமா?''

''ஐயா... என்னோட வயித்துல பாலை வார்த்துட்டீங்க...!''

''இந்த ரகசியம்... நம்ம மூணு பேத்தோட இருக்கட்டும். ராமலிங்கம் நம்ம கூட தான் இருக்கப் போறான். அவனைப் பொறுத்தவரை இந்த உலகத்தைப் பொறுத்தவரை குழந்தை அவனோட வம்சத்தைச் சேர்ந்தது....

இந்த திருப்தியிலாவது அவன் கடைசி காலத்துல நிம்மதியா இருந்துட்டுப் போகட்டும்....

சரி... இப்போ உண்மை தெரிஞ்சு... தெளிவாயிட்டீங்கல்ல? கதிர் இனிமே நீ தண்ணியைத் தொட மாட்டேயில்ல....?''

''சேச்சே.... சாரிப்பா....!''

சங்கோஜமாய் தலையை சொரிந்தான் கதிர்.

''போங்க.. ரெண்டு பேரும் மனசுவிட்டுப் பேசுங்க.... இந்த ஊர், உலகறிய நம்ம வம்சத்துக்கு ஒரு வாரிசைப் பெத்துக்குடுங்க....''

சிரித்தபடி வெளியேறிவிட்டார் சதாசிவம். தனியறைக்கு இருவரும் வந்தனர். மடைதிறந்த வெள்ளமாய் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது கஸ்தூரிக்கு...!

''மக்கு! உண்மையைச் சொன்னா... நா உன்னை வெறுத்து

**கண்மணி சந்தா**

**கண்மணி**

**உங்கள் இல்லம் தேடி வர.**

**1 ஆண்டு சந்தா : ரு 600**

**6 மாத சந்தா : ரு 300**

சந்தா அனுப்ப

வேண்டிய முகவரி:

**நிர்வாகி**

**தேவியின் கண்மணி,**

**246, அண்ணாசாலை,**

**சென்னை - 600 006**

டுட்வேனா? நீ என்னோட கஸ்தூரி மான்.... கவரிமான்....!

நீ கவரிமான் ஜாதியைச் சேர்ந்தவ... ஒரு குழந்தையை சுமந்திருக்கே.... அதெப்படி நீ கறைபட்டவள் மாதிரி குற்றவுணர்விலே புழுங்கினே...? அதுவும் மெத்தப்படிச்ச பொண்ணு...! நிஜமாவே அந் தக் குழந்தை ரவிக்கு பிறந்திருந்தாலும் உன்னையும் குழந்தையையும் என்னால வெறுக்க முடியாது.

பழம் நழுவிப் பால்லே விழுந்த மாதிரி.. அந்தக் குழந்தைக்கு அப்பா நான் தான்னு தெரிஞ்சதும்... புளகாங்கிதம் அடைஞ்சுட்டேன். என் உயிரிலே உணர்வில் கலந்தவ நீ... என் கஸ்தூரி மான்...! ஐ லவ் யூ ஸோ மச் டார்லிங்!''

அவளை ஆரத் தழுவிக் கொண்டான் கதிர்.

''ஐ டூ லவ் யூ கதிர்!'' கஸ்தூரியின் தளிர்க்கரங்கள் அவன் கழுத்தில் மாலையாயின.

''கல்யாணம் ஆகிறதுக்கு முன்னாலேயே.... நாம அப்பா அம்மா ஆயிட்டோமில்ல?'' என்ற கதிர் அவளது செவியில் ஏதோ கிசுகிசுத்து விட்டு... செவி மடலில் மென்மையாய் இதழ் பதிக்க.... 'களுக்' என்று சிரித்தாள் கஸ்தூரி...

## முற்றும்

## பட்டுச்சேலை

### பரிசு பெற்றவர்கள்

பதில் : திருவண்ணாமலை **30- 10- 2013**

1. **மு. ஜெய்சிகா, திருச்சி** - 620 004.
2. **எம். ரித்திகாஜி, கிருஷ்ணகிரி** - 635 126.
3. **கே. விஜயலட்சுமி, சென்னை** - 600 061.

# சுய மருத்துவ குறிப்பு



**வெள்ளைப் பூண்டினால் தீரும் வியாதிகள் :-**

தலை வலி போகும், இருமல் தொல்லையும், வாயுத் தொல்லையும் இருக்காது. வாத பிணிகள் போகும் வாய்பூட்டு நீங்கும். காதுவலி போகும், வயிறு உப்புசம் நீங்கும், இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும், கக்குவான் பிணி போகும் மார்பு நோய் அகலும், பருவை நீக்கும், கட்டியை உடைக்கும், இரத்தக் கொதிப்பு அடங்கும், உள் நர வளர்ச்சியை தடுக்கும், இடுப்பு வலியை போக்கும், காதில் சிழ் நிற்கும், கர்ப்பமுண்டாகும் பால் சுரப்பு ஏற்படும் .

**-ஆர். கௌரி, வேலூர்.**

ஜீரண சக்தி பெருக வேண்டும் என்றால் புதினாவை பச்சையாக மென்று சாப்பிட வேண்டும் புதினா இரதத்தத்தை சுத்தப்படுத்தும் ஆற்றல் கொண்டது.

வாழைப் பூவை சமைத்து சாப்பிட பெண்களுக்கு ஏற்படும் வெட்டை நோய் குணமாகும். இங்குமம் பூவை தாய்ப்பாலில் இட்டு அரைத்து நெற்றியில் தடவினால் ஒற்றை வலி குணமாகும். கிராம்பை வறுத்து வாயில் போட்டு மென்றால் இருமல் குணமாகும்

**-இராம. பார்த்திபன், வயலூர்.**







13 புள்ளி 7-ல் நிறுத்தவும்
(இடைப்புள்ளி)
**-செ. கலைவாணி,**
**மேட்டூர் அணை.**



15 புள்ளி 1 முடிய
(நேர்புள்ளி)
**-பிலிப்ஸ் சகாயமேரி,**
**பெங்களூரு.**



14 புள்ளி 2 வரிசை,
2-ல் நிறுத்தவும்
(நேர்புள்ளி)
**-டி. அனுசுயாதேவி,**
**சென்னை.**



21 புள்ளி 1 முடிய
(நேர்புள்ளி)
**-ரா. ராஜேஸ்வரி,
கோவை.**

# கோலங்கள்



17 புள்ளி 17 வரிசை
(நேர்புள்ளி)
**-எம். துர்கா,
நவி மும்பை.**

# சமையல்

## சுர்மா லட்டு



**தேவையான பொருட்கள்:**

கோதுமை மாவு- 2 கப், சர்க்கரைப் பொடி- 150 கிராம், நெய்- 1/2 கப், கொப்பரைத்துருவல்- 1/2 கப், பால்- சிறிது, சிறியதாக நறுக்கிய முந்திரி துண்டுகள்- 2 ஸ்பூன், ஏலப்பொடி- 1/2 ஸ்பூன், எண்ணெய்- தேவையான அளவு.

**செய்முறை:**

கால் கப் நெய்யில் கோதுமை மாவை போட்டு சிறிது பால் சேர்த்து கெட்டியாகப் பிசையவும். மாவை சீடை போல் உருட்டி, விரலால் அழுத்தவும். எண்ணெய்யை காய வைத்து இந்த சீடைகளை கரகரப்பாக பொரித்து ஆறியபின் மிக்ஸியில் பொடிக்கவும். மீதியுள்ள நெய்யை காய வைத்து, அடுப்பை, சிறுதீயில் வைத்து அரைத்த பொடியை 10 நிமிடங்கள் வறுக்கவும். முந்திரி துண்டுகளையும் நெய்யில் வறுக்கவும்.

ஒரு பெரியத் தட்டில் சீடைப் பொடி, வறுத்த முந்திரி, லைப்பொடி, சர்க்கரைப்பொடி, தேங்காய்த்துருவல் எல்லாவற்றையும் போட்டு கலந்து சிறிது பால் தெளித்து உருண்டைகளாக பிடிக்கவும்.

ஆரோக்கியமான இந்த லட்டு குழந்தைகளுக்கு பிடிக்கும்.

**-லட்சுமி சந்தானம், திருச்சி.**



## பொட்டுக்கடலை அவல் லட்டு

**தேவையான பொருட்கள்:**

அவல்- 1 கப், பொட்டுக்கடலை- 1/2 கப், நெய்- 50 கிராம், ஏலக்காய் பொடி- 1 ஸ்பூன், சர்க்கரை- 1/2 கப், பால்- 1/2 கப்,

**செய்முறை:**

பொட்டுக்கடலையை மிக்ஸியில் பொடித்து வைக்கவும். அவலையும் சர்க்கரையும் சேர்த்து பொடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு பொட்டுக்கடலை மாவு ஏலக்காய் பொடியையும் சேக்கவும். நெய்யை சூடாக்கி கலவையில் விட்டு அனைத்தையும் ஒன்றாக கலந்து உருண்டை பிடிக்கவும். தேவைப்பட்டால் பால் சேர்த்தும் உருண்டை பிடிக்கலாம். பொட்டுக்கடலை அவல் லட்டு சாப்பிட ருசியாக இருக்கும்.

**-வே.புனிதா வேளாங்கண்ணி, பரேலி.**

---



# கசகசா உருண்டை

**தேவையான பொருட்கள்:**

கச கசா- 200 கிராம், வெல்லம்- 200 கிராம், முந்திரிப்பருப்பு- 25 கிராம், ஏலப்பொடி- 1/2 ஸ்பூன், நெய்- 20 கிராம்.

**செய்முறை:**

கசகசாவை சுத்தம் செய்து வாணலியில் அரை ஸ்பூன் நெய்விட்டு சிவக்க வறுத்துக் கொள்ளவும். அடிகனமான பாத்திரத்தில் வெல்லத்தை நொறுக்கி போட்டு 100 மில்லி தீண்ணீரை விட்டு கரைத்து வடிகட்டி அடுப்பில் வைக்கவும். கம்பிப் பாகாக வந்ததும் வறுத்த கசகசாவைப் போட்டு கிளறவும். முந்திரியை வறுத்து சேர்க்கவும்.

ஏலப்பொடி சேர்த்து அடிப்பிடிக்காமல் கிளறி இறக்கவும். கை பொறுக்கும் அளவுக்கு சூடு இருக்கும் போதே மீதமுள்ள நெய்யையும் ஊற்றி உருண்டை பிடிக்கவும். இதை பல நாள் வைத்து சாப்பிடலாம்.

**-ஆர்.பிரகாசம், கோவிலூர்.**

Deviyin KANMANI-Tamil Weekly 20-11-2013 Regd.No. TN/CH(C)/360/12-14 Registered With Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.



# என்னைப் பற்றி

வாசக நெஞ்சங்களுக்கு,

வணக்கம்! ஒரு திரைப்படத்திற்கு வசனம் எழுதும் வாய்ப்பு என்னைத்தேடி வந்தது. 'கண்மணி' தான் என்னை ஒரு நாவலாசிரியராக அறிமுகப்படுத்தியது. இன்று நான் ஒரு வசனகர்த்தாவாக வளர்ந்தமைக்கு 'கண்மணி' யே காரணம்..! கண்மணிக்கு கோடானு கோடி நன்றி....!

'என்னுயிரில் கலந்தாய்' நாவலின் நாயகி கஸ்தூரி சந்தர்ப்ப வசத்தால் ஒரு குழந்தைக்குதாயாகிறாள். கணவனுடன் மனம் ஒன்றி வாழ இயலாமல் தாமரை மேல் நீர்த்துளியாய் தவிக்கிறாள். அந்தக் குழந்தைக்கு அப்பா யார்? கஸ்தூரியின் வாழ்வு மலர்ந்ததா? இல்லையா? என்பதை வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.

அன்புடன் உங்கள்

**லட்சுமி பிரபா** எம்.ஏ.,பி.எட்